Registered as a Newspaper

பக்கங்கள் – 32
விலை – ரூபா 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 287

ஞாயிற்றுக்கிழமை
08 செப்ரெம்பர் 2024

ஆவணி 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



“இஞ்சால சுக்காட்டிப் போட்டு வேற பக்கத்தால அபகரிக்கிறது அவைக்கு வழக்கம் தானே”

# மாகாணசபைகளுக்கு அபிவிருத்தி அதிகாரம்



## ஜனாதிபதி ரணில் வாக்குறுதி

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 8**

**நாட்டின் அனைத்து மாகாணசபைகளுக்கும் அபிவிருத்திக்கான அதிகாரம் வழங்கப் படும்- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

31

தேர்தல் பரபரப்புக்குள்

## தையிட்டி விகாரையை அபகரிக்க வரைபடம்!

யாழ்ப்பாணம், செப். 8
ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பரபரப்புகள் தீவிர மாகியிருக்கும் சமநேரத்தில், யாழ்ப்பாணம் தையிட்டி விகாரை அமைந்துள்ள பகுதியை முழுமையாக சுவீகரிக்கும் நோக்கில் இரகசியமான முறையில் நில அளவீடு செய்யப்பட்டு வரைபடமும் சமர்ப்பிக்கப்பட் டுள்ளதாகத் தெரியவருகின்றது.

30

ரூபாவைப் பலப்படுத்தி

## வாழ்க்கைச் செலவை மேலும் குறைப்பேன்!

ஜனாதிபதி ரணில் வாக்குறுதி

யாழ்ப்பாணம், செப். 8
ரூபாவின் பெறுமதியைப் பலப்படுத்தி அடுத்த வருடம் வாழ்க்கைச் செலவை மேலும் குறைப்பேன். இதற்கான அத்தனை நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரி

31

பொலிஸ் உத்தியோகத்தரை

## நீதிமன்றில் அவதூறாக பேசியவருக்குச் சிறை!

யாழ்ப்பாணம், செப். 8
பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை நீதிமன்றத்துக்குள் அவதூறாகப் பேசிய சந்தேகநபருக்கு இரண்டு மாதங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
பருத்தித்துறை நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை அழைக்கப்பட்ட வழக்கொன்றின்போது, சந்தேக நபர்கள் நால்வர் கூண்டில் ஏறினர். அவர்களில்

31

## ரணிலுக்குக் கொடிபிடித்த அமைச்சர் டக்ளஸ்!

யாழ்ப்பாணம், செப். 8
ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் ரணிலை ஆதரிக்க வேண்டும் என்று வலியுறுத்தி அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, நேற்றையதினம் தீவிர பரப்புரையில்

30

## வடக்கு மக்களிடம் அநுர மன்னிப்புக் கேட்கவேண்டும்

யாழ்ப்பாணம், செப். 8
வாக்குகளைப் பெறுவதற்காக வடக்கு மக்களை அச்சுறுத்திய அநுரகுமார திஸா நாயக்க அந்த மக்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்ததாவது:-
“வடக்கு மக்களை அநுரகுமார அச்சுறுத் துகிறார். மாற்றத்திற்காக தெற்கு

31

## இந்திய மீனவர்கள் 14 பேர் கைது

யாழ்ப்பாணம், செப். 8
யாழ்ப்பாணம் - நெடுந் தீவுக் கடற்பரப்புக்குள் அத்துமீறி

30

## கிருமித்தொற்றால் பெண்ணொருவர் பலி

யாழ்ப்பாணம், செப். 8
கண்ணாடித் துண்டு வெட்டியதற்கு உரிய முறையில் சிகிச்சை பெறாத குடும்பப் பெண் ஒருவர் கிருமித் தொற் றும், அதன் காரணமாக ஏற்பட்ட மாரடைப்பாலும் உயிரி ழந்துள்ளார்.
யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைச் சேர்ந்த தயாரூபன் உதயகுமாரி (வயது-50) என்ற பெண்ணே உயிரிழந்த வராவார்.
ஒரு மாதத்துக்கு முன்பாக, அவருடைய உடலில் கண் ணாடித் துண்டு வெட்டியதாகவும் அதற்கு உரிய முறையில் சிகிச்சை பெறாததால் கால் வீக்கம் ஏற்பட்டதாக

31

## மாற்றுத்திறனாளிகளுக்கு தனியானதோர் செயலணி

சஜித் தெரிவிப்பு



கொழும்பு, செப். 8
விசேட தேவையுடையவர்களின் நலன் களைக் கவனிப்பதற்காகவும், அவர் களின் வாழ்க்கைத்

31

## கிருசாந்திக்கு நேற்று செம்மணியில் அஞ்சலி



யாழ்ப்பாணம், செப். 8
இராணுவத்தால் படுகொலை செய் யப்பட்ட சுண்டுக்குளி மகளிர் கல் லூரி மாணவி குமாரசாமி கிரிசாந் தியின் நினைவேந்தல் நிகழ்வு. யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதி யில் நேற்று உணர்வு பூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

31

## வேலைநிறுத்தம் செய்யவேண்டிய தேவை எவருக்கும் இனியில்லை!

கல்வியமைச்சர் சுசில் வாக்குறுதி!



யாழ்ப்பாணம், செப். 8
இனி யாரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவேண்டிய தேவைகள் இல்லை. ஜனவரி மாதம் முதல் நாட்டில் ஊதிய உயர்வுகள் வாக் களித்தமைக்கு ஏற்ப நடைமுறையாகும் என்று கல்வி அமைச் சர் சுசில் தெரிவித்துள்ளார்.
அநுரகுமார ஆட்சிக்குவந்து நாடாளுமன்றத்தைக் கலைத் தால் ஊதிய உயர்வு என்ற கனவு கலையும் என்றும்

31

சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சீனாவின் பண்ணையில் 125 புதிய வைரஸ்கள்!



பீஜிங், செப். 8

சீனாவில் பல்வேறுபட்ட விலங்குப் பண்ணைகளில் 125க்கும் மேற்பட்ட புதிய வைரஸ் தொற்றுக்கள் கண்டறியப்பட்டுள்ளன என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

உலகெங்கும் பல்லாயிரக் கணக்கானோரின் உயிரிழப்புக்கும், பில்லியன் டொலர்கள் கணக்கான பொருளாதார இழப்புகளையும் ஏற்படுத்திய கொவிட் வைரஸ் சீனாவின் பண்ணைகளில் இருந்தே பரவியதாக பலரால் இன்றளவும் நம்பப்படும் நிலையில், தற்போது 125 வகையான புதிய வைரஸ்கள் சீனாவின் பல்வேறுபட்ட பண்ணைகளில் அவதானிக்கப்பட்டுள்ளமையானது பரபரப்பான விடயமாக மாறியுள்ளது.

இவ்வாறு கண்டறியப்பட்ட 125 புதிய வைரஸ்களில் 39 வகையான வைரஸ்கள் விலங்குகளில் இருந்து மனிதர்களுக்குப் பரவக்கூடிய ஆபத்துடையவை என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. மனிதர்களுக்குத் தொற்றக்கூடிய வைரஸ்கள் முயல்கள், குரங்குகள், நரிகள், ராக்கூன்கள், நாய்கள் போன்ற விலங்குகளிடையேதான் அவதானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சீனாவில் பறவைக் காய்ச்சலும் தீவிரமாகப் பரவி வருவதாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (ம)

## பாலியல் குற்றத்துக்காக பறிக்கப்பட்டது அமைச்சு

பிரேசிலியா, செப். 8

பிரேசிலின் மனித உரிமைகள் அமைச்சர் சில்வியோ அல்மெய்டா, பாலியல் குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டமையைத் தொடர்ந்து அதிரடியாக பதவி நீக்கப்பட்டுள்ளார். பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லுலாடா சில்வா இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ம)

## 20 கோடி இந்தியர்கள் சோம்பலான வாழ்க்கை

புதுடில்லி, செப். 8

இந்தியாவில் 20 கோடி மக்கள் சோம்பலான வாழ்க்கையை வாழ்கின்றனர் என்று ஆய்வு ஒன்றின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி என்பன பொதுமக்கள் மட்டத்தில் எவ்வளவுதூரம் வியாபித்துள்ளன. இவற்றை எத்தனை மக்கள் பின்பற்றிக் கொள்கின்றனர் என்றவாறாக நடத்தப்பட்ட ஆய்விலேயே, 20 கோடி இந்தியர்கள் சோம்பலான வாழ்க்கையே வாழ்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரா, உத்தர பிரதேசம், ஒடிசா மற்றும் தமிழகத்தைப் பிரதான பகுதிகளாகவும், இந்தியாவின் இதர இடங்களை துணைப் பகுதிகளாகவும் கொண்டு நடத்தப்பட்ட ஆய்விலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

சர்வதேச நியமங்களின்படி பார்க்கையில், 20 கோடி இந்தியர்கள் சோம்பலான வாழ்க்கை வாழ்கின்றனர். அதுவும் நகர்ப்புற பெண்கள் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சியில் ஈடுபடாமல் மிக மோசமான உடற்தகுதியுடன் காணப்படுகின்றனர். மாணவர்களிடமும் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி என்பனவற்றில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வம் குறைந்துள்ளது. உண்மையில் இது கற்றலையும் வெகுவாகப் பாதிக்கின்றது என்று ஆய்வை நடத்திய குழு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

## பாதிக்கப்பட்டோருக்கு காங்கிரஸ்தான் துணை

### பா.ஜ.க.வுக்கு பவன் கெரா பளார்

புதுடில்லி, செப். 8

பாதிக்கப்படுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்களுடன் காங்கிரஸ் துணைநிற்கும் என்று காங்கிரஸின் முக்கியஸ்தர்களில் ஒருவரான பவன் கெரா தெரிவித்துள்ளார்.




இந்தியாவில் மல்யுத்த வீரர்களும், வீராங்கனைகளும் தற்போது போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் போராட்டம், பா.ஜ.க.வுக்கு எதிரான காங்கிரஸின் சதி என்று பா.ஜ.க.வின் பிரமுகரான பிரிஜ் பூஷண் குற்றஞ்சாட்டியிருந்தார். இதையடுத்தே, பாதிக்கப்படுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்களுடன் காங்கிரஸ் துணைநிற்கும். ஆனால், பா.ஜ.க.வினர் குற்றவாளிகளுக்கு ஆதரவாக உள்ளனர் என்று பவன் கெரா பதிலடி கொடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுடனும், ஒடுக்கப்பட்டவர்களுடனும் காங்கிரஸ் துணைநிற்பதால்தான் ஏழைகளும், நலிந்தவர்களும் காங்கிரஸை நேசிக்கின்றனர். முதலாளிகளுக்கும், குற்றவாளிகளுக்கும், பிரமுகர்களின் குற்றங்களுக்கும் துணைபோவதால்தான் அவர்கள் பா.ஜ.க.வுடன் நிற்கின்றனர் என்றும் பவன் கெரா தெரிவித்துள்ளார்.

'எங்கள் மக்களுடன் நின்றதற்காக நாங்கள் ஒருபோதும் வருத்தப்பட மாட்டோம். மக்களுடனும், பாதிக்கப்பட்டவர்களுடனும் நிற்காவிட்டால் அரசியலில் இருந்து என்ன பயன்?' என்றும் கெரா கேள்வி எழுப்பியுள்ளார். (ம)

## உக்ரைனுக்கு ரொக்கெட்: கனடாவும் தாராள உதவி!



உக்ரைன் – ரஷ்யா இடையிலான போர் தீவிரம் பெற்றுள்ள நிலையில், 80,000க்கும் மேற்பட்ட ரொக்கெட்களை உக்ரைனுக்கு அனுப்பவுள்ளதாக கனடா அறிவித்துள்ளது.

உக்ரைனுக்கு கடந்த இரண்டு வாரங்களில் ஒரு தொகுதி இராணுவ உதவிகளை அமெரிக்காவும், பிரிட்டனும், பிரான்ஸும் வழங்கியுள்ள நிலையில், இதைத் தொடர்ந்தே கனடாவும் உக்ரைனுக்குத் தேவையான இராணுவ உதவிகளை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது. (ம)

## முடங்கிய எக்ஸ்!

சமூக வலைதளங்களில் முன்னணியில் இருக்கும் எக்ஸ் தளம் உலகம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் நேற்றையதினம் சிறிது நேரம் முடக்கமடைந்தது.

இதனை டவுன்டிடெக்டர் என்ற இணையதளம் அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்துள்ளது. (ம)

## இலங்கைக்கு தடை நீக்கம்

கொழும்பு, செப். 8

இலங்கைக்கு, 20 ஆண்டுகளுக்கும் மேலாக விதிக்கப்பட்டிருந்த விசா கட்டுப்பாடுகளை நீக்கவுள்ளதாக தன்சானியா அறிவித்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான உயர்மட்டப் பேச்சுக்களின் அடிப்படையிலேயே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)


## தமிழகத்தில் வெள்ள இடர்

சென்னை, செப். 8

ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுநிலை உருவாகியுள்ளதால், தமிழகத்தில் அடுத்த ஒருவாரத்துக்குக் கடும் மழையுடனான காலநிலை நிலவும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. கர்நாடகாவில் வெள்ளப் பேரிடரால் தீவிரமான அழிவுகள் ஏற்பட்டுள்ள நிலையில், தமிழகத்துக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை பரபரப்பான விடயமாக மாறியுள்ளது. (ம)

## தரையிறங்கியது ஸ்டார்லைனர்

வொஷிங்டன், செப். 8



போயிங் நிறுவனத்தின் ஸ்டார்லைனர் விண்கலம் நேற்று வெற்றிகரமாகத் தரையிறங்கியுள்ளது. தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, ஸ்டார்லைனரின் தரையிறக்கம் பிற்போடப்படடிருந்த நிலையில், நேற்றையதினம் மனிதர்கள் இல்லாமல் அந்த விண்கலம் பூமிக்குத் திரும்பியது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உரிமை காத்திடும் உறுமய

சுமார் 6.8 மில்லியன் குடும்பங்களுக்கு
காணி உரித்துடைமை

**4 வருடங்களுக்குள் குறைந்த வருமானம் பெறும் அரசுக்குச் சொந்தமான வீடுகளில் வசிப்போருக்கு அவ்வீடுகள் சொந்தமாகக் கையளிப்பு**

ஏற்கனவே பயன்பெறும் 4 இலட்சம் குடும்பங்கள்



**இவையனைத்தும்
ஜனாதிபதி ரணிலால் தான் கைகூடும்
கைகூடக் கைகோர்ப்போம்**

**ரணிலால் இயலும்**

රනිල් වික්‍රමසිංහ
ரணில் விக்ரமசிங்ஹ
**Ranil Wickremesinghe**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காடெல்லாம் வாசகம் ஊரெல்லாம் பேசும்

**விதுமிலன்**
*பண்ணை முகாமையாளர்*
*மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம்*
*ஒட்டுசுட்டான்.*

கறுவா இலங்கையை பிறப்பிடமாகக் கொண்டது. பொதுவாக இலங்கையின் மத்திய மலைநாட்டில் இது நன்கு வளரக்கூடியது. கண்டி, மாத்தளை, ஹப்புதலை போன்ற பகுதிகளிலும் சிங்கராஜ வனப் பகுதிகளிலும் கறுவா பயிர் செய்யப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தை பொறுத்தவரையில் சாதாரணமாக வீடுகளில் இது வளர்க்கப்படுகின்றது. வர்த்தக நோக்கம் இல்லாவிட்டாலும் வீட்டுத் தோட்டச் செய்கையாக இது பயிர் செய்யப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இந்தப் பயிர்ச்செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் அதிலிருந்து கறுவாப்பட்டை பெற்றுக் கொள்ளும் செயல்முறை ரீதியிலான பயிற்சி வகுப்புகளும் விவசாயிகளுக்கு நடைபெற்று வருகிறது.
இலங்கையில் எட்டு வகையான கறுவா இனங்கள் காணப்படுகின்றன. Cinnamomum zeylanicum Blume எனும் கறுவா வர்த்தக ரீதியில் செய்கை பண்ணப்படுகிறது. கறுவாப் பட்டையின் சுவையின் அடிப்படையில் 7 வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. 'பனிமிரிஸ் குருந்து' என்பது மிகவும் இனிப்புச் சுவை கூடிய கறுவா ஆகும்.

### மண் மற்றும் காலநிலை என்பவற்றின் தேவைப்பாடு

வெவ்வேறு வகையான மண்களில் இது வளரக்கூடியது. கறுவா பயிர்ச்செய்கைக்கு மிகவும் ஆழமான மண் தேவை. வருடாந்த மழைவீழ்ச்சி ஆயிரத்து 700 மில்லிமீற்றரிலும் அதிகமாக இருத்தல் வேண்டும். வெப்பநிலை 25 தொடக்கம் 32 பாகை செல்சியஸாக இருத்தல் வேண்டும். இது பூரண சூரிய ஒளியை விரும்பும் தாவரமாகும். கறுவாப் பயிர்ச் செய்கைக்கு ஈரவலயம் மிகவும் பொருத்தமானது. ஆனால் இடைவலயத்திலும் உலர்வலயத்திலும் செய்கை பண்ண முடியும்.

### பயிர் ஸ்தாபித்தல்

கறுவா அதிக அளவில் விதையின் மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகின்றது. தண்டு துண்டத்தின் ஊடாகவும் பதிய முறையிலும் இனப்பெருக்கம் செய்யலாம்.

நன்கு பழுத்த விதைகளை தெரிவு செய்து அதன் மேற்றோலை அகற்றி நன்கு கழுவி விதைகளை பெற்றுக் கொள்ள வேண்டும். பின்னர் பொலித்தீன் உறையில் நடுகை செய்ய வேண்டும். 4 தொடக்கம் 5 வீரியம் உள்ள தாவரங்களை வைத்துக்கொண்டு ஏனைய தாவரங்களை ஐதாக்குதல் வேண்டும்.

கள நடுகைக்கான நடுகை இடைவெளி 90 தொடக்கம் 120 சென்றிமீற்றர் ஆகும். பருவ காலம் ஆரம்பிக்கையில் நடுகை மேற்கொள்ள வேண்டும். 30க்கு 30 சென்றிமீற்றர் அளவுடைய நடுகை குழிகளை தயார் செய்தல் வேண்டும்.

பின்னர் மேல்மண், எரு, கூட்டெரு என்பவற்றைச் சம அளவில் கலந்து நடுகைக்குழிக்கான ஊடகக் கலவையை தயார் செய்தல் வேண்டும் ஆரோக்கியமானதாக நோயற்றதாக இருக்கின்ற நான்கு மாத வயதினை கொண்ட தாவரங்களை நடுகை செய்தல் வேண்டும்.



### பயிர் முகாமை

அறுவடை செய்த பின்னர் அதிலிருந்து புதிய தளிர்கள் உருவாவதற்கு அதிக போசணைப் பொருட்கள் தேவைப்படுவதனால் அறுவடை செய்த பின்னர் பசளை இடுதல் வேண்டும். பரிந்துரை செய்யப்பட்ட உரக்கலவையின் அளவு 900 kg/ha/yr ஆகும். வருடம் ஒன்றில் இரண்டு தடவை பசளை இடுதல் வேண்டும். வருடத்திற்கு இரண்டு அல்லது மூன்று தடவைகள் களைக் கட்டுப்பாடு செய்தல் வேண்டும் ஒவ்வொரு ஆறு மாதத்துக்குத் தாவரத்தினை கத்தரித்தல் மற்றும் பயிற்றுவித்தல் செயல்முறைக்கு உட்படுத்துதல் வேண்டும். தாவரத்தின் தண்டு மிகவும் நீண்டதாகவும் நேர்கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

- இது பூரண சூரிய ஒளியை விரும்பும் தாவரமாகும்.
- கறுவாப் பயிர்ச்செய்கைக்கு ஈரவலயம் மிகவும் பொருத்தமானது.
- ஆனால் இடைவலயத்திலும் உலர்வலயத்திலும் செய்கை பண்ண முடியும்.



## அறுவடை

கத்தி, 'கோக்கத்த' பித்தளை கம்பி, சத்தகம் ஆகிய உபகரணங்கள் கறுவாச் செய்கையில் பயன்படுத்தலாம். கறுவா மரமானது நடுகை செய்யப்பட்டதிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் அறுவடைக்கு தயாராகின்றது. வருடத்துக்கு இரண்டு தடவை அறுவடையினை பெற்றுக்கொள்ள முடியும். அறுவடைக்கு தயாரான தண்டுகள் பழுப்பு நிறமாக மாறும். தண்டின் விட்டம் 3 தொடக்கம் 5 சென்ரி மீற்றராக இருத்தல் வேண்டும். அறுவடை செய்யப்பட்ட தண்டிலிருந்து கிளைகளும் இலைகளும் அகற்றப்படுதல் வேண்டும். பின்னர் தோற்பட்டையைச் சீவுவதற்கு முன்னர் புறத்தோலினை சுரண்டுதல் வேண்டும். இதற்காக 'கோக்கத்த' எனும் விசேட வகை கத்தி போன்ற உபகரணம் பயன்படுத்தப்படும். புறத்தோல் சுரண்டி முடிக்கப்பட்ட பின்னர் தண்டை பித்தளைக்கம்பியினால் நன்கு உரசி தேய்க்க வேண்டும். தண்டிலிருந்து பட்டைடைச சற்று தளர்த்துவதற்காக இச்செயன்முறை மேற்கொள்ளப்படுகின்றது. பட்டை தளரும் சந்தர்ப்பத்தில் இலகுவில் பட்டையினை பொறிமுறை சேதாரம் இன்றி வேறாக்கலாம். பின்னர் விசேட வகை கத்தியைப் பயன்படுத்தி பட்டையை தண்டில் இருந்து உரித்து எடுக்க வேண்டும் சீவப்பட்ட பட்டைகளை நேரடியாக சூரிய ஒளியின் கீழ் உலர்த்தாது சூரியஒளி படாத கட்டடத்தினுள் வைத்து உலர்த்துதல் வேண்டும். தண்டானது அறுவடை செய்யப்பட்ட அன்றைய தினமே பட்டையை உரித்தல் வேண்டும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களில் கடந்த காலத்தில் இடம்பெற்ற அரசியல் படுகொலைகள், காணாமல்போகச் செய்வித்தமை மற்றும் ஆட்கடத்தல்கள் பற்றி புலன்விசாரணைசெய்து நீதியை நிலைநாட்டுதல்.

# நாடு அநுரவோடு

வளமான நாடு
அழகான வாழ்க்கை

வடக்கு – கிழக்குப் பிரதேசங்களிலும் மலையகப் பிரதேசங்களிலும் உள்ள பொலீஸ் நிலையங்கள், அரசாங்க அலுவலகங்கள் போன்ற சிவில் சேவைகளில் தமிழ் மொழியில் செயலாற்றக்கூடிய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களை பெற்றுக்கொடுத்தல்.



இனவாதம் மற்றும் மதத் தீவிரவாதம் காரணமாக இடம்பெற்றுள்ள வன்முறைச் சம்பவங்களை புலனாய்வு செய்வதற்கான உண்மை மற்றும் மீளிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகளை விரிவாக்குதல்.

අනුර කුමාර දිසානායක
அநுர குமார திசாநாயக்க
Anura Kumara Dissanayake

X

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்டார்லிங் சேவை ஒத்திவைப்பு

கொழும்பு, செப். 8

எலான் மஸ்கின் செயற்கைக்கோள் பிரிவான ஸ்டார்லிங்கின் செயற்பாடுகளை அமைப்பதற்கான இலங்கையின் திட்டம், தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் சில அனுமதிகள் நிலுவையில் உள்ளதால், ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தையின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலுடன் செயற்படுவீர்கள். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்பப் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். மனவருத்தம் ஏற்படக்கூடும். அனுசரித்துச் செல்வது நல்லது.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாக முடியும். உறவினர்கள்மூலம் சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும். சிலருக்கு வீண் அலைச்சல் ஏற்படும். சோர்வு நீங்கி உற்சாகம் பெறுவீர்கள்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். வியாபாரம் வழக்கம்போல் நடைபெறும்.

**சிம்மம்:** உதவி கிடைக்கும். தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும். பேசும்போது பதற்றம் தவிர்க்கவும். வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்கக் கூடுதல் உழைப்பு தேவைப்படும். அம்பிகை வழிபாடு அல்லல் தீர்க்கும்.

**கன்னி:** நீண்ட நாள்களாக நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி கிடைக்கும். பேசும்போது பொறுமை அவசியம். நீங்கள் தொடங்கும் காரியம் சாதகமாக முடியும். இலாபம் அதிகரிக்கும்.

**துலாம்:** பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. ஆனால், அதிகப்படியான செலவுகளால் கடன் வாங்க நேரிடும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். மற்றவர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். மகிழ்ச்சி உண்டாகும். முயற்சி சாதகமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**தனுசு:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும். குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் சில சிரமங்கள் ஏற்படும். மனதில் சற்று சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும்.

**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சற்று அலைச்சல் ஏற்படும். சில பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும்.

**மீனம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பண லாபம் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மகிழ்ச்சி உண்டாகும் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். செலவுகள் அதிகரிக்கும்.

# விசேட மருத்துவர்கள் ஓய்வு வயது இனி 63!

கொழும்பு, செப்.8

சுகாதார அமைச்சின் கீழ் பணியாற்றும் மருத்துவ அதிகாரிகளின் கட்டாய ஓய்வு வயது 63 ஆக திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

ஓய்வூதிய சட்டத்தின் உரிய விதிகளை திருத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் பாலித மகிபால தெரிவித்துள்ளார்.

இதன்படி, சுகாதார அமைச்சின் கீழ் பணியாற்றும் மருத்துவ நிபுணர்கள், அனைத்து தர மருத்துவ அதிகாரிகள், விசேட பல் சத்திரசிகிச்சை நிபுணர்கள், அனைத்து பல் சத்திரசிகிச்சை நிபுணர்கள், அனைத்து நிர்வாக தர மருத்துவ அதிகாரிகள் மற்றும் அரச பதிவு மருத்துவ அதிகாரிகளின் கட்டாய ஓய்வு வயது 63 ஆக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. (ச)

## 3 மில்லியன் முட்டைகள் இறக்குமதி



கொழும்பு, செப்.8

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 3 மில்லியன் முட்டைகள் இந்த வார இறுதியில் நாட்டை வந்தடைய உள்ளன என்று இலங்கை அரச வர்த்தக பல்நோக்கு கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கொள்முதல் பணிகள் நிறைவடைந்து, முட்டை இறக்குமதிக்கான விண்ணப்பங்கள், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறையின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் முட்டையை 40 ரூபாவிற்கு வழங்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## போதையில் சாரத்தியம்: இருவர் கைதாகினர்

மன்னார், செப். 8

மன்னார், முருங்கன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நானாட்டான் பிரதேசத்தில் மதுபானம் அருந்தி உந்துருளி செலுத்திய அரிப்புத்துறையை சேர்ந்த ஒருவரும் நானாட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் என இருவர் முருங்கன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவமானது நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் நானாட்டான் சுற்றுவட்டச் சந்தியில் இடம்பெற்றது. (ஒ-22,213)

## மரக்கறி விலை இறங்குமுகம்




கொழும்பு, செப். 8

மரக்கறிகளின் மொத்த விலை சடுதியாகக் குறைவடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

தம்புள்ள மொத்தச் சந்தையில் 12 வகையான மரக்கறிகளின் மொத்த விலை நூறு ரூபாவைத் தாண்டவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்புள்ள மொத்தச் சந்தைக்கு மலையகம், வடக்கு, வடமேற்கு மற்றும் ஊவா பிரதேசங்களில் இருந்து 31 வகையான மரக்கறிகள் கிடைத்துள்ளதுடன், மொத்த விற்பனை விலையும் ஒப்பீட்டளவில் குறைந்துள்ளதாக மொத்த விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-இ)



கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு நேற்றுக் காலை சங்காபிஷேகம் மற்றும் சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (ச-17)

# ஐந்து அம்சக் கோரிக்கைக்கமைய ஜனாதிபதி ரணிலுக்கே ஆதரவு!

### புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 8

முன்வைக்கப்பட்ட ஐந்து அம்சக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அவற்றைச் செயற்படுத்தித் தருவதாக வழங்கிய வாக்குறுதி அடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகப் புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா தெரிவித்துள்ளார்.

போரின் பின்னர் சுமார் 12 ஆயிரம் முன்னாள் போராளிகள் வடக்கு- கிழக்கில் வாழ்கின்றனர்.

அவர்களுக்கு தமிழ் அரசியல் தலைவர்களோ புலம்பெயர் அமைப்புகள் இதுவரை முழுமையான வாழ்வாதார உதவிகளை வழங்கவில்லை.

அதன் அடிப்படையில் முன்னாள் போராளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல், அதேநேரம் புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகள் கைது செய்யப்படக்கூடாது, அவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தல், இந்த நாட்டில் தமிழ் மக்கள் கௌரவமாக வாழ்வதற்கான சுதந்திரத்தை உறுதிப்படுத்தல் போன்ற கோரிக்கைகளின் அடிப்படையில் அவற்றை நிறைவேற்றுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

இதன் அடிப்படையிலே புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் கட்சி இம்முறை ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முடிவு செய்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-56,60,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# திரிக்கப்படும் கருத்துகள்


தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணம் வந்திருந்த போது அவர் தெரிவித்த கருத்தை வைத்து வடக்கிலும், தெற்கிலும் எதிர்பரப்புரைகள் முடுக்கிவிடப் பட்டிருக்கின்றன. யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் அவர் உரையாற்றும் போதும் சரி, உதயன் பணிமனையின் ஆசிரியர் பீடத்தினரு டனான சந்திப்பின்போதும் சரி, ஒரு விடயத்தை அவர் குறிப்பிட்டிருந்தார்.

'தமக்கு மாற்றம் தேவை என்று தெற்கு மக்கள் சிந்தித்துவிட்டனர். தேசிய மக்கள் சக்தியை ஆட்சிக்குக் கொண்டுவரத் தயராகிவிட்டனர். வடக்கு மக்கள் அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றத்துக்கு பலம் சேர்க்கவேண்டும். வரலாற்றுத் தவறுகளைச் செய்திட வேண்டாம் என்று அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்' என அநுரகுமார குறிப்பிட்டிருந்தார். இந்தக் கூற்றை முன்வைத்து, வடக்கு மக்களை அநுரகுமார மிரட்டி விட்டதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் ஒரு பகுதியினர் பரப்புரைகளை முடுக்கி விட்டுள்ளனர். அதேபோன்று தென்னிலங்கையிலும், சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் தரப்பினர், வடக்கு மக்களை மிரட்டி வாக்கெடுக்க அநுர முயல்கின்றார் என்ற சாரப்பட கருத்துகளை பரப்பி விட்டுள்ளனர்.

தெற்கு மக்களின் தேவையும் அவர்கள் விரும்பும் மாற்றமும் வேறு. வடக்கு மக்களின் கோரிக்கையும் அவர்கள் கோரும் மாற்றமும் வேறு என்று இவர்கள் வியாக்கியானம் முன்வைக்கின்றனர். அதைவிட அநுரகுமார தேர்தல் பரப்புரையில் சொன்ன விடயங்களை முழுமையாக உள்வாங்காமலே இத்தகைய பரப்புரைகளை தொடக்கிவிட்டுள்ளனர்.

போரின் பின்னரான மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் ராஜபக்சக்களுக்கு எதிராக வாக்களித்தமையை ஏற்றுக்கொள்வதாகவும் அதற்கான காரணத்தைப் புரிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளதாகவும் தெரிவித்த அநுர, இம்முறை இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள்சக்தியின் வேட்பாளர் சஜித்தை ஆதரித்தமையைப் புரிந்துகொள்ள முடியாமல் இருப்பதாகவும் குறிப்பிட்டார். ஏனெனில் ராஜபக்சக்களின் மொட்டுக் கட்சியின் தலைவர் ஜி.எல்.பீரிஸ், சஜித்தை ஆதரிக்கின்றார். மறுபுறம் ஜெனிவாவில் ராஜபக்சக்களால் தமிழர்களுக்கு எதிராகக் களமிறக்கப்பட்ட நாலக ஹொடகேவா சஜித்தை ஆதரிக்கின்றார். இப்படிப்பட்ட நிலையில், ராஜபக்சக்களுக்கு எதிராக கடந்த காலங்களில் வாக்களித்த தமிழ் மக்கள் எப்படி சஜித்தை ஆதரிக்க முடியும் என்ற கேள்வியை முன்வைத்த பின்னரே, தெற்கில் மாற்றத்துக்கு மக்கள் தயாராகிவிட்டனர். அதில் வடக்கு மக்களும் பங்காளியாகவேண்டும் என்று அநுர தனது உரையில் கூறியிருக்கிறார். இப்படியான தொரு சூழலில் வடக்கு மக்கள் அந்த மாற்றத்தின் பங்காளிகளாகாவிட்டால் தெற்கு மக்கள் எவ்வாறு எண்ணுவார்கள்? என்று அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இப்போது தெற்கின் மாற்றமும் வடக்கின் மாற்றமும் வேறு என்று கருத்தை முன்வைக்கும், சஜித்தை ஆதரிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஒரு பகுதியினர்தான், கடந்த காலங்களில் குறிப்பாக 2015 ஆம் ஆண்டு தெற்கின் மாற்றத்துக்காக மைத்திரியுடன் ஒன்றிணையுமாறு கூவியவர்கள். அப்போது தெற்கின் மாற்றமும் வடக்கின் மாற்றமும் ஒன்றா? என்ற கேள்வியை அவர்கள் எழுப்பவில்லை. இப்படிப்பட்ட சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளால்தான் தமிழ் மக்கள் இன்னமும் மீட்சியடையவில்லை.



## எங்களுடைய அமைச்சரவையில் சகல இனத்தவருக்கு சம இடம்



### அநுர அறிவிப்பு

**யாழ்ப்பாணம், செப். 8**

**எங்கள் அரசாங்கத்தின் அமைச்சரவையில் வடக்கு, தெற்கு, கிழக்கு என்ற பேதம் இருக்காது. அனைவருக்கும் சம இடம் வழங்கி உள்வாங்குவோம். அதற்கான சந்தர்ப்பத்தை துரதிஷ்டவசமாக இல்லாமல் செய்ய இலங்கைத் தமிழரசுக்கட்சி முயல்கின்றது-இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார தெரிவித்தார்.**

உதயன் பணிமனையில் ஆசிரிய பீடத்துடன் இடம்பெற்ற நேர்காணலின்போதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எங்களது அரசாங்கத்தில் எந்தப் பேதமும் இருக்காது. நாங்கள் இனவாதிகள் இல்லை. நாங்கள் வெல்லவே மாட்டோம் என்றார்கள். இப்போது நாங்கள் வென்றால் அப்படி நடக்கும் இப்படி நடக்கும் என்று மக்களைப் பயப்படுத்துகின்றார்கள். காலாதிகாலமாக ஆட்சியிலிருப்பவர்கள் சொல்வதுதான். எங்கள் அமைச்சரவையில் தெற்கு, வடக்கு, கிழக்கு என்று எந்தப் பேதமும் இருக்காது. அனைத்து இனத்தவருக்கும் சம இடம்கொடுப்போம். இலங்கைத் தமிழரசுக்கட்சி துரதிஷ்டவசமாக அந்த வாய்ப்பை இல்லாமல் செய்திருக்கின்றது- என்றார். (ஒ-5)

## மேன்முறையீட்டு நீதியரசர் நால்வர் பதவிப்பிரமாணம்

கொழும்பு, செப்.8

நான்கு புதிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர். மேல் நீதிமன்ற நீதிபதிகளான கே. எம். ஜி. எச். குலதுங்க, டி. தொடவத்த மற்றும் ஆர்.ஏ. ரணராஜா ஆகிய நீதிபதிகள் மற்றும் முன்னாள் சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் எம்.சி.எல்.பி. கொபல்லாவ ஆகியோர் இவ்வாறு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ச)

## வாக்குச் சீட்டை பகிர்ந்தவருக்கு சிக்கல்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும்தமிழ்ப்பொதுவேட்பாளரை ஆதரிக்கும் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும், தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்புக்கான வவுனியாமாவட்ட நிதிப்பொறுப்பாளருமான ஓர் அரசியல் பிரமுகர் தனது முகநூலில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச்சீட்டை பொதுவேட்பாளருக்கு புள்ளடி இடப்பட்டவாறு பகிர்ந்துள்ளார். இது தொடர்பில் பல தரப்புகளும் முறைப்பாடு செய்துள்ளன. (ஒ-110)

## சுங்கத்திணைக்களம் சாதனை

கொழும்பு, செப்.8

வரலாற்றில் முதல் முறையாக இலங்கை சுங்கத் திணைக்களம் ஒரு டிரில்லியன் ரூபா சுங்க வருமானத்தைப் பெற்றுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் சரத் நோனிஸ் தெரிவித்துள்ளார். இதனால், 2024ஆம் ஆண்டுக்கான சர்வதேச நாணய நிதியம் நிர்ணயித்த 1.5 இலட்சம் கோடி ரூபா வருவாய் இலக்கை எட்ட முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)



## தென்னக்கோன் மனு ஒத்திவைப்பு

தேசபந்து தென்னகோன் தாக்கல் செய்த இடைக்கால மனுவின் உண்மை நிலையை உறுதிப்படுத்த எதிர்வரும் 13ஆம் திகதி அழைக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பொலிஸ் மா அதிபர் என்ற ரீதியில் தாம் கடமையாற்றுவதை தடுக்கும் வகையில் விதிக்கப்பட்டுள்ள இடைக்கால தடை உத்தரவை நீக்குமாறு கோரி அவர் இந்த மனுவை தாக்கல் செய்தார். அதற்கமைய இது தொடர்பான மனுவை எதிர்வரும் 13ஆம் திகதி விசாரணைக்கு அழைத்து, உண்மை நிலையை சரிபார்க்கும்படி மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டுள்ளது. (ச)

### நாளை

09.09.2024

திங்கட்கிழமை - ஆவணி - 24

சுபநேரம் : 12.04 - 01.34

ராகுகாலம் : 07.34 - 09.04

### நாளொரு நல்வார்த்தை

**அசாதாரணமான வாய்ப்புக்காகக் காத்திருக்க வேண்டாம்.பொதுவான சந்தர்ப்பங்களை கைப்பற்றி அவற்றை சிறந்ததாக மாற்றுங்கள்**

*-ஓரிசன் ஸ்வெட் மார்டென்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றிலிரண்டு கிடைக்கும்



## அநுர உறுதி

ஜனாதிபதித் தேர்தலை தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படுவதால் அதில் நாம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெறுவோம். இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். உதயனுக்கு வருகை தந்த அவரிடம், ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமாரவால் வெற்றி பெற்றாலும் நாடாளுமன்றத் தேர்தலில் அவர் வெற்றி பெறமாட்டார் எனச் சொல்லப்படுகின்றது. அதேவேளை, நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை பலம் கூட கிடைக்காத நிலைமை ஏற்பட்டால் யாருடன் கூட்டுச் சேர்வீர்கள் என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த அநுர, இலங்கை வரலாற்றில் ஜனாதிபதித் தேர்தல்களைத் தொடர்ந்து நடத்தப்பட்ட நாடாளுமன்றத் தேர்தல்கள், ஜனாதிபதித் தேர்தலில் வெல்பவரின் தரப்பு மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றிருக்கின்றது. 1988ஆம் ஆண்டுத் தேர்தலில் பிரேமதாஸ வெற்றி பெற்றதைத் தொடர்ந்து நடந்த நாடாளுமன்றத் தேர்தலானாலும் சரி, 2010ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ச வெற்றி பெற்றதைத் தொடர்ந்து நடந்த தேர்தலானாலும் சரி, 2019ஆம் ஆண்டு கோத்தாபய ராஜபக்ச வெற்றி பெற்ற பின்னர் நடந்த தேர்தலானாலும் சரி அவற்றில் நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை அல்லது அதற்கு அண்மையான பெரும்பான்மையைப் பெற்றிருக்கின்றார்கள். நாங்கள் இந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்துவோம். மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் வெல்வோம்- என்றார். (ஒ-5)

# அநுரவுக்காக உழைக்கும் ஒப்பந்தவேட்பாளர் ரணில்!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

**கொழும்பு, செப். 8**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வெற்றிபெறும் நோக்கில் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கவில்லை. மாறாக அநுரகுமார திஸாநாயக்கவை வெற்றிபெற வைப்பதற்கான ஒப்பந்த வேட்பாளரே அவர் என்று ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.**

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இதுதொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சில தினங்களுக்கு முன்னர் தேர்தல் பரப்புரை மேடையொன்றில் சஜித் பிரேமதாஸவால் அநுரகுமார திஸாநாயக்கவைத் தோற்கடிக்கமுடியாது என்று கூறுகின்றார். இதனூடாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தான் வெல்லப்போவதில்லை என்பதை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டிருக்கிறார். அதேபோன்று ரணில் விக்கிரமசிங்க இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வெல்லும் நோக்கில் களமிறங்கவில்லை என்று நாம் ஏற்கனவே கூறியிருந்தோம். ஏனெனில் அவர் வெல்வதை விடவும், சஜித் பிரேமதாஸவைத் தோற்கடிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளையே முன்னெடுத்து வருகின்றார். ஆகையால் சஜித் பிரேமதாஸவால் அநுரகுமாரதிஸாநாயக்கவைத் தோற்கடிக்கமுடியாது என்று கூறுவதன் ஊடாக சஜித்தின் வெற்றிக்காகப் பணியாற்றுவோரை உளவியல் ரீதியில் சோர்வடையச் செய்வதற்கே அவர் முற்படுகின்றார்.

ரணில் விக்கிரமசிங்க மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகிய இருவரும் பிரதானமாக சஜித் பிரேமதாஸவையே தாக்கிப்பேசுகின்றனர்.

அதேபோன்று தபால்மூல வாக்களிப்பு தினத்துக்கு முன்னையதினம் இரவு அரசுக்குச் சொந்தமான தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றில் நடைபெற்ற ஒரு மணிநேர நிகழ்ச்சியில் அநுரகுமார திஸாநாயக்க கலந்துகொண்டார். எனவே அநுரகுமார திஸாநாயக்க வெல்வதற்கு அவசியமான பின்னணி, வசதி வாய்ப்புகள் அனைத்தையும் ரணில் ஏற்படுத்திக் கொடுப்பதையே இது காண்பிக்கின்றது. அடுத்த சில வாரங்களில் ரணில் அநுரவையோ, அநுர ரணிலையோ சாடிப்பேசமாட்டார்கள். மாறாக இருவரும் இணைந்து சஜித் பிரேமதாஸவைத் தூற்றுவார்கள் – என்றார். (அ-ம)

# மன்னாரை மீட்பேன்!

## சஜித் உறுதி

மன்னார், செப். 8

மன்னார் மாவட்டம் போரால் மிகவும் பாதிப்படைந்த மாவட்டம். போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இந்த மண்ணிலே அதிகமாக வாழ்கிறார்கள். மன்னாரை அபிவிருத்தி செய்ய சிறந்த திட்டம் முன்னெடுக்கப்படும். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மன்னாரை மையப்படுத்திசுற்றுலாத்துறையை மேம்படுத்துவதுடன் உற்பத்தி கைத்தொழில் பேட்டைகளை உருவாக்கி அபிவிருத்திக்குக் கொண்டு செல்வோம். விசாயிகள் நலன் நோக்கி எமது தேர்தல் விஞ்ஞானபத்தில் விஷேட அம்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. விவசாயிகள், மீன்பிடியாவும் ஸ்மாட் விவசாயிகளாக, மீனவர்களாக மாற்றப்படுவார்கள். மன்னாரில் நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக வருடந்தோறும் இருபோக விவசாயம் செய்யும் திட்டமாக அமைவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மன்னார் மாவட்டத்தில் 133 பாடசாலைகளை ஸ்மாட் பாடசாலைகளாக மாற்றுவோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-60)

# வீடு வீடாகச் சென்று நாமல் பரப்புரை!

கொழும்பு, செப்.8

மஹிந்த ராஜபக்ச தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடவுள்ள நாமல் ராஜபக்சவினால் முன்வைக்கப்பட்டுள்ள 'நாமல் தெக்ம' வேலைத்திட்டம் தொடர்பில் வீடு தோறும் சென்று விளக்கமளிக்கவுள்ளார். நேற்று முதல் நாடு முழுவதும் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கட்சி தெரிவித்துள்ளது. இதற்கமைய நாடு முழுவதும் காணப்படும் 13 ஆயிரத்து 628 தேர்தல் காரியாலயங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச)

# ரணிலை ஆதரித்து பரப்புரை!

வவுனியா, செப்.8

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து பரப்புரை நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் தலைமையில் வவுனியா நகரில் நேற்றுச்சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது மஸ்தானின் குழுவினர் வவுனியா தினச்சந்தை, நகர வர்த்தகநிலையங்களில் பரப்புரையில் ஈடுபட்டதோடு துண்டுப் பிரசுரங்களையும் வழங்கினர். (ஓ-25-110)



# வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு சுமந்திரன் அணி மட்டுமே ஆதரவு

## விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 8

சஜித் பிரேமதாஸவுக்கு தமிழரசுக் கட்சி ஆதரவு வழங்கவில்லை. அக்கட்சியில் உள்ள சுமந்திரன் அணியினர் மட்டுமே ஆதரவு வழங்கியுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதுவரை காலமும் நாங்கள் இலங்கையர்களாகவே தேர்தல்களில் பங்கேற்று வந்தோம். ஆனால் பெரும்பான்மையினர் எங்கள் வாக்குகளை பெற்று எங்களை அடக்கி ஆண்டு வந்தார்கள். அதனால் நாங்கள் இம்முறை சுதந்திரமாக வாழவேண்டும் என்ற சிந்தனையின் அடிப்படையில் தமிழ்ப் பொதுவேட்பாளரை களமிறக்கி உள்ளோம். அவர் ஜனாதிபதி ஆக மாட்டார். ஆனாலும் நாங்கள் அதன் ஊடாக தமிழ் மக்களை ஒன்றிணைக்கும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளோம். எனவே தமிழ் மக்கள் அனைவரும் தமிழர்களாக சிந்தித்து, எமது ஒற்றுமையை வெளிப்படுத்தும் செயற்பாடாக, தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு வாக்கை அளிக்க வேண்டும். தமிழரசுக் கட்சியில் உள்ள சுமந்திரன் அணியை சேர்ந்த சுமார் 24 பேர் தான் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். கட்சியின் தலைவர் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அவர் அந்தக் கூட்டத்தில் எந்த தீர்மானங் களையும் எடுக்கவேண்டாம் என கூறிய போதிலும், அதனையும் மீறி தீர்மானம் எடுத்துள்ளனர். அதேபோல கட்சியின் தலைவர் பதவிக்கான தேர்தலில் சுமந்திரனை தோற்கடித்த சிறீதரன் நாட்டில் இல்லை. சார்ள்ஸ் நிர்மலநாதன், யோகேஸ்வரன் உள்ளிட்டவர்களும் அன்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. சுமந்திரன் தனக்கு சாதகமான சிலரை அழைத்து கூட்டத்தை நடத்தி தீர்மானம் எடுத்துள்ளார். அவர்கள் எந்த முடிவை எடுத்து இருந்தாலும், தமிழ் மக்கள் ஒற்றுமையாக சிந்தித்து தமது வாக்குகளை தமிழ்ப் பொது வேட்பாளருக்கு அளிக்க வேண்டும் - என்றார். (ஒ-20)

# வரிசையுகம் மீண்டும் ஏற்படின் சஜித், அநுர பொறுப்புக்கூறுக!

கொழும்பு, செப். 8

நாடு மீண்டும் பொருளாதார படுகுழியில் விழுந்தால் அதற்கு சஜித், அநுர ஆகியோர் தான் பொறுப்பு. துரதிஷ்டமான இடத்துக்கு நாட்டை இழுத்துச் செல்லவேண்டாம் - இவ்வாறு புதிய ஜனசெத பெரமுனவின் தலைவர் காமினி விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த நாடு பொருளாதார வீழ்ச்சியில் இருந்த போது, மக்களின் துயரங்களை உணர்ந்த தலைவர் ஒருவர் இருக்கவில்லை. அப்போது, நாட்டை மீட்கும் பொறுப்பை மக்களுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டார்.

அதிகார பேராசை கொண்ட சஜித் பிரேமதாஸ விரைவில் ஜனாதிபதியாக வர முயற்சிக்கிறார். அதன்மூலம் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் நாடு வீழ்ச்சியடையும் அபாயம் உள்ளது. அநுரகுமார திஸாநாயக்கவின் ஜே.வி.பி. செய்த அழிவை நாம் அறிவோம். சஜித் மற்றும் அநுர இருவரும் இணைந்து இந்த நாட்டை அதலபாதாளத்திற்கு கொண்டு செல்ல முயற்சிக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி வேட்பாளர்கள் 'குதிரையோடத்' தடை

கொழும்பு, செப். 8

ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் ஏனைய வேட்பாளர்களுக்காக பரப்புரை முன்னெடுக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெளிவுபடுத்தியுள்ளது. தேர்தல்கள் ஆணையாளர் சமன் ரத்நாயக்க ஊடகங்களுக்கு வெளியிட்ட கருத்தில் இதனைத் தெரிவித் துள்ளார்.



இவ்வாறான செயற்பாடுகள் சட்டத்துக்கு புறம்பானது மட்டுமன்றி நெறிமுறையற்ற செயல்களாகவே இருக்கும் என்று தெரிவித் துள்ளார். இந்த வேட்பாளர்கள் என்ன செய் கிறார்கள் என்பதை பொதுமக்கள் அறிந்தி ருக்கிறார்கள், எனவே பொதுமக்கள் தாங் களாகவே முடிவு செய்யவேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

பொதுத்துறையின் சம்பளத் திருத்தம் தொடர்பான அரசாங்கத்தின் அண்மைய அறிவிப்பு தொடர்பில் கவலை தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், அது தபால்மூல வாக்களிப்பு நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சாத்தியம் இருப்பதை ஏற்றுக்கொண்டார். (ஒ-இ)



## உரம் விலை குறைக்கப்படும்

கொழும்பு, செப். 8

விவசாயிகளின் பல கோரிக்கைகளுக்கு அமைய உரத்தின் விலையைகுறைப்பதற்கு அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அம ரவீர தெரிவித்துள்ளார்.

திருகோணமலை, மொர வக்கவில் இடம்பெற்ற இயலும் சிறிலங்கா பேர ணியில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, அரசாங்கம் 50 கிலோகிராம் உர மூடையின் விலையை 4 ஆயிரம் ரூபாவாக குறைக்கவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள் ளார். மேலும், இந்த விட யம் விவசாயத் துறைக்கு மிகவும் தேவையான நிவாரணம் வழங்கும் என்று அமைச்சர் கூறி யுள்ளார். (ஒ-இ)

## ஐக்கிய தேசியக் கட்சி ரணிலை கைவிடுகிறதா?



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பரப்புரைக்கு ஐக்கிய தேசியக் கட்சியிடம் இருந்து போதிய ஆதரவு கிடைக் கவில்லை என இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர் னாண்டோ தெரிவித்துள்ளார். இணையத்தளம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இதனை கூறியுள்ளார். சிறிகொத்த கட்சியின் தலைமையகத்தில் இருந்து எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கவில்லை எனவும் குற்றம் சுமத்தியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிலர் ஜனாதிப திக்கு எதிரான போக்கில் ஈடுபட்டுள்ளதாக சந்தேகம் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் குழுவினால் மாத்திரம் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியாது எனத் தெரி வித்த அவர், அதற்குத் தேவையான ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சியிட மிருந்தும் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் கூறியுள்ளார். (ஒ-இ)

## தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரித்த அரசியல் கட்சி அமைதிகாக்கின்றது

*ஆதங்கம் வெளியிடுகிறார் வர்ணகுலசிங்கம்*

யாழ்ப்பாணம், செப். 8

தமிழ்ப் பொதுவேட்பாளரை ஒன்றிணைந்து நிறுத்திய அரசியல் கட்சிகள் இன்று என்ன செய்கின்றன? தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசி யல் கட்சியொன்று இன்னும் பரப்புரையில் முழுமையாக இறங்கவில்லை. அக்கட்சியின் இளம் உறுப்பினரிடம் கேட்ட போது கட்சி மேலிடத்தில் இருந்து இன்னும் உத்த ரவு வரவில்லை என்று கூறியிருக்கிறார். இப்படியான அரசியல் கட்சிகளைதானே நீங்கள் எல்லோரும் இணைத்து வைத்துள்ளீர்கள்? இவ்வாறு வடமராட்சி வடக்கு கடற்றொழில் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்க ளின் முன்னாள் உபதலைவரான நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

வடமராட்சியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரி விக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று எல்லோரும் மக்கள் மத்தியில் முழுமையாக இறங்கி வேலை செய்யவேண்டும். பரப்புரை பயண மொன்றில் நானும் ஈடுபட்டிருந்த வேளை மக்களிடம் பொதுவேட்பாளர் விடயத்தை கூறியபோது இது எப் போதோ செய்திருக்க வேண்டிய வேலை. ஆனால் இப் போதாவது செய்துள்ளீர்கள் என ஆதரவளித்துள்ளனர். உண்மையில் இந்த விடயம் தொடர்பில் கிராமங்களில் தெளிவற்ற நிலையையே காணப்படுகிறது. தேர்தலுக்கு குறு கிய நாள்கள் இருக்கும் நிலையில் மக்கள் மத்தியில் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பிலான பரப்புரை தீவிர மாக முன்னெடுக்கவேண்டும். தமிழ் குருதி ஓடுகின்ற எவரும் சிங்கள கட்சிகளுக்கு வாக்களிக்க மாட்டார்கள். தேர்தல் வேலை செய்யவும் மாட்டார்கள்.

வடக்கு - கிழக்கில் உரிமை கிடைத்து தமிழ் மக்கள் சந் தோசமாக வாழவேண்டும் என நினைக்கின்ற சிங்கள மக்களும் சங்கு சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டு ஆத ரவளிக்க வேண்டும். இன்று தமிழ் அமைப்புகள் கட்சிகள் அனைத்தும் ஒன்றாக நின்று தமிழ்ப் பொதுவேட்பாள ருக்கு ஆதரவளித்திருக்கவேண்டும்.

எல்லோரும் ஒன்றிணைந்து தமிழ்ப் பொது வேட்பாளரை வெல்ல வைக்க சங்கு சின்னத்துக்கு எதிரே புள்ளடியிடு மாறு கேட்டுக் கொள்கிறேன் - என்றார். (ஒ-27)

## இலக்கு வைக்கப்படும் ஜனாதிபதி வேட்பாளர்

கொழும்பு, செப். 8

ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் மீது தாக்குதல் நடத்துவதற்கான சதித்திட்டம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு நீதிவான் நீதிமன் றில் அறிவித்துள்ளது. கண்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் வழங்கிய இரகசிய தகவலை யடுத்து இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தகவல் கொடுத்தவரிடமிருந்து ஏற்கனவே வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக குற்றப் புல னாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. விசாரணைகளை முன்னெடுத்துச் செல்லுமாறும் சந்தேக நபர்கள் யாரேனும் அடை யாளம் காணப்பட்டால் அவர்களைக் கைது செய்யுமாறும் பிரதான நீதிவான் திலின கமகே பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். இந்த விவகாரம் தொடர்பானஇரகசிய அறிக்கை செப்ரெம்பர் 2ஆம் திகதி நீதிவானிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

## வாக்காளர் அட்டைகள் 12 இலட்சம் விநியோகம்

கொழும்பு, செப்.8

ஜனாதிபதித் தேர்தலுக்கான சுமார் 12 இலட்சம் உத்தியோகபூர்வ வாக் காளர் அட்டைகள் வாக்காளர்க ளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள தாக பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க இதனை தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தி யோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கடந்த 3 ஆம் திகதி முதல் விநி யோகிக்கப்பட்டு வருகின்றன. எதிர் வரும் 14 ஆம் திகதி வரை வாக்கா ளர் அட்டைகள் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

## பொதுத்தேர்தலின் பின்னரே நாடாளுமன்றைக் கூட்டுவேன்

*அநுர தெரிவிப்பு*

கொழும்பு, செப். 8

தாம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால் எதிர் வரும் ஒக்ரோபர் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்டப்போவதில்லை. பொதுத்தேர்தலுக்கு பின் னரே நாடாளுமன்றத்தைக் கூட்டுவேன் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு, பொதுத்தேர் தல் நடைபெறும் வரை ஒன்றரை மாதங்களுக்கு அரசியல் சாசனத்தின்படி, தமது கட்சி நாட்டை ஆட்சி செய்யும். பொதுத்தேர்தலில், தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். தமது வெற்றி குறித்து எதிர்க் கட்சியினர் ஆத்திரமடைந்துள்ளனர். எனவே தற் போது தமது தோல்வியை எவ்வாறு தவிர்ப்பது குறித்து அவர்கள் சிந்தித்து வருகின்றனர் - என் றார். (ச)

## தே.ம. சக்தியின் பரப்புரை வவு.வில் முன்னெடுப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தேசியமக்கள் சக்தி சார்பில் போட் டியிடும் வேட்பாளரான அநுரகுமார திஸநாயக்கவை ஆதரித்து வவு னியா நகரில் பரப்புரை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்போது வவுனியா குடியிருப்பு பகுதி, வர்த்தகநிலையங்கள், மற்றும் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் பரப்புரை முன்னெடுக்கப் பட்டது. தேசியமக்கள்சக்தியின் உறுப்பினர்கள்,மக்கள் விடுதலை முன்னணியினர், ஆதரவு தொழிற்சங்கங்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டிருந்தனர். (ஒ-25-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் திருவிழாவில் நிலையாண்மையை ஊக்குவித்த கொமர்ஷல் வங்கி

அண்மையில் நடைபெற்று முடிந்த புகழ்பெற்ற நல்லூர் கந்தசாமி ஆலய வருடாந்த திருவிழாவில் கொமர்ஷல் வங்கியும் பங்கேற்றது. இதற்கிணங்க இங்கு கொமர்ஷல் வங்கியானது நிலையாண்மையை ஊக்குவித்தல், பக்தர்களுக்கு நடமாடும் வங்கி சேவைகளை வழங்குதல் மற்றும் வங்கியின் கடனட்டை மற்றும் டெபிட் அட்டைகளுக்கு விலைக்கழிவுகளை வழங்குதல் போன்ற பன்முக செயற்பாடுகளை மேற்கொண்டது.

யாழ்ப்பாணம், நெல்லியடி, சுன்னாகம், மருதனார் மடம், அச்சுவேலி, திருநெல்வேலி, பருத்தித்துறை, தெல்லிப்பளை, மானிப்பாய் மற்றும் சங்கானை போன்ற பிரதேசங்களில் வங்கி ஊழியர்கள் மக்களின் வீடுகளை நாடி ஊக்குவிப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டதுடன், நிலைபெறுதகு எதிர்காலத்தை உருவாக்குவதற்கான உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக 1,500 பயன்தரு மரக்கன்றுகளையும் மக்களுக்கு வழங்கி மகிழ்ந்தது.

வங்கியானது சீட்டிழுப்பு போட்டியினை நடாத்தியதுடன், வெற்றி பெற்ற வாடிக்கையாளர்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள் உட்பட பெறுமதியான பரிசில்களையும் வழங்கியது. நல்லூர் திருவிழா நிகழ்ச்சியின் சிறப்பம்சங்களில் ஒன்றான தேர்த் திருவிழா நிறைவடைந்ததையடுத்து வடக்கு பிராந்தியத்தில் உள்ள வங்கிக் கிளைகளின் ஊழியர்கள் சுற்றுச்சூழலினை சமூகத்துடன் இணைக்கும் வகையில் நல்லூர் கோவிலுக்குச் செல்லும் நான்கு வீதிகளையும் தூய்மைப்படுத்தும் பணியை மேற்கொண்டு தமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினர்.

திருவிழாக் காலத்தில் நல்லூரில் தனது 'பேங்க் ஒன் வீல்ஸ்' நடமாடும் வங்கிச்சேவையின் ஊடாக, பக்தர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு பணத்தினை மீளப்பெறும் வசதியையும் வங்கி வழங்கியது. ஆடைகள், அணிகலன்கள் பாவனைப் பொருட்களின் சில்லறை விற்பனையாளர்கள், பல்பொருள் அங்காடிகள் மற்றும் உணவகங்கள் ஆகியவற்றுடன் இணைந்து வங்கியின் கடனட்டை மற்றும் டெபிட் அட்டைகளுக்கு 35% வரையிலான விலைக்கழிவுகளையும் வழங்கியது.

கொமர்ஷல் வங்கி நிலைபெறுதகு தன்மையை மேம்படுத்தும் சமூகத் திட்டங்களில், நாடு முழுவதும் 100,000 மரங்களை நடுவதற்கான அதன் "மரங்கள் நிறைந்த தேசத்துக்கான" முயற்சி, பொலன்னறுவை மாவட்டத்தின் திம்புலாகல மலைத்தொடரில் உள்ள கந்தேகம வனப்பகுதியைச் சேர்ந்த 100 ஹெக்டேயர் நிலப்பரப்பில் சீரழிந்த வனப்பகுதியை மீளக்காடாக்குதலும் அடங்கும். மேலும் கொக்கலயில் மறுசீரமைப்பு திட்டம் பனாமாவில் கடல் ஆமை பாதுகாப்பு முயற்சி, இலங்கை பல்லுயிர் அமைப்புடன் இணைந்து களுத்துறையில் கடற்கரையை பராமரித்தல் மற்றும் ஏராளமான கடற்கரை சுத்தப்படுத்தும் திட்டங்கள் அடங்குகின்றன.

COMMERCIAL BANK





























2024 நல்லூர் திருவிழாவில் பங்குபற்றிய கொமர்ஷல் வங்கியின் பன்முக ஈடுபாட்டின் சில சிறப்பம்சங்கள் படத்தில் காணப்படுகின்றன

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யானை தாக்கி யாசகர் பலி

கொழும்பு, செப். 8
அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி யாசகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம் பெற்றுள்ளது.
சடலம் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸார் ஊட கங்களிடம் தெரிவித்துள்ளனர். (ம)


## மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 07 . 1947
மறைவு 04 . 09 . 2024

### மங்கையற்கரசி இலகுநாதன்
### (புண்ணியம்)

இணுவில் மேற்கினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மங்கையற்கரசி இலகுநாதன் கடந்த 04.09.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், இலகுநாதன் (புண்ணியம்) அவர்களின் பாசமிகு மனைவியும், தமிழ்ச்செல்வன் (கனடா), தமிழரசி (உபஅதிபர் - களு / இல்மா முஸ்லிம் வித்தியாலயம்), தமிழ்ச்செல்வி (சுவிஸ்), தமிழ்வாணி (ஆசிரியர், யா / கொக்குவில் இந்துக்கல்லூரி), தமிழரசன் (லண்டன்), தமிழ்வாணன் (தொழில்நுட்ப பீட பணியாளர், யா / நெல்லியடி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், த.பிரிதிலா (கனடா), இ.கருணானந்தன் ( unior Forcman, Built Element Ltd, Ratmalane), கதிர்காமநாதன் (சுவிஸ்), குமரதாஸ் (அபிவிருத்தி உத்தியோகத்தர் கட்டடங்கள் திணைக்களம் வடக்குமாகாணம்), ராஜி (லண்டன்), சிவதாரணி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற வர்களான பாலசுந்தரம், மீனாட்சியம்மா மற்றும் வைத்தீஸ்வரன் (கனடா), லீலாவதி, புஸ்பராணி (கனடா), நித்தியானந்தம் (கனடா), காலஞ்சென்ற பாக்கியவதி மற்றும் விவேகானந்தன் (ஜேர்மனி), பாலசோதி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான மதியாபரணம், சரஸ்வதி, இராஜேஸ்வரி, சிவானந்தம், கமலாதேவி, இராசலிங்கம், செல்வேந்திரம் மற்றும் தர்மலிங்கம் (கனடா), இந்திரலீலா, கந்தசாமி, வரதராணி (ஜேர்மன்), மகேஸ்வரி (கனடா) ஆகியோரின் மைத்துனியும், இதன், பிரனிஜா, கருனிஷா, நிவாசனா, தருண், டனுஷன், தவிஷா, ஆராதனி, ஆஹீசன், தஜின், நவீனா, தணிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (08.09.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்
076 864 0369

(cs.56125) (N-1)



## மரண அறிவித்தல்



பிறப்பு 12.06.1955
இறப்பு 06.09.2024

### அப்புத்துரை மாணிக்க தியாகராசா

அளவெட்டியை பிறப்பிடமாகவும் மகாத்மா வீதியை வசிப்பிட மாகவும் கொண்ட அப்புத்துரை மாணிக்க தியாகராசா அவர்கள் கடந்த 06.09.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், இந்திராதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், சரஸ்வதி, இராசலட்சுமி மற்றும் சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரினும், சகிலா, பகிலா, கேமலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தெறன்ஸ், சிவகாந்தன், ஜெயகாந்தன் ஆகியோரின் மாமனாரும், பிரசாந, ஆதிரா, ஸஸ்மிதா, சாருயன், தர்சன், கனுயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.09.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்


## பா.ஜ.க.வில் ஜடேயா!



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர சகலதுறை வீரரான ஜடேயா பா.ஜ.க.வில் இணைந்துள்ளார். பிரதமர் நரேந்திர மோடியின் முன்னிலையில் அவர் பா.ஜ.க.வில் இணைந்தார். (ம)


## துயர் பகிர்கின்றோம்...



எமது யாழ். போதனா வைத்தியசாலையின்
பொது வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி திருமதி
நளாயினி ஜெகதீசன் (VP) அவர்களின் அன்புத் தாயார்

### யோகம்மா ராஜரட்ணம்

அவர்கள் கடந்த 05.09.2024 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வைத்தியர்கள்
வாட்டு இல-2,10
யாழ். போதனா வைத்தியசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்களின் ஆதரவு பொதுவேட்பாளருக்கே

*மீனவர் தொழிற்சங்கங்களின் நிர்வாகிகள் தெரிவிப்பு*



யாழ்ப்பாணம், செப். 8

நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளராக போட்டியிடும் பா. அரியநேந்திரனுக்கு ஆதரவை வழங்குவதாக திருகோணமலை மீனவர் தொழிற்சங்கங்களின் சம்மேளன நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை மீனவர் தொழிற்சங்கங்களின் சம்மேளன அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திபின்போதே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பு சார்பில் சங்கு சின்னத்தில் போட்டியிடும் பா. அரியநேந்திரனுக்கு ஆதரவாக தமிழ் மக்கள் வாக்களித்து நமது ஒற்றுமையை காட்ட வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகள் இன்றும் தீர்க்கப்படாதுள்ளது என்பதனை சர்வதேச சமூகத்துக்கும் பெரும்பான்மை சிங்கள அரசியல் தரப்பினருக்கும் உணர்த்தும் வகையில் தமிழ் மக்களின் தீர்ப்பு அமைய வேண்டும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ம-25,100)


## வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணத்தில் 2 அறை வீடு/ அனெக்ஸ் வாடகைக்கு தேவை.

தொடர்பு: 077 566 9245

## வேலையாள் தேவை

யாழ். நகரில் உள்ள மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு ஆண் தேவை.

வயது : 18 - 25

T.P: 074 147 2445

## வீடு வாடகைக்கு

நாவலர் றோட், வண்ணார் பண்ணை Post Office ற்கு முன்பாக அமைந்துள்ள 6 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

077 518 9775

## வீட்டு பணிப்பெண் தேவை

நன்றாக உணவு சமைப்பதிலும், வீட்டை சுத்தம் செய்வதிலும் நல்ல அனுபவமுள்ள வீட்டுப் பணிப்பெண் யாழ்ப்பாணத்தில் எங்கள் வீட்டில் தங்கி வேலை செய்ய தேவை.

தொடர்பு: 076 287 8157

## காணி விற்பனைக்கு

கோப்பாய் வைத்தியசாலைக்கு அண்மையாக 3 1/2 பரப்பு சதுர வடிவிலான வீடு கட்ட உகந்த காணி. மூன்று பக்க மதில், நன்னீர் வசதி, நல்ல அயற் சூழலில் விற்பனைக்கு உண்டு.

076 3888 103
077 880 3185

## மணமகள் தேவை

1991 ல் பிறந்த சுய தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை 7 ல் சூரியன் செவ்வாய், 1987 ல் பிறந்த 12 செவ்வாய் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு: 076 583 0277

## வீடு வாடகைக்கு தேவை

சுண்டுக்குழி/ கச்சேரி அண்மித்த பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு:

077 497 5762

## பெண் வேலையாட்கள் தேவை

திருநெல்வேலியில் அமைந்து இருக்கும் புடைவையகத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை. வயது எல்லை 18-30 வரை,

நாள் சம்பளம் 1000/= வழங்கப்படும்.

**வேலை நேரம் 9.00 To 7.00 வரை.**

தொடர்புகளுக்கு:

077 789 8862

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் பலசரக்கு கடைக்கு சிட்டைப்படி பொருட்கள் பொதி செய்ய மற்றும் இதர வேலைகளுக்கு நல்ல அனுபவம் உள்ள வேலையாட்கள் மட்டும் தேவை.

**சம்பளம் 2000/=, +300 (மதிய உணவு)**

தொடர்பு: 077 628 0685
076 915 8072

## வீடு வாடகைக்குத் உண்டு

யாழ். நல்லூர் கோவிலுக்கு அண்மையில் மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. ஒருவர் அல்லது இருவர் வீரும்பத்தக்கது. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 076 497 3040

## மணமகள் தேவை

லண்டனில் 11.05.1996 படித்து முடித்து மாஸ்டர் முடித்த சிவில் என்ஜினியருக்கு இந்து சமயத்தில் பிறந்த அழகான படித்துபட்டம் பெற்ற மணமகளை பெற்றோர் எதிர் பார்க்கின்றனர்.

மு.குறி மணமகனிற்கு 7 இல் செவ்வாய் இருக்கின்றது. செவ்வாய் தோஷ உள்ள மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு: 076 881 3648

## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் பண்ணைவேலை தெரிந்த தங்கி நின்று வேலை செய்யக்கூடிய வேலையாள், தோட்டவேலை தெரிந்த பெண்வேலையாள் தேவை.

தொடர்புகளுக்கு:

076 287 8655

## மணமகள் தேவை


20.09.1993 இல் பிறந்த லண்டனில் படித்து I.T பட்டம் பெற்ற இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த மணமகனுக்கு நன்கு படித்த பட்டம் பெற்ற அழகான மணமகளை பெற்றோர் எதிர் பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு:

076 881 3648




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நீங்கள் வெளிநாட்டுப் பயணம் பற்றி ஆர்வம் உள்ளவரா?

# எயிற்கின் ஸ்பென்ஸ் ட்ரவல்ஸிலுள்ள சுறுசுறுப்பான அணியில் இணையுங்கள்

எயிற்கின் ஸ்பென்ஸ் ட்ரவல்ஸ், இலங்கையிலுள்ள IATA சான்றிதழ்பெற்ற மிகப் பழமை வாய்ந்த பயணத்துறை முகவர் நிலையங்களில் ஒன்றாகும். இது 155 ஆண்டுகால வரலாற்றைக்கொண்ட எயிற்கின் அன்ட் ஸ்பென்ஸ் நிறுவனத்தின் பக்கபலத்தைக் கொண்டது. தனிநபர்கள், நிறுவனங்ள் மற்றும் குழுக்களின் வியாபார மற்றும் சுற்றுலாப் பயணங்களைக் கையாளும் நாம் இப்பொழுது எமது செயற்பாடுகளை விரிவுபடுத்துகின்றோம். எமது யாழ்ப்பாணக் கிளையில் இணைந்து பணியாற்றுவதற்கு விமான டிக்கட்டிங் (சான்றிதழ் முதல் டிப்ளோமா வரை) அல்லது IATA சான்றிதழ் பெற்ற, 20க்கும் 35க்கும் இடைப்பட்ட வயதான தகுதி வாய்ந்த இளைஞர்களுக்கு எம்மிடம் கவர்ச்சிகரமான தொழில் வாய்ப்புக்கள் உள்ளன. புனுளு பயன்பாட்டில் உங்களுக்கு அனுபவமிருந்தால், அது மேலதிக தகுதியாகும். பின்வரும் பதவிகளுக்குத் தொழில் வாய்ப்புக்கள் உள்ளன:

- **முகாமையாளர்:** Outbound
  10 வருடகால தொழிற்றுறை அனுபவம்
- **உதவி முகாமையாளர்:** Outbound
  7 வருடகால அனுபவம்
- **மேற்பார்வையாளர்:** Outbound
  டிக்கட்டிங்/ பக்கேஜ்கள்: 4 வருடகால தொழிற்றுறை அனுபவம்
- **நிறைவேற்று அலுவலர்:** Outbound
  டிக்கட்டிங் /பக்கேஜ்கள்: 3 வருடகால தொழிற்றுறை அனுபவம்

**தொழில்சார் அநுபவம் / பொறுப்புகள**

- **டிக்கட்டிங் மற்றும் வீசா அலுவல்கள்:**
  வாடிக்கையாளர்களுக்குச் சுமுகமான பயண ஏற்பாடுகளை உறுதிப்படுத்தும் வகையில் டிக்கட்டிங் மற்றும் வீசா செயன்முறைகளைக் கையாள்வதில் விரிவான அனுபவம்.
- **விடுமுறைப் பக்கேஜ் வடிவமைப்பு:**
  உல்லாசக் கப்பல் சவாரி, ஓய்வெடுத்தல், வியாபாரப் பயணம், தலயாத்திரை, விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு போன்ற பல்வேறு துறைகளில் தனித்துவமான மற்றும் குதூகலமான விடுமுறைப் பக்கேஜ்களை வடிவமைத்து நடைமுறைப்படுத்துவதில் விசேட திறமை.
- **விளம்பரப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல்:**
  வாடிக்கையாளர்களைக் கவர்வதற்கும் ஈடுபடச் செய்வதற்கும் அச்சு, சமூக ஊடகங்கள் மற்றும் ஏனைய தளங்களில் விளம்பரத் திட்டங்களை மேற்கொள்வதில் நிபுணத்துவம்.
- **விரிவான பயணத்துறைச் சேவைகள்:**
  Travel Cards (வெளிநாட்டு நாணயத்திற்கான பயணிகளின் அட்டைகள்), பயணக் காப்புறுதி, வெளிநாட்டில் ஹொட்டேல்களைப் பதிவு செய்தல் போன்ற சேவைகளைச் சிறப்பாகக் கையாண்டு வாடிக்கையாளர்களுக்கு முழுமையான பயணத் தீர்வை உறுதிப்படுத்தும் திறமை.
- **வியாபார உறவு முறை முகாமைத்துவம்:**
  விமான சேவை அணிகள், இராஜதந்திரத் தூதரகங்கள், வியாபார மன்றங்கள மற்றும் வழங்குநர்களுடன் வலுவான உறவுகளைப் பேணுவதன் மூலம் சுமுகமான செயற்பாடுகளுக்கும் ஒத்துழைப்பிற்கும் வசதியளித்தல்.
- **நிதி முகாமைத்துவம்:**
  விலைப்பட்டியலிடல், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகளைச் சிறப்பாக முகாமைத்துவம் செய்வதன் மூலம் நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் சரிநுட்பமாகவும் தாமதமின்றியும் இடம்பெறுவதை உறுதிப்படுத்துதல்.

**ஊதியம்:** கவர்ச்சிகரமான ஊதியப் பக்கேஜ்கள் வழங்கப்படும்.
உங்கள் சுயவிபரக் கோவையை 2024 செப்டெம்பர் 30ஆம் திகதி அல்லது அதற்கு முன travels.hr@aitkenspence.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை விடயக் கட்டத்தில் குறிப்பிடவும்.

Aitken Spence Travels

எயிற்கின் ஸ்பென்ஸ் ட்ரவல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
315, வொக்ஸோல் வீதி, கொழும்பு 02 | 0112 308 308 | www.aitkenspenceholidays.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Apartment விற்பனைக்கு**
வெள்ளவத்தை IBC Road இல்
4 Bedrooms, Duplex Apartment
மற்றும் 3 Bedrooms Apartment உடனடி விற்பனைக்கு உண்டு. No Brokers P/S
Contact: 077 522 2613

**அறை வாடகைக்கு**
யாழ். கோயில் வீதியில் தொழில் புரியும் ஆண்களுக்கு அறை வாடகைக்கு உண்டு.
077 640 8830

**VACANCY**
வெள்ளவத்தையில் இயங்கிவரும் பிரபல Construction நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை
- அனுபவமுள்ள ஓய்வு பெற்ற Civil Engineers (UDA / Building Department)
- அனுபவமுள்ள Assistant Marketing Manager & Marketing Manager
- அனுபவமுள்ள Digital Marketing Manager & Graphic Designer
- அனுபவமுள்ள Assistant Accountant & Accountant

Contact: 077 522 2613
E : info@royalt.lk

# ஜனாதிபதித் தேர்தலின் பின் உள்ளூராட்சித் தேர்தல்கள்!

## ஆராய்கின்றது தேர்தல்கள் ஆணைக்குழு

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்தவுடன் உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை நடத்துவதற்கு உத்தேசித்திருப்பதாகவும், இருப்பினும் தேர்தலின் பின்னர் நாடாளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்படுமாயின் அதுகுறித்து சிந்திக்க வேண்டியிருக்கும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினரும், சட்டத்தரணியுமான அமீர் பாயிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் அமீர் பாயிஸ், உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்தவுடன் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை நடத்துவது குறித்து ஆணைக்குழு ஆலோசித்து வருகின்றது.

தற்போது வரை தேர்தலை நடத்துவதில் எவ்வித தடங்கல்களும் இல்லை. அதே வேளை ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் புதிதாக தெரிவாகும் ஜனாதிபதி உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைக்கும் பட்சத்தில், அடுத்ததாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்தவேண்டியிருக்கும். அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை நடத்துவதன் சாத்தியப்பாடுகள் குறித்து சிந்திக்கவேண்டியிருக்கும்.

இருப்பினும் அத்தகைய சூழ்நிலையில் முதலில் நாடாளுமன்றத் தேர்தலையும், தாமதமின்றி அடுத்ததாக உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களையும் நடத்துவது குறித்து ஆணைக்குழு தற்போது ஆராய்ந்து வருகின்றது - என்றார்.

ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதனிடையே 2023ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் பிற்போடப்பட்டதன் காரணமாக வாக்காளர்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டிருப்பதாகவும், எனவே உள்ளூராட்சிமன்றத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் கடந்த மாதம் உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம)

**விற்பனைக்கு**
குபேட்டா 600 லான்மாஸ்ரர் பெட்டி 2 கலப்பையுடன்.
நிசன் டீசல் கார் 32-xxxx
077 069 8105

**மணமகள் தேவை**
யாழ். இந்து கௌரவ 42 வயது சொந்தமாக தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்ப்பில்லை.
தொடர்புகளுக்கு:-
077 905 8615

**வேலைவாய்ப்பு**
யாழ் நாவலர் வீதியில் அமைந்துள்ள சுப்பர் மார்கெட் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
- கணக்காளர் (Accountant)
- Computer Billing
- விற்பனைப் பிரதிநிதி ( Sales Assistant)
- காசாளர் (Cashier)

யாழ் மாநகர சபைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. வயது எல்லை 18-35 வரை.
தொடர்புகளுக்கு:- 077 419 5015

**RELIANCE INTERNATIONAL MIGRATION SERVICES**
**ரிலையன்ஸ் இண்டர்நெஷனல் மைகிறேசன் சேர்விசஸ்**
எமது பணிப்பாளர் மற்றும் சிரேஷ்ட புலம்பெயர் முகவர் திலினிக்கா விஜேசிங்க ஐ சந்தியுங்கள் (ஆயுசுயு: 1463863 ; ஆஜயு: 8531)
அவுஸ்திரேலியாவிற்கான உங்கள் அனைத்து விசா தேவைப்படுத்தல்களுக்கு
- பயிற்சியுடனான புலம்பெயர்வு - நேரடியாக, அரச நியமனம் மற்றும் அனுசரணை தெரிவுகள்
- மாணவர் விசாக்கள் - மாணவர் விசாக்கள், பாதுகாவலர் விசாக்கள்
- வருகைதருபவர் விசாக்கள் - சுற்றுலாப்பயணிகள், அனுசரணையுடனான விசாக்கள்வியாபார வருகைதருபவர்.
- குடும்பம் - பெற்றோர் விசாக்கள்,கணவன்/ மனைவி, பிள்ளை விசாக்கள், ஏனைய உறவினர் விசாக்கள்
- தங்கியிருப்போர் விசா - மாணவர் மற்றும் பட்டதாரி விசாக்கள்.
- வேலைவாய்ப்பு விசா - பயிற்சி,தற்காலிக , வேலை விசாக்கள் மற்றும் நிரந்தர விசாக்கள்.
- வதிவிட விசா - இறுதியில் திரும்பி வரும் விசாக்கள்.
- விசாக்களின் நிராகரித்தல் - நீதிமன்ற மேன்முறையீடுகள் அவுஸ்திரேலிய பிரஜாவுரிமை

ஆலோசனைக் கட்டணங்கள் அறவிடப்படும்
கொழும்பு - 2024 - ஒக்டோபர் 22 இலிருந்து 26 வரையிலானது.
உங்கள் சுயதரவை இலவச தகுதித்தன்மை பரீட்சித்தலுக்காக மின்னஞ்சல் மூலமாக அனுப்பவும்.
உங்கள் ஒருவரோடுஒருவரான ஆலோசனைக்கான முன்னேற்பாட்டிற்காக
மேலதிக தகவலுடன் தகுதியுள்ள விண்ணப்பதாரிகள் தொடர்பு கொள்ளப்படுவர்.
Email : colombo@rimigrations.com Web : www.rimigrations.com
உடன் தொடர்பு : 94 76 767 8281

**காணி விற்பனைக்கு**
- யாழ். ஆஸ்பத்திரி வீதியில், ஆஸ்பத்திரிக்கு முன்பாக 3 கடைகளும்,
- யாழ். நல்லூர் கோயிலுக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும்,
- யாழ். உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் 6 பரப்புக் காணியும்,
- யாழ். பிறவுண் வீதியில் நீராவியடிப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் பிறவுண் வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும்,
- யாழ். கைலாச பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் நாவலர் றோட் முகப்புடன் 2 பரப்பும், 4 குளி காணியும்,
- யாழ் K.K.S வீதியில் சிவன் கோயிலுக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

077 723 2535

**OFNIR ENGINEERING**
1576 1/2, Uppumadam Junction, K.K.S Road, Kondavil, Jaffna. 077 502 4745

**வேலைவாய்ப்பு**
யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக இயங்கி வரும் எமது கட்டட நிர்மாண வேலைகளுக்கு இரண்டு வருடத்திற்கு குறையாத வேலை அனுபவத்துடன் கூடிய பின்வரும் பணிகளுக்கு ஆள்கள் தேவை
- பொறியியலாளர் (Engineer)
- தொழில்நுட்ப உத்தியோகத்தர் (Technical Officers)
- அளவு சர்வையாளர் (Quantity Surveyor)
- கணக்காளர் (Accountant)

**மேசன், கூலி**
தகுதியானவர்கள் தங்களுடைய சுயவிபரக்கோவையை பின்வரும் Whatsapp இலக்கத்திற்கும் Email முகவரிக்கும் அனுப்பிவைக்கவும்
**OFNIR ENGINEERING**
1576 1/2, Uppumadam Junction,
K.K.S. Road, Kondavil, Jaffna.
Whatsapp - 077 502 4745
Email - ofnirengineering2021@gmail.com

**வேலையாட்கள் தேவை**
வத்தளை எலகந்தையிலுள்ள முன்னணி நிறுவனமான RG Brothers(Pvt)Ltd இற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
- கணக்கு நிர்வாகி - Accounts Executive
- இயந்திர இயக்குநர் - Machine Operator
- மேற்பார்வையாளர் - Supervisor
- கூலி தொழிலாளி - Wage Laborers

வயதெல்லை 20 - 30, ஆண்கள் மட்டும். தங்குமிட வசதி வழங்கப்படும்.
RG Brothers
No. 228 Canel Road,Elakand Hendala, Wattala.
076 929 2323, 077 434 6367

**ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்**
இந்தியாவில் ஆன்மிகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற
**அம்மன் அருள் வாக்கு**
தினமும் காலை : 9.00 - 12.00 மணிவரை
மாலை : 3.00 - 05.00 மணிவரை
- புலமைப்பரிசில் மாணவர்களுக்கான விசேட பூசைகள் நடைபெறுகின்றன.
- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?
- கால் வீக்கம், நாட்பட்ட ஆறாத புண்.

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
திருமதி வே. மோகனதாஸ்
இல.77, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
வெளிநாட்டிலிருந்தும் அருள்வாக்கு பெற தொடர்பு கொள்ளவும்
தொடர்பு: 071 241 1234, 021 221 1239

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

> அறுசுவை யுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
> மறுசிகை நீக்கியுண் டாரும் – வறிஞராய்ச்
> சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழ்எனின், செல்வம் ஒன்று
> உண்டாக வைக்கற்பாற் றன்று.
>
> –நாலடியார்

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2055 | ஆவணி 23 | ஞாயிற்றுக்கிழமை (08.09.2024) | சிகரம் :217

உற்சவி

# எம்.ஜி.ஆரும் நம்பியாரும்

ஒரு நண்பர் பகிடியாகச் சொன்னார், "சுமந்திரன் நம்பியாராக மாறி அரியநேந்திரனை எம்.ஜி.ஆர். ஆக்கிவிட்டார், இனி நடக்கப்போவது எம்.ஜி.ஆருக்கும் நம்பியாருக்கும் இடையிலான சண்டை. தமிழ் கூட்டு உளவியல் என்பது கதாநாயகன்வில்லன் என்ற துருவ நிலைப்பட்ட மோதலை ரசிப்பது. நமது புராணங்களில் இருந்து திரைப்படங்கள் வரையிலும் அப்படித்தான் காணப்படுகின்றன. இந்நிலையில் தமிழரசுக் கட்சியை தமிழ்க் கூட்டு உணர்வுக்கு மாறாக சஜித்தை நோக்கித் திருப்பியதனால் சுமந்திரன் இப்பொழுது வில்லனாக காட்டப்படுவார். அவர் வில்லனாகவும் அரியநேந்திரன் கதாநாயகனாகவும் காட்சிப்படுத்தப்படும் பொழுது அங்கே ஒரு திரைப்படம் ஓடும். அது தமிழ்ப் பொது உளவியலைக் கவரும். இனி தமிழ்ப் பொது வேட்பாளருக்கான பிரசாரம் தன்பாட்டில் நடக்கும். கதாநாயகனுக்கும் வில்லனுக்குமிடையிலான மோதல். அது அரியநேந்திரனை நோக்கி அதிகம் வாக்குகளை ஈர்க்கும்" என்று.

ஆனால் அரியநேந்திரனை ஒரு பொதுவேட்பாளராக முன்னிறுத்திய பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மக்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் தெளிவாகக் கூறுகிறார்கள்... "தமிழ் மக்களைத் திரட்டுவது; அல்லது ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ் மக்களை ஒன்றிணைப்பது; அல்லது தேசத்தைக் கட்டி எழுப்புவது என்பது ஒரு நபருக்கு எதிராகவோ ஒரு கட்சிக்கு எதிராகவோ செய்யப்படும் விடயம் அல்ல என்று. ஒரு நபருக்கு எதிராகவோ ஒரு கட்சிக்கு எதிராகவோ தேசத்தைக் கட்டி எழுப்பமுடியாது. தேசத்தைக் கட்டி எழுப்புவது என்பது ஆக்கபூர்வமானது. அது எதிர்மறையானது அல்ல. இந்த இடத்தில் வில்லர்களை முன்வைத்து அவர்களுக்கு எதிராக ஒரு மக்கள் கூட்டத்தை கட்டமைப்பது நிரந்தரமானது அல்ல. சரியானதுமல்ல" என்பது தமிழ் மக்கள் பொதுச்சபைக்குள் அங்கம் வகிக்கும் கருத்துருவாக்கிகளின் நிலைப்பாடாகும்.

ஆனால் தேர்தல் களம் அந்த நிலைப்பாட்டுக்கு மாறாக கதாநாயகன் வில்லன் என்று துருவ நிலைப்படத் தொடங்கி விட்டது. அதாவது தமிழ்ப்பொது உளவியலின் பொதுவான வாய்ப்பாட்டுக்குள் அது விழத் தொடங்கிவிட்டது. இதனால் அரியநேந்திரனை நோக்கி குவியும் வாக்குகளின் தொகை அதிகரிக்கலாம்.

தமிழரசுக் கட்சியில் உள்ள சுமந்திரன் அணியின் இந்த முடிவு ஓரளவுக்கு எதிர்பார்க்கப்பட்டது. அதில் புதிதாக ஒன்றும் இல்லை. ஏற்கனவே கட்சியின் இரண்டு மாவட்டக் கிளைகள் பொதுவேட்பாளருக்கு ஆதரவான நிலைப்பாட்டை உறுதியாக எடுத்திருந்த ஒரு பின்னணியில், தமிழரசுக் கட்சியின் மத்திய குழு சஜித்தை ஆதரிக்கும் முடிவை எடுத்திருக்கின்றது.

**தேர்தல் களம் நிலைபாட்டிற்கு மாறாக கதாநாயகன் வில்லன் என்று துருவ நிலைப்படத் தொடங்கி விட்டது. அதாவது தமிழ்ப் பொது உளவியலின் பொதுவான வாய்ப் பாட்டுக்குள் அது விழத் தொடங்கிவிட்டது. இதனால் அரிய நேந்திரனை நோக்கி குவியும் வாக்குகளின் தொகை அதிகரிக்கலாம்.**

கட்சியின் மூத்த உறுப்பினராகிய சிவஞானம் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை சஜித்தை ஆதரிப்பது மக்களுடைய கூட்டுணர்வுக்கு எதிரானது என்பது அவருக்குத் தெரிகிறது. இது கட்சித் தொண்டர்களுக்கும் தெரிகிறது. கடந்த வாரக் கட்டுரையில் கூறப்பட்டது போல, அரசியலை கணிதமாக, விஞ்ஞானமாக அணுகும் யாருக்கும் அது தெளிவாகத் தெரியும். சஜித்திடம் 13ஐத் தவிர வேறு எதுவும் இல்லை. சமஷ்டி கட்சி ஆதரவாளர்கள் 13வது திருத்தத்தை ஒரு வாக்குறுதியாக ஏற்றுக் கொள்ளத் தயாரா?

13 ஒரு புதிய தீர்வல்ல. ஏற்கனவே யாப்பில் இருப்பது. அப்படிப் பார்த்தால் யாப்பை நிறைவேற்றுவேன் என்று கூறும் ஒரு வேட்பாளருக்கு தமிழ் மக்களை வாக்களிக்குமாறு தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணி கேட்கின்றதா? இதை இன்னும் கூர்மையாகச் சொன்னால், ஒரு நாட்டின் அதி உயர் சட்ட ஆவணமாகிய யாப்பை நிறைவேற்றுவது தான் அந்நாட்டின் தலைவர்களுடையதும் அரசாங்கத்தினதும் பொறுப்பாகும். இலங்கைத் தீவு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையைக் கொண்டது. கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக எட்டு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிகள் பதவியில் இருந்திருக்கிறார்கள். இவர்களில் யாருமே யாப்பில் இருக்கும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தவில்லை என்பது எதனைக் காட்டுகிறது? நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிகள் இலங்கைத் தீவின் யாப்பை மீறி ஆட்சி செய்திருக்கிறார்கள் என்பதை காட்டுகின்றது. கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக யாப்பை மீறும் ஒரு பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு நாட்டில் இப்பொழுது ஒரு தலைவர் யாப்பை அமுல்படுத்துவேன் என்று கூறுகிறாராம் அவருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டுமாம்.



சுமந்திரன் அணியின் இந்த முடிவு தமிழரசுக் கட்சிக்குள் மேலும் பிளவுகளை அதிகப்படுத்துமா? பொதுவேட்பாளர் விடயம் தமிழரசுக் கட்சிக்குள் ஏற்கனவே காணப்படும் தலைமைத்துவப்போட்டியை மேலும் ஆழப்படுத்தக்கூடிய வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ஆதரவான அலையொன்று எழத் தொடங்கியிருக்கும் ஒரு பின்னணியில், சுமந்திரன் அணியின் முடிவு வந்திருக்கிறது. இலங்கை போன்ற நாடுகளில் தேர்தலுக்கு முதல் வாரம் அல்லது சில நாட்களுக்கு முன்னர்தான் வாக்களிப்பு அலை தோன்றும். தமிழ்த் தேசிய அரசியலுக்கும் இது பொருந்தும். தமிழ் நடுத்தர வர்க்கத்தில் ஆங்கிலம் தெரிந்த ஒரு பகுதியினர் ரணில் மீதும் ஆர்வமாக காணப்படுகிறார்கள். மாற்றத்தை விரும்பும் மற்றொரு பிரிவினர் அனுரமீதும் ஆர்வமாக காணப்படுகிறார்கள். இப்பொழுது தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணியானது சஜித்தை ஆதரிக்குமாறு கேட்டிருக்கிறது. அதனால் தமிழ் வாக்காளர்கள் நான்கு முனைகளில் சிதற டிக்கப்படுவார்களா?

அவ்வாறு தமிழ் வாக்காளர்கள் சிதறடிக்கப்படக்கூடாது என்று முடிவெடுத்துத்தான் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டிருக்கிறார். தமிழ் மக்களைக் கோர்த்துக்கட்டுவது, கூட்டிக்கட்டுவதுதான் என்று பொது வேட்பாளரை ஆதரிக்கும் தரப்பு தொடர்ச்சியாக கூறி வருகின்றது. ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவ்தற்கான முதன்மைக் காரணம் தமிழ் மக்களை ஒன்றிணைப்பது. தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைப்பது. தமிழ்க் கூட்டு உளவியலை பலப்படுத்துவது என்று அவர்கள் கூறி வருகிறார்கள். அதாவது அவர்கள் தமிழ் வாக்காளர்களைத் திரட்ட முயற்சிக்கிறார்கள். ஆனால் சுமந்திரனும் அவருடைய அணியும் தமிழ் வாக்காளர்களைச் சிதறடிக்கலாம் என்று நம்புகிறார்கள். உள்ளதில் பெரிய கட்சி என்ற அடிப்படையில் தாங்கள் எடுத்த முடிவை தமிழ் மக்கள் ஆதரிப்பார்கள் என்று அவர்கள் நம்பக் கூடும். ஆனால் தமிழ் மக்கள் கூட்டுணர்வோடு முடிவெடுத்த தருணங்களில் கட்சியையோ சின்னத்தையோ தலைவர்களையோ பொருட்படுத்தவில்லை என்பதற்கு கடந்த நூற்றாண்டு முழுவதிலும் உதாரணங்கள் உண்டு. கடந்த நூற்றாண்டில், ஜி.ஜி. பொன்னம்பலம் மகாதேவாவை தோற்கடித்தார். "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து செல்லடா" என்று கூறித் தோற்கடித்தார். ராமநாதன் குடும்

17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுத் ஜெயவர்த்தன



# விம்ப அரசியலும் இலங்கையும்

இலங்கையில் தேர்தல்களின்போது, குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலின் போது, வேட்பாளர்களின் தோற்றத்தைக் குறிவைத்து பல்வேறு கருத்துகள் பேசப்படுவது வழக்கம் .

இலங்கையில் ஒரு நபரின் மீசை, உருவம், ஆங்கிலப் புலமை மற்றும் சிங்களம் பேசும் திறன், உடைகள், குழந்தைகள் இருப்பது போன்ற பல்வேறு வெளிப்புறக் காரணிகள் அடிப்படையில் அரசியல்வாதிகளுக்கு வாக்களிக்கும் போக்கு இருப்பதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானப் பிரிவின் பேராசிரியர் விஷாக சூரியபண்டார சுட்டிக்காட்டுகின்றார்.

இருப்பினும் 'அரகலய' மக்கள் போராட்டம் நடந்து கிட்டத்தட்ட இரண்டு வருடங்களுக்குப் பின்னர் இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகிறது. இம்முறை தேர்தலில் அத்தகைய பிம்பங்கள் எந்தளவுக்கு செல்லுபடியாகும் என்பது சிந்திக்கவேண்டிய ஒன்று. 'வெளிப்புற விம்பம்' என்பது பொதுவாக ஒரு குறிப்பிட்ட நபரைப் பற்றி மற்றவர்கள் வைத்திருக்கும் அனைத்து கருத்துகள், உணர்வுகள் மற்றும் மதிப்பீடுகளைக் குறிக்கிறது.

ஆசியாவில் 'விம்ப அரசியல்' பரவலாக இருக்கிறது. ஐரோப்பாவிலும் சில இடங்களில் 'விம்ப அரசியல்' காணப்படுகிறது. சமீபத்தில், பிரிட்டன் பிரதமர் சர் கெய்ர் ஸ்டார்மர் தேர்தல் வெற்றிக்குப் பிறகு தனது உரையில், மக்கள் "மாற்றத்துக்கு தயாராக உள்ளனர்" என்றும், " விம்ப அரசியலுக்கு முடிவு கட்டுவோம்" என்றும் சபதம் செய்தார்.

## மஹிந்தவின் விம்ப அரசியல்

அடர்த்தியான மீசை, தேசிய உடை, குரக்கன் சால்வை, இனம் மற்றும் மதம் தொடர்பாக அடிக்கடி பயன்படுத்தப்படும் வார்த்தைகள் ஆகியவை மட்டுமின்றி 30 ஆண்டு கால உள்நாட்டுப் போரின் முடிவும் மஹிந்த ராஜபக்சவின் விம்ப அரசியல் வளர்ச்சியில் வலுவான தாக்கத்தை ஏற்படுத்தின. மஹிந்த ராஜபக்ச தேசிய உடை அணியும் கிராமவாசி என்ற கருத்தும் பரப்பப்பட்டது. அவரது ஆதரவாளர்கள் அவரை 'பையா', 'கிராம மேயர்' என்றும் செல்லமாக அழைத்தனர். "ஹெல்பிங் அம்பாந்தோட்டை பண மோசடி" (Helping Hambantota) போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டபோதும் அவர் கட்டமைத்த விம்பத்தினால் இரண்டு முறை இலங்கை ஜனாதிபதியாக அவரால் வர முடிந்தது.

மஹிந்த ராஜபக்ச கட்டியெழுப்பிய விம்பம் கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதி பதவிக்கு வரச் செய்தது. அது மட்டுமல்லாமல் கோத்தாபயவும் தான் ஒரு வலுவான தலைவர் என்ற விம்பத்தை உருவாக்கியிருந்தார்.

## ரணிலின் விம்பம்

மற்றொரு புறம், ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில், இலங்கையின் பெரும்பாலான வாக்காளர்கள் மத்தியில் அவர் பற்றி உருவான விம்பம் வித்தியாசமானது.

ரணில் விக்கிரமசிங்கவின் உடைகள், சரளமான ஆங்கிலம் மற்றும் சிங்களம் பேசுதல், வெளித்தோற்றம், போரை காட்டிலும் பேச்சுவார்த்தையில் காட்டிய ஆர்வம் போன்ற காரணங்களால் அவர் 'துரோகி, மேற்குலக சார்புடைய ஆட்சியாளர்' என எதிர்க்கட்சிகளால் சித்திரிக்கப்பட்டார். ரணில் விக்கிரமசிங்கவுக்கு குழந்தைகள் இல்லை என்றும் விமர்சிக்கப்பட்டது. அவரைச் சுற்றி கட்டமைக்கப்பட்ட அந்தவிம்பம் அவரது அரசியல் பயணத்துக்கு பாதகமாக இருந்தது. ரணில் எதிர்கொண்ட அளவுக்கு கடுமையான விமர்சனங்கள் இல்லை என்றாலும் சஜித் பிரேமதாஸவும் குழந்தைகள் இல்லை என்ற விமர்சனத்தை எதிர்கொண்டார்.

"இலங்கையில் உள்ள பெரும்பான்மையான வாக்காளர்கள் பல ஆண்டுகளாக விம்பஅரசியலை பார்த்து, தலைவர்களை தேர்வு செய்து பாடம் கற்றுள்ளனர். இந்த ஜனாதிபதித் தேர்தலில் அந்த வெளி விம்பம் செல்லுபடியாகாது என்று நான் நினைக்கிறேன். குறிப்பாக பொருளாதார நெருக்கடிக்கு ஆளான பிந்தைய சூழலில், ஜனாதிபதித் தேர்தலின்போது இது கண்டு கொள்ளப்படாது என்று தோன்றுகிறது." இவ்வாறு பேராசிரியர் விசாக சூரியபண்டார தெரிவித்தார். ஒரு நாட்டை முறையாக ஆள்வதற்கு அரசியல்வாதியின் வெளி விம்பம் முக்கியமல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இப்போது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பக் கூடிய, தெளிவான செயற்றிட்டம் கொண்ட, தொலைநோக்குப் பார்வை உள்ள, வெளிநாடுகளை சமாளிக்கக்கூடிய ஒருவரைத் தலைவராக நியமிக்கவேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். வெளிப்புற விம்பம் மீதான நம்பிக்கை இப்போது குறைந்துவிட்டது." என்றும் பேராசிரியர் விசாக சூரியபண்டார கூறினார்.

## 'இந்த முறை நிலைமை வேறு'

இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களின் வெளி விம்பம் தொடர்பான எவ்வித விமர்சனங்களும் அவமானக் கருத்துகளும் இடம்பெறவில்லை என்கிறார் அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் ஜயதேவ உயங்கொட.

"கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மிகவும் விமர்சிக்கப்பட்ட அரசியல்வாதி ரணில் விக்கிரமசிங்க தான். ரணில் விக்கிரமசிங்கவை எடுத்துக்கொண்டால், பொதுஜன பெரமுன, தேசிய சுதந்திர முன்னணி போன்ற கட்சிகள் அவரை விமர்சித்துள்ளன. இந்த ஜனாதிபதித் தேர்தலில் அவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப்படவில்லை. முன்னர் அவரை விமர்சித்த பலர் தற்போது அவருடன் உள்ளனர். தற்போது இரு தரப்பினரும் பரஸ்பர உதவிகளை பெற்று வருகின்றனர்.

எனினும், ஆதரவற்ற நிலையில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் நடவடிக்கையில் ரணில் விக்கிரமசிங்க மக்களிடம் நெருக்கம் காட்டுவதில்லை ரணில் விக்கிரமசிங்க மிகவும் மதிப்புமிக்க உடைகளை அணிந்து கொண்டு தனது வாக்காளர் மத்தியில் உரையாற்றுவதற்காக கூட்டங்களுக்குச் செல்வதை நான் பார்த்திருக்கிறேன். அவருடைய சூட், காலணி மற்றும் ரை என்பன மிகவும் விலை உயர்ந்தவை. ஆனால் இலங்கையில் பெரும்பான்மையான மக்கள் அவ்வாறு ஆடைகள் அணிய முடியாத நிலையில் உள்ளனர். அப்படியானால் ரணில் விக்கிரமசிங்க மீது மக்களுக்கு என்ன மாதிரியான விம்பம் இருக்கும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது." என்கிறார் பேராசிரியர் ஜயதேவ உயங்கொட.

> **தலைவர்களின் வெளித் தோற்றத்தை பற்றி இப்போது மக்கள் கவலைப்படுவதில்லை. பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வேட்பாளர்களின் வெளிவிம்பம் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது. விம்பங்களை வைத்து அரசியலைத் தீர்மானிக்கும் நிலை தற்போது மாறியுள்ளது.**


"தலைவர்களின் வெளித் தோற்றத்தைப் பற்றி இப்போது மக்கள் கவலைப்படுவதில்லை. பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வேட்பாளர்களின் வெளிவிம்பம் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது. விம்பங்களை வைத்து அரசியலைத் தீர்மானிக்கும் நிலை தற்போது மாறியுள்ளது. இந்த நேரத்தில், வெளி விம்பம் பற்றிய கவலை குறைந்துள்ளது. மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியால், ஒரு தெளிவான செயற்றிட்டத்துடன் கூடிய தலைவரையே அவர்கள் விரும்புகிறார்கள். எனவே, இப்போது இந்த விம்ப அரசியலைப் பற்றிப் பேசுவது குறைந்துள்ளது என்று நான் நினைக்கிறேன்" என்பது கலாநிதி தயான் ஜயதிலக்கவின் கருத்தாக உள்ளது. வெளிவேடங்களுக்கு மக்கள் மயங்கிய காலம் மலையேறிவிட்டது. அதனை இந்தத் தேர்தல் மிக அழுத்தமாகவே சொல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சை எனும் முகமூடி அணிந்த வியாபாரம்

நிசார் முஹம்மத் நிஸ்மின்,
இரண்டாம் வருட சிறப்பு கற்கை
கல்வி பிள்ளை நலத்துறை,
கிழக்கு பல்கலைக்கழகம்,



இலங்கை கல்வி வரலாற்றில் இலவசக் கல்வியின் தந்தை எனப் போற்றப்படும் சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கராவால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இலவச கல்வித் தொடரில், வருமானம் குறைந்த திறமைமிக்க மாணவர்களின் எதிர்கால கல்வி வாழ்க்கையை ஊக்கப்படுத்துவதற்காகவே 1952 ஆம் ஆண்டு ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தப்பரீட்சை பலவிதமான எதிர்மறை தாக்கங்களை சமூகத்தில் ஏற்படுத்தியுள்ளது.

இந்தப்பரீட்சை ஆரம்பிக்கப்பட்ட நோக்கங்களுள் ஒன்று "வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு உபகார உதவித்தொகை வழங்குதல்" மற்றையது "பின்தங்கிய கிராமப்புற மாணவர்களுக்கு வளமுள்ள நகரப் பாடசாலையில் கற்க இட ஒதுக்கீடு செய்வது". இந்த நோக்கங்களை வைத்துப் பார்க்கும் போது பரீட்சையில் சித்தியடைந்தவர்களை மூன்றாக வகுக்கலாம். அரசு தொழில் புரிவோரின் பிள்ளைகள், பண வசதி படைத்தவர்களின் பிள்ளைகள், பண வசதி குறைந்த பெற்றோரின் பிள்ளைகள். இதில் அரச தொழில் புரிபவர்களுக்கு போதுமான வருமானம் கிடைக்காவிடினும் நிதி உதவி வழங்கப்படுவதில்லை. அடுத்ததாக பண வசதி படைத்த பெற்றோரின் பிள்ளைகளுக்கு போதுமான வசதி இருந்த போதும் உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்குவதன் ஊடாக புலமைப்பரிசில் நிதியை பெற்றுக் கொள்கின்றனர். இதனால் வறுமை கோட்டில் உள்ள பிள்ளைகள் புலமைப் பரிசில் நிதியைப் பெறும் தகைமையை இழந்து புறக்கணிக்கப்படும் சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்படுகின்றது. நகர்ப்புறப் பாடசாலையில் அனுமதி கிடைப்பதில் அதிகமான பெற்றோர் ஆர்வம் காட்டுகின்றனர். நகர்ப்புறப் பாடசாலைக்கு செல்ல அனுமதி பெறுவதற்கான வாய்ப்புக் கிடைத்தாலும் பண வசதி குறைந்த பிள்ளைகளுக்கு இது ஒரு கனவாக அமைந்து விடுகின்றது.

"கண்ணைத் திறக்கும் கல்வி இங்கே குருடாய் போனதே, காசு இருந்தால் கதவு திறக்கும் வணிகம் ஆனதே" எனும் வரிகளுக்கு அமைய கல்வி வர்த்தகத்துக்கான சிறந்த தளமாக புலமைப் பரிசில் பரீட்சை மாறியுள்ளது. வருடா வருடம் நடைபெறும் இந்தப்பரீட்சைக்காக மாணவர்கள் தரம் மூன்றில் இருந்தே தயார்படுத்தப்படுகிறார்கள். சில ஆசிரியர்கள் வெளி மாவட்டங்களில் இருந்து பரீட்சை வினாத்தாள்களை எடுத்து மாணவர்களுக்கு விற்பனை செய்கின்றனர். இதனால் மாணவர்களின் சுய சிந்தனை, தேடல் என்பன தடைப்படுகின்றன. அத்தோடு இந்தப்பரீட்சையானது கௌரவப் பிரச்சினையின் புதிய பரிணாமமாக பெற்றோரிடையே வளர்ச்சி பெற்றுள்ளது. பிள்ளைகள் பரீட்சையில் ஆர்வம் காட்டுவதை விட பெற்றோரே கூடுதலான ஆர்வம் காட்டுகின்றனர். ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை பெற்றோருக்கான போட்டியாகவும், பாடசாலைகளுக்கிடையிலான போட்டியாகவும், ஆசிரியர்களுக்கிடையிலான போட்டியாகவும், பிரத்தியேக வகுப்புகளுக்கு இடையிலான போட்டியாகவும் இன்று மாற்றம் கண்டுள்ளது.

இவ்வாறு ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை போட்டியை முதன்மைப்படுத்துவதனால் விளையாட்டு, கலை - இலக்கியத் துறைகள், சமூக உறவுகள் போன்ற உள முன்னேற்ற செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுவதில்லை என்ற குற்றச்சாட்டு புத்திஜீவிகளிடையே மிக நீண்ட காலமாக இருந்து வருகின்றது. ஏனைய துறைகளில் ஈடுபடுவதற்கு பாடசாலைகளோ, பெற்றோரோ மாணாக்கர்களுக்கு ஊக்கமளிப்பதில்லை. இதன் வாயிலாக அநேகமான ஆரம்பக் கல்வி ஆராய்ச்சி முடிவுகள் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தப்படும் பிள்ளைகள் இயந்திரங்களாக மாற்றப்படுகின்றனர் என்ற உண்மையை உரக்க வெளிப்படுத்தியுள்ளன. ஐந்தாம் தர மாணவர்கள் ஓய்வுநேரம் இன்றி பாடசாலை, பிரத்தியேக வகுப்புகள், வீட்டுப் படிப்பு என்ற வட்டத்துக்குள்ளேயே இயங்குகின்றார்கள். பாடசாலைகளுக்கு முன்னால் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களின் புகைப்படங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருப்பதை பார்த்து ஈர்க்கப்படும் பெற்றோர் தனது பிள்ளையும் சித்தியடையுமாறு வற்புறுத்துகிறார்கள், துன்புறுத்துகிறார்கள். சித்தியடையத் தவறும் பட்சத்தில் சில பெற்றோர் பிள்ளைகளை உடல், உளரீதியாக தாக்கவும் தயாராகிவிடுகின்றனர். இதனால் மனதளவில் பாதிக்கப்படும் பிள்ளைகள் பெற்றோரை வெறுப்பதோடு, தவறான பாதையில் சென்று காலப்போக்கில் சமூகப்பிறழ்வான நடத்தைகளிலும் ஈடுபடுகின்றனர்.

பிள்ளைப்பருவத்தின் ஆரம்பக்கட்டம் என்பது உடலியல், உளவியல் விருத்தியின் தீர்க்கமான சந்தர்ப்பமாகும். இந்தக்காலப் பிள்ளைகளின் சாதகமான வளர்ச்சிக்கு ஏற்ற சூழலை உருவாக்க ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் பாடசாலையின் முகாமைத்துவம் என்பனவற்றால் கவனம் செலுத்தப்படல்வேண்டும்.

புலமைப்பரிசில் பரீட்சையில் பங்கு கொள்ளும் அனைத்து மாணவர்களும் நிவாரணத்தினுள் உள்வாங்கப்படுபவர்கள் இல்லை என்பதனை அறிய முயற்சிக்க வேண்டும். பரீட்சைகள் திணைக்களத்தின் தேசிய மதிப்பீடு மற்றும் பரிசோதனை சேவையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் வெளியிடப்பட்ட தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் செயற்றிறன் மீளாய்வு அறிக்கைப்படி, ஒவ்வொரு ஆண்டும் 3 இலட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் இந்தப் பரீட்சையை எழுதுகிறார்கள். அந்த ஆண்டு 9.5 வீதமான மாணவர்கள் மாத்திரமே சித்தி அடைவதாக குறிப்பிட்டுள்ளது. இவ்வாறு சித்தி பெற்றவர்களிலும் 2 வீதமான மாணவர்கள் மாத்திரமே பல்கலைக்கழகத்துக்குச் செல்வதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

மாணவர்களின் உடல் வளர்ச்சி வீதம், உடல் முதிர்ச்சியின் அளவு போன்றவற்றில் காணப்படும் வேற்றுமைகளுடன் மாணவர்களது நுண்ணறிவு, நாட்டங்கள், கவர்ச்சிகள், செய்திறன்கள், மனவெழுச்சி வேறுபாடு, ஆர்வங்கள், ஆசைகள், மனப்பாங்குகள் போன்ற ஒவ்வொரு பண்பிலும் வேறுபாடுகள் உள்ளதை கல்வி உளவியல் தெளிவுபடுத்துகிறது. அறிதல், மனவெழுச்சி, முயற்சி ஆகிய செயல்கள் இணைந்த ஒவ்வொரு பண்பிலும் மாணவரிடையே வேற்றுமைகள் உள்ளன.

இடைநிலை வகுப்பு மாணவர்களை விட ஆரம்பப்பிரிவு மாணவர்களிடையே தனியாள் வேற்றுமைகள் அதிகளவாகக் காணப்படும் என்பது உளவியல் கண்ணோட்டமாகும். ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் ஆரம்பப் பிரிவு மாணவர்களாகவே காணப்படுகின்றனர். இவற்றைக்கருத்தில்கொண்டு, அறிவு பூர்வமாகச் சிந்தித்துச் செயற்படவேண்டியது பெற்றோர், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கல்வித்துறையினரின் கடமையாகும். தலைவலி, மனநோய் போன்ற உபாதைகளுக்காக சிகிச்சை பெறும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து, இப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் இயல்பாகச் சிந்தித்து செயற்படும் நிலைக்கு வரவேண்டுமாயின், பாடசாலைகளிடையே போட்டி நிலைமையை உருவாக்கி, பணம் வசூலிக்கும் தொழிலாக உருவெடுத்துள்ள இந்தப்பரீட்சையின் கட்டமைப்பு மற்றும் நோக்கம் முதலானவை மாற்றம் பெற வேண்டியது அவசியமாகும். ■

# எம்.ஜி.ஆரும்....


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்தில் வந்த உயர் குழாத்தைச் சேர்ந்த மகாதேவாவை ஜி.ஜி. தோற்கடித்தார். செல்வநாயகம் ஜி.ஜி.யை இலட்சியத்தின் பெயரால் தோற்கடித்தார்.

அதன் பின் தமிழ் ஐக்கியத்தின் பெயரால்; கொள்கைக்காக, தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னத்துக்கு தமிழ் மக்கள் வாக்குகளை அள்ளிக் கொடுத்தார்கள். அதன்பின் இந்திய அமைதி காக்கும் படை நாட்டில் நிலைகொண்டிருந்த காலகட்டத்தில், நடந்த பொதுத் தேர்தலில், முன்பின் அறிமுகம் இல்லாத சுயேச்சை சின்னத்துக்கு தமிழ் மக்கள் வாக்களித்தார்கள். உதய சூரியனைப் பின்னுக்குத் தள்ளினார்கள். வேட்பாளர்களின் முகமே தெரியாத ஒரு போர் சூழலில், தமிழ் மக்கள் ஒன்று திரண்டு வெளிச்ச வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து, 13 ஆசனங்களை ஈரோஸ் இயக்கத்துக்கு கொடுத்தார்கள். தேர்தலில் ஈரோஸ் இயக்கத்தின் பிரமுகராகிய பராவை இந்திய அமைதி காக்கும் படை கைதுசெய்து முகாமில் அடைத்து வைத்திருந்தது. தேர்தல் முடிவுகள் வெளிவந்த பொழுது கைதியாக இருந்த பராவை "நீங்கள் இப்பொழுது எம்.பி. ஆகிவிட்டீர்கள் வெளியே போகலாம்" என்று கூறி அனுப்பி விட்டார்கள். அத்தேர்தலுக்குப் பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உதயமாகியபொழுது உதயசூரியன் சின்னத்தை தமிழ் மக்கள் தோற்கடித்தார்கள். உதயசூரியன் சின்னமானது ஒரு காலம் வெற்றியின் சின்னமாக இருந்தது. ஐக்கியத்தின் சின்னமாக இருந்தது. அப்படிபட்ட உதயசூரியன் சின்னத்தை தோற்கடித்த ஒரு மக்கள் கூட்டம், முகம் தெரியாத வேட்பாளர்களுக்கு வாக்களித்து சுயேச்சையை வெல்ல வைத்த ஒரு மக்கள் கூட்டம் [illegible]ம் பொழுது, சின்னமும் கட்சியும் ஒரு பொருட்டே அல்ல. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சயனிகா சிறிகாந்த்
ஊடகக்கற்கைகள் துறை,
கலைப்பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

# சுதந்திர இலங்கையின் தீர்க்கமான தேர்தல்!

இலங்கை ஜனாதிபதித் தேர்தலை நிர்வகிக்கும் சட்டக் கட்டமைப்பானது நாட்டின் அரசமைப்பிலும் ஜனாதிபதித் தேர்தல் சட்டத்திலும் வேரூன்றியுள்ளது. 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலானது மிகுந்த சவால்மிக்க தேர்தலாகவும் விருப்புவாக்கின் மூலம் ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் தேர்தலாகவும் அமைய அதிக வாய்ப்புகள் உள்ளன. எனவே வாக்களிப்பு முறை தொடர்பான புரிதலை மக்கள் வளர்த்துக்கொள்ளவேண்டும். அனைவரும் விருப்பு வாக்குகளை வெவ்வேறுபட்ட மூன்று பேருக்கு வழங்கமுடியும்.

**வாக்களிப்பு முறை 1**

ஒருவர் தான் விரும்பிய ஒருவரின் பெயருக்கு நேரே உள்ள சின்னத்துக்கு அருகில் உள்ள பட்டியில் × அடையாளம் இடலாம் அல்லது 1 என இலக்கமிடலாம். × என அடையாளம் இட்டால் ஏனைய விருப்பு வாக்குகளை செலுத்தமுடியாது. அவ்வாறு செலுத்தினால் அது செல்லுபடியற்ற வாக்காகக் கருதப்படும்.

**வாக்களிப்பு முறை 2**

ஒருவர் தான் விரும்பிய ஒருவரின் பெயருக்கு நேரே உள்ள சின்னத்துக்கு அருகில் உள்ள பெட்டியில் 1 எனவும் இன்னும் ஒருவருக்கு 2 எனவும் இலக்கமிட்டு இரண்டு வாக்குகளை அளிக்க முடியும்.

**வாக்களிப்பு முறை 3**

ஒருவர் தான் விரும்பிய ஒருவரின் பெயருக்கு நேரே உள்ள சின்னத்திற்கு அருகில் உள்ள பெட்டியில் 1 எனவும் இன்னொருவருக்கு 2 எனவும் இன்னும் ஒருவருக்கு 3 எனவும் இலக்கமிட்டு மூன்று வாக்குகளை அளிக்கமுடியும். இவற்றைத் தவிர வேறு ஏதாவது ஒரு வகையில் அளிக்கப்படுகின்ற வாக்குகள் செல்லுபடியற்ற வாக்குகளாகக் கருதப்படும்.

## எத்தனை வீத வாக்குகள்?

ஒரு வேட்பாளர் வெற்றி பெறவேண்டும் என்றால், தேர்தலில் அளிக்கப்படுகின்ற வாக்குகளில் நிராகரிக்கப்பட்ட வாக்குகள் தவிர்த்து செல்லுபடியான வாக்குகளில் 50 வீதமான வாக்குகளைப் பெறவேண்டும். ஒருவேளை எந்த வேட்பாளரும் 50 வீதமான வாக்குகளைப் பெற்றிருக்காவிடின் என்ன நடக்கும் என்பதே இன்று பலரின் கேள்வியாக இருக்கின்றது. இந்நிலையில் தேர்தல் ஆணைக்குழு இரண்டாவது வாக்கு எண்ணும் முறைக்குச் செல்லும். அதாவது எவரும் 50 வீதமான வாக்குகள் பெறாத நிலையில் முதலாவது அதிகூடிய வாக்குகளை பெற்றவர்களையும், இரண்டாவது அதிகூடிய வாக்குகளைப் பெற்றவர்களையும் தெரிந்தெடுப்பார்கள். ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களின் வாக்களிப்பு அட்டையில் உள்ள விருப்பு வாக்குகளுக்கு அமைய அவர்கள் முதலிரு இடங்களைப் பெற்றுக் கொண்டவர்களுக்குப் பகிர்வார்கள். முன்னர் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல்களுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது இந்தத் தேர்தல் முற்றிலும் வேறுபட்ட ஓர் இயல்பைக் கொண்டிருப்பதை அவதானிக்கமுடிகிறது. ஜனாதிபதித் தேர்தல்களில் இதுவரையில் இருந்து வந்த இருமுனைப் போட்டியாக அல்லாமல், இம்முறை நான்குமுனைப் போட்டி காணப்படுகின்றது. அதனால் பெரும்பாலும் இம்முறை வேட்பாளர்கள் எவரும் முதல் சுற்றில் 50 வீதமான வாக்குகளைத் தனித்துப் பெற்றுக்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டு, இரண்டாம் சுற்று வாக்கு எண்ணிக்கையில் விருப்பு வாக்குகளே வெற்றியாளரைத் தீர்மானிக்க அதிக சந்தர்ப்பம் உண்டு. எனவே எங்கள் வாக்குகள் செல்லுபடியற்ற வாக்காக மாறாமல், சரியான முறையில் செலுத்தி அதன் வலிமையை உணர்த்தவேண்டும்.



பாகம் 2

# ஊர்ப்புதினம்

இராகவன்

1987 ஒப்றேசன் லிபறேசன் மூட்டம் இலங்கை ஆமி முன்னேறி வந்து ஊருக்குள்ள 'காம்ப்' அடிச்சிருந்தாப் போலை மூத்தண்ணாவும் இளையண்ணாவும் கொழும்புக்கு ஓடிட்டாங்கள். நாரஹென்பிட்டிய பொலிஸ்ரேசனிலதான் அப்பா வேலை செய்தவர். அவங்கள் அங்கைபோய் அப்பாவோட பொலிஸ் குவாட்டர்ஸில நிண்டவங்கள். நானும் அம்மாவும் மட்டும் ஊரிலயிருந்தம்.

எங்களோட ஊரிலயிருந்த ஆக்களில ஒராள் நவண்ணாவின்ர தாய் (நவண்ணா ஊருக்குள்ள ஆமி வந்த கையோட வறணிக்குப் போகிட்டான்). மற்றது நான் லொஜிக் நவத்தைப் பற்றி ஊர்ப்புதினத்தில எழுதேக்குள்ள இந்து மதியக்காவைப் பற்றிக் குறிப்பிட்டது உங்களுக்கு ஞாபகமிருக்கும். அவையெல்லாம் ஆமி வர முன்னமே வவுனிக்குளத்துக்குப் போகிட்டினம் அவையின்ர வீட்டில தாத்தாவும், அம்மம்மாவும் இருந்தவை. அங்கால இரண்டு வீடு தள்ளி பொன்னப்பாவும் அவரின்ர மனிசிக்காறி அன்னமக்கையும் இருந்தவை. மற்றது நான் ஊர்ப்புதினம் முதலாம் பாகத்தில எழுதின எங்கட பேராசிரியர் சிவலிங்கராஜாவின்ர ஒண்ட விட்ட அண்ணரான பெரியாம்பியண்ணை எண்டு இந்தளவு பேருந்தான் அப்ப ஊருக்குள்ளயிருந்தாக்கள். இரவில நானும் அம்மாவும் நவண்ணாவின்ர தாயும் தாத்தா, அம்மம்மா இருந்த வீட்டில போய்ப் படுப்பம். பொன்னப்பாவும் அன்னமக்கையுங் கூட இங்கைதான் வந்துபடுக்கிறவை. தாத்தாவின்ர பெயர் சிற்றம்பலம். அவர் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் பிரின்ஸிப்பாலயிருந்து பென்சன் எடுத்தவர். அம்மம்மாவின்ர பெயர் தெய்வானை.தாத்தா நல்ல கறுவல் அம்மம்மா நல்ல சிவப்பி. அவா மற்றாக்களை மாதிரி நிமிந்து நடக்க மாட்டா. முதுகு கூன் விழுந்து கூனிக் கூனித்தான் நடப்பா.

இந்துமதியக்காவின்ர தம்பிமார் யோகண்ணா, முருகன், கண்ணன் எல்லாம் எனக்குச் சிநேகிதம் எண்டதால அவங்கள் அவையளத் தாத்தா,அம்மம்மா எண்டு தான் கூப்பிடுவாங்கள், அவங்கள் கூப்பிர்றதைப்பாத்து நானும் அவையளைத் தாத்தா அம்மம்மா எண்டுதான் கூப்பிடுவன். நான் மட்டுமில்லை எங்கட வீட்டாக்கள் அயலெல்லாம் இவையளத் தாத்தா, அம்மம்மா எண்டு தான் கூப்பிர்றது. வழமையா நான்,சிவனெல்லாம் முருகன் கண்ணனோட அவங்கட வீட்டை விளையாடப்போனால் தாத்தா, அம்மம்மா.முருகன் கண்ணன்ர தாய் புனிதமக்கா இவையெல்லாம் எங்களைச் சாப்பிடப் பண்ணித்தான் விடுவினம். இந்த விருந்தோம்பல் வேறயொரு வீட்டிலயும் கிடைக்காது.

ம்..... சரி இப்ப விசயத்துக்கு வருவம். ஊர்முழுக்க ஆமியின்ர கட்டுப்பாட்டிலை வந்தாப் போல ஒருநாள் திடீரெண்டு எங்கட தல்லையப்புலம் பத்திரகாளி கோயிலுக்கு முன்னுக்கு இருக்கிற தரவையில ஹெலிகொப்ரர் ஒண்டு வந்து இறங்கிச்சுது. அதில பைலட் மட்டும் தானிருந்தவன். அவன் ஹெலியிலயிருந்து இறங்கி நேர பத்திரகாளி கோயில் றோட்டால நடந்து வந்தான். அப்ப நவண்ணா வீட்டில் தான் நானும் அம்மாவும் நவண்ணாவின்ர தாயும் நிண்டனாங்கள். அப்ப பின்னேரமொரு மூண்டு மணியிருக்கும். வீட்டுக்குள்ள நிண்டு கிறில் கல்லு நீக்கலுக்காலை மூண்டு பேரும் பார்த்துக்கொண்டு நிக்கிறம்.அவன் விறுவிறெண்டு நடந்து கனகராவனவுப்பிள்ளையார் கோவிலயும் கடந்து போனான். போய்ப் பெரியாம்பியண்ணையின்ர வீட்டுக்கதவைத்தட்டினான். கொஞ்சநேரஞ்கழிச்சு அவர் வந்து கதவைதிறந்து ஏதோ கதைச்சிட்டு உள்ள கூட்டிக் கொண்டு போனார் .

"ஹெலிகாறன் போகேக்குள்ள கோயிலடியல நிண்டு முசுப்பாத்தி விட்ட அழிவாரைத் தேடித்தான் வந்திருக்கிறாங்கள் " எண்டு அம்மா சொன்னா.

(தொடரும்)

56

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்குதமிழால் எம்.பி.க்களுக்கு வந்த சோதனை






○ கே.வி.தவராசா

இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 157அ(1) இல் 'இலங்கையின் ஆள்புலத்துக்குள்ளாகத் தனி அரசொன்று ஸ்தாபிக்கப்படுவதற்கு ஆளெவரும் இலங்கைக்கு அல்லது இலங்கைக்கு வெளியில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவு அளித்தல், ஆக்கமளித்தல், ஊக்குவித்தல், நிதியுதவுதல். ஊக்கமளித்தல் அல்லது பரிந்துரைத்தல் ஆகாது' என்று கூறப்பட்டுள்ளது. இலங்கை அரசியலமைப்பின் 157(1) ஆம் உறுப்புரை மீறப்படும் வகையில், இலங்கை அரசாங்கத்துக்குள் வேறுதனி இராச்சியத்தை அமைப்பதற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இலங்கைக்கு உள்ளேயோ அல்லது மறைமுகமாகவோ இலங்கைக்கு உள்ளேயோ அல்லது இலங்கைக்கு வெளியேயோ ஆதரவு அளித்தல், உடந்தையாகயிருத்தல், பணம் சேகரித்தல் போன்றவற்றில் ஈடுபடமாட்டோம் என்றும் இலங்கை அரசியலமைப்புக்கு எதிராக நாம் நடந்து கொள்ளவோ அரசியலமைப்புச் சட்டசரத்துகளை மீறமாட்டோம் என்றும் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் சத்தியப்பிரமாணம் செய்தே தமது பதவியை ஏற்கவேண்டும்.

அப்படிச் சத்தியப்பிரமாணம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். ஜெயானந்தமூர்த்தி, அரியநேந்திரன், எஸ். கஜேந்திரன், மு.சிவாஜிலிங்கம் ஆகிய நால்வரும் வெளிநாடுகளில் நடைபெற்ற பொங்கு தமிழ் எழுச்சிப் பேரணியில் இலங்கை அரசியலமைப்புக்குக் களங்கம் விளைவிக்கும் நோக்குடன் அரசியலமைப்பையும் தாம் எடுத்த சத்தியப் பிரமாணத்தையும் மீறியதன் மூலம் பயங்கரவாதத் தடைசட்டத்தின் கீழ் தண்டிக்கப் படக்கூடிய குற்றத்தைப் புரிந்துள்ளார்கள் எனவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவளித்து நான்கு நாடாளுமன்றஉறுப்பினர்களும் ஜேர்மனியிலும் அவுஸ்திரேலியாவிலும் ஆற்றிய உரையடங்கிய ஒலி நாடாக்களுக்குக் கிடைத்துள்ளதாகவும்,பொலிஸ்மாஅதிபர் குற்றப் புலனாய்வுப் திணைக்களத்துக்கு (C.I.D) 28.10.2008 இல் முறைப்பாடொன்றைச் செய்தார். இந்த முறைப்பாட்டையடுத்து இலங்கை அரசியலமைப்பு 157(1)ஆம் உறுப்புரையின் கீழும் தண்டனைச் சட்டக்கோவை 15 ஆம் இலக்க 2006 ஆம் ஆண்டுசட்டத்தின் 120 ஆம் பிரிவின் கீழும் குறித்த நால்வரும் குற்றம் புரிந்துள்ளன ரென கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் 2008ம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் திகதி முதல் தகவல் அறிக்கை ஒன்றை பொலிஸார் தாக்கல் செய்திருந்தனர்.

### ஜேர்மனியில் பொங்கு தமிழ் நிகழ்வு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.ஜெயானந்தமூர்த்தி, ப.அரியநேந்திரன், எஸ்.கஜேந்திரன், மு.சிவாஜிலிங்கம் ஆகிய நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும், 2006 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ஆம் திகதி ஜேர்மனியின் நாடாளுமன்றத்துக்கு முன்பாக நடைபெற்ற பொங்குதமிழ் எழுச்சிப் பேரணியில் பங்கேற்றிருந்தனர். அங்கு கூடியிருந்த புலம்பெயர்ந்த மக்கள் மத்தியில் ஈழத்தைப் பெறப் போராடும் தமிழீழவிடுதலைப் புலிகள் நடத்தும் போராட்டத்துக்கு ஆதரவளிக்கும்படி அவர்கள் உரையாற்றியிருந்தனர். அத்தோடு நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் 2008 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பொங்கு தமிழ் எழுச்சிப் பேரணியில் தமிழீழத்துக்கு ஆதரவாகவும், இலங்கை இராணுவத்தை அவமதிக்கும் விதத்திலும் உரையாற்றியிருந்தார். எஸ்.ஜெயானந்தமூர்த்தி, ப.அரியநேந்திரன்,எஸ்.கஜேந்திரன் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ளதெனவும், தமது வாக்குமூலத்தில் தாங்கள் ஜேர்மனியில் ஆற்றிய உரைதான் என்பதை முதல் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துக் கொண்டுள்ளதாகவும் பொலிஸாரின் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருந்தது. அவர்களின் உரை அடங்கிய ஒலிநாடாவின் சிங்கள மொழிபெயர்ப்புப் பிரதிகளும் நீதிமன்றத்துக்கு கையளிக்கப்பட்டன.

### அவுஸ்திரேலியாவில் பொங்கு தமிழ்

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பொங்குதமிழ் எழுச்சிப் பேரணியில் தமிழீழத்துக்கு ஆதரவாக உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினரான சிவாஜிலிங்கம் வெளிநாட்டிலுள்ளதால் அவரது வாக்குமூலம் பெறப்படவில்லை எனவும், இது சம்பந்தமாக நாடாளுமன்ற சபாநாயகருக்கும் அறிவிக்கப்பட்டதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருந்தது. முதல் தகவல் அறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தொடர்ந்து விசாரணை செய்யவேண்டியுள்ளதால் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நீதிமன்றத்தால் அழைப்பாணை அனுப்பும்படியும் மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடு செல்வதைத் தடைசெய்யும்படி குடிவரவு, குடியகல்வு, விமான நிலையப் பிரிவுக்கு உத்தரவிடும்படியும் நீதிமன்றுக்குச் சமர்ப்பித்த தமதுஅறிக்கையில் பொலிஸார் கோரியிருந்தனர்.

### பூர்வாங்க ஆட்சேபனை

இந்த நிலையில் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பாக நான் நீதிமன்றில் ஆஜராகி பூர்வாங்க ஆட்சேபனை முன்வைத்தேன். "இந்த நீதிமன்றில் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் அறிக்கையின் பிரகாரம் அரசியலமைப்புச் சட்டத்தின் 157(1) ஆம் உறுப்புரையை நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் மீறியுள்ளதனால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படவேண்டிய குற்றத்தைபுரிந்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படவேண்டிய குற்றத்தை எவரேனும் புரிந்திருந்தால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யமுடியும். ஆனால் அரசியலமைப்புச் சட்டத்தின் 157(1)ஆம் உறுப்புரை மீறப்படுமிடத்து நாட்டிலுள்ள உயர்நீதிமன்றத்திலும் (Supreme Court)ன்முறையீட்டுநீதிமன்றத்திலும் (Court of apeal) மட்டுமே வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 157(1) ஆம் உறுப்புரை மீறப்படுமிடத்து, நீதிவான் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யவோ அல்லது விசாரணை செய்யவோ சட்டப்படியான நியாயாதிக்கம் நீதிவான் நீதிமன்றுக்குக் (Jurisdiction) கிடையாது. அரசியலமைப்புச்சட்டத்தின் 157(1) ஆம் உறுப்புரையின் கீழ் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டவர் நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொண்ட சத்தியப் பிரமாணத்தை மீறும் சந்தர்ப்பத்தில் ஏதேனும் ஒரு கட்சியைச் சார்ந்தவராகயிருந்து, அந்தக் கட்சியின் முக்கியமான பொறுப்பை வகிப்பவராக இருப்பின் அந்தக் குறிப்பிட்ட அரசியல் கட்சியைப் பிரதிவாதியாகக் குறிப்பிட்டு எவரேனும் இலங்கைப் பிரஜை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யமுடியும். அந்த வழக்கின் விசாரணைகளின் பின் அரசியலமைப்புச் சட்டத்தின் 157(1) ஆம் உறுப்புரை மீறியது நிரூபிக்கப்படுமிடத்து அந்தஅரசியல் கட்சியைத் தடைசெய்யும் அதிகாரம் உயர் நீதிமன்றத்துக்கு உண்டு.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரேனும் தனிப்பட்ட முறையில் அரசியலமைப்பின் உறுப்புரை 157(1) மீறுமிடத்து இலங்கைப் பிரஜையினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம். அந்த குற்றச்சாட்டுக்கு சட்டமா அதிபர் குற்றச்சாட்டுப் பத்திரத்தைக் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்கு அல்லது உறுப்பினர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்து சாட்சிகளையும் அழைத்து முழு விசாரணை நடத்தப்பட வேண்டும். குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமிடத்துக் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் அல்லது உறுப்பினர்களின் பதவி பறிபோவதுடன் சிறைத் தண்டனையும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அந்தக் குற்றஞ்சாட்டப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்குவதற்கு சட்டத்தில் இடமுண்டு. அரசியல் அமைப்புச் சட்டத்தின் உறுப்புரைகளை எவரேனும் மீறினால் அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்திலும் மேன் முறையீட்டு நீதிமன்றத்திலும் இந்தநாட்டின் பிரஜைகளான ஒரு தனிமனிதனுக்கு இந்த இரண்டு நீதிமன்றங்களுக்கும் செல்லசட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருந்த போதிலும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் துறையின் தலைமை அதிகாரியான பொலிஸ்மா அதிபர், தான் ஒரு இலங்கை பிரஜை என்ற அடிப்படையில் சட்டத்தின் பிரகாரம் உயர்நீதிமன்றத்துக்கோ அல்லது மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கோ செல்லாமல் சரியான சட்ட ஆலோசனையைப் கூடப் பெறாமல் தனது முறைப்பாட்டை குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறையிட்டதைத் தொடர்ந்து, நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறும் பொழுது எந்தெந்த நீதிமன் றங்களுக்கு அந்தமனுவை விசாரணை செய்ய அதிகாரம் உண்டு என்பதனை மிகத் தெளிவாக அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கையில் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள 157(1)ஆம் உறுப்புரை மீறப்படும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.ஜெயானந்தமூர்த்தி, ப. அரியநேந்திரன், எஸ்.கஜேந்திரன், மு.சிவாஜிலிங்கம் ஆகிய நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் அமைப்புச் சட்டத்தினை மீறியுள்ளார்கள் என வழக்குத் தாக்கல் செய்ததுதான் வியப்புக்குரியது.




*(அடுத்த வழக்கு அடுத்த வாரம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளில் தமிழறிஞர்: 9

## க. உமாமகேசுவரம்பிள்ளை (05.05.1934 - 20.04.2024)

## நல்லூர்த் திருவிழாவுக்கு பிறகு ஒருநாள்! அல்லது மொழியும் இசையும் சில கதைகளில்!

○ பா.துவாரகன்

### அரசனின் வருகை!

"ஸ்ரீமான் மகா ராஜாதிராஜ, ராஜகம்பீர, ராஜ நாகார்ச்சித, ராஜாலங்கார, குமார ராஜ குல திலக, ஈரேழு பதினான்கு லோகத்தின் அதிபதி, நாடாளும் நாயகன், அழகன், குழகன், ஆனந்தச் சித்தன், நல்லூர்ப்பதி காவலன், நல்லூர் அடியார் காதலன், அரன், அண்ட சராசர ப்ரபஞ்சோத்பத்தி நிமித்த காரணன், வேதத்தின் நாயகன், வேள்வியின் தாயவன், முறை ஆகமப் பொருளவன், முத்தமிழ் ஆனவன், நல்லூர்க் கந்தசுவாமியார் பரியேறி வாறார்." - நல்லூரான் போருக்குப் புறப்படும் கட்டியம்.

தமிழர்களுக்கு நல்லூர்ப் பதிமேவும் கந்தவேளே அரசன்!...

சில கதைகளைப் படிக்கும் போது அவை கவிதை போல இருக்கும் இசையைக் கேட்டது போன்ற உணர்வை ஏற்படுத்தும்.

'இந்தியா ருடே' 1994-1995 இலக்கிய ஆண்டு மலரில் வெளிவந்த உமா வரதராஜனின் 'அரசனின் வருகை' என்ற சிறுகதை பின்னப்பட்ட நேர்த்தி, அதன் மொழி நடை, கதையை முன்னோக்கி நகர்த்தும் விதம் யாவுமே அலாதியானவை. அந்தக் கதை முழுவதுமே உயிரோட்டமானது. ஆரம்பம், முடிவு அல்லது இடையில் எப் பகுதியை எடுத்தாலும் கதை மொழி வழியே ஆறு போல நகரும். அரசனின் வருகை போரின் மனிதத் துயரின் பிழிவு. இக்கதை 1994இல் எழுதப்பட்டிருப்பினும் 2009 யுத்தத்தின் இறுதிநாள்களையும் மீட்கும் காலத்தை வென்று நிற்கும் படைப்பு.

**கதையின் ஆரம்பம்:**

"மூடுண்ட அந்த நகரத்துக்கு அரசன் வரும் நாள் அண்மித்துக் கொண்டிருந்தது. யுத்தத்தில் இடிந்துபோன கோவிலைக் கட்டும் பணிகளை ஆரம்பித்து வைக்க அவன் வருவதாகச் சொன்னார்கள். அரசனின் வருகை பற்றிய அறிவிப்புகளை உடம்பில் ஒட்டிக் கொண்டு எருமைகள் எல்லாம் நகரத்து வீதிகளில் அலைந்து திரிந்தன. முரசுகள் சந்து பொந்துகளெங்கும் சென்று அதிர்ந்தன.

ரத்த ஆற்றின் கரையில் அந்த நகரம் இருந்தது. சிறு காற்றுக்கு உரசி, தீப்பற்றி எங்கும் மூளும் மூங்கில்கள் நிறைந்த நகரம் அது. கடைசி யுத்தம் மூன்று வருஷங்களின் முன்னால் நடந்தது. யானைகளின் பிளிறல், குதிரைகளின் கனைப்பு, வாட்கள் ஒன்றோடொன்று உரசுமொலி, மனிதர்களின் அவலக் குரல் எல்லாம் இன்றைக்கும் செவிகளில் குடியிருந்தன. அப்போதைய பிணங்களின் எரிந்த வாடை இன்னமும் அகலாமல் நகரத்தின் வானத்தில் தேங்கிப்போய் நின்றது. அண்மைக்காடுகளை உதறி விட்டுப் பிணந்தின்பதற்காக இங்கே வந்த பட்சிகள் யாவும் நகரத்தின் பெரிய விருட்சங்களில் தங்கி இன்னொரு தருணத்திற்காக ஏங்கிக் கொண்டிருந்தன.......#

**கதையின் முடிவு:**

"மாட மாளிகைகள் கட்டித் தருகின்றேன். வீதிகளைச் செப்பனிட இன்றே ஆணையிடுகின்றேன். குளங்களைத் திருத்தச் சொல்கின்றேன். இன்னும் என்ன வேண்டும்? அரங்குகள் வேண்டுமா? தானியங்கள் தேவையா? பட்டாடைகள் வேண்டுமா? என்ன வேண்டும் சொல்லுங்கள்... இவற்றையெல்லாம் நான் தரத் தயார். ஆனால் ஒருபோதும்........

அரசன் தன் வாக்கியத்தை முடிப்பதற்குள் ஒரு பெரிய மின்னல். வானத்திற்கும் பூமிக்குமாகக் கோடிழுத்த ஒரு நீண்ட மின்னல். ஒருகணம் கண்ணொளி மங்க அதிர்ந்து போனான் ஊமையன். கண்களைக் கசக்கிவிட்டு அவன் உயரத்தே பார்த்தான். பேசிக் கொண்டிருந்த அரசன் மாயமாக மறைந்து போயிருந்தான்"......

இன்று 2024 செப்ரெம்பர், தேசம் ஓர் அரசனின் வருகைக்காகக் காத்திருக்கிறது.

### அநேக தடவைகள் வாசித்த ஒரு கதை - 'ரி'

2005-2008 காலப்பகுதி அப்போது நான் கொழும்பில் இருந்தேன். தெகிவல என்ற இடத்தில் உவின்சர் அவனியூவில் ஆசிரியர் உமாமகேசுவரன் வசித்து வந்தார்.

அ. முத்துலிங்கம் எழுதிய ஒரு கதையின் தலைப்பு 'ரி'. பத்து வயதுச் சிறுவனுக்கும் சிறுமிக்கும் இடையே இழையோடும் நட்பு, கர்நாடக சங்கீத ரசனையுடன் இணைந்து கதை நகர்கிறது.

ஒரு நாள் உமாமகேசுவரன் அவர்களது வீட்டுக்குச் சென்றபோது இந்தக் கதையை வாசிக்கச் சொன்னார். கதையை வாசித்து நிறைவு செய்தபோது மழை விட்டு ஓய்ந்தது போலிருந்தது. இந்தக் கதையை நாம் பல தடவைகள் படித்திருப்போம். நான் வாசிக்க அவர் கதிரையிலிருந்து கேட்பார். இக் கதையில் வரும் இசை இரசனையை மார்க்கஹிந்தோள இராகத்தை, அதன் சாயலை எழுத்தாளர் எவ்வாறு நுட்பமாகக் கொண்டு வருகின்றார் என்பது பற்றி உரையாடுவோம்

### மார்க ஹிந்தோளத்திலிருந்து வரும் இசை முத்துலிங்கத்தின் மொழியில்:

"சிவக்கொழுந்து மாமா எங்கள் வீட்டுக்கு எதிர் வீட்டில் இருந்தார். பரம்பரைப் பாட்டு வாத்தியார். வெளிக்குந்தில் இருந்து பாடிக்கொண்டே இருப்பார். அவர் பாடும் நேரங்களில் நாங்கள் தவறாமல் அங்கே இருப்போம். ஏதோ ஒன்று எங்களை அங்கே இழுத்துவிடும். பத்து வயதுகூட நிரம்பாத எங்களுக்கு சங்கீதத்தைப் பற்றி என்ன தெரியும்? ஆனால் இருந்த இடத்தை விட்டு அசையாமல் நின்று கேட்டுக்கொண்டே இருப்போம். அந்த இசையில் ஏதோ ஒரு மாய சக்தி இருந்தது. பிரம்மாண்டமான கடல் பறவை ஒன்று செட்டைகளை விரித்து வட்டமடித்துச் சிறுகச்சிறுக கீழே இறங்குவதுபோல அந்த ராகம் கேட்பதற்கு வெகு சுகமாக இருக்கும்.

அது மெதுவாகத்தான் ஆரம்பமாகும். ஒரு கையகலத்து அருவிபோலக் கொஞ்சமாக ஊற்றெடுக்கும். பிறகு விரிந்து விரிந்து கிளைவிட்டுப் பெருகும். எதிர்பாராத விதமாக வளையும், குதிக்கும், பிரவகிக்கும். ராகம் வடிந்து சமநிலைக்கு வரும்போது மூச்செடுக்க வெளியே வரும் திமிங்கலம்போல நாங்களும் எங்களை ஆசுவாசப் படுத்திக் கொள்வோம்.

இசை முடிந்ததென்றாலும் கோவில் மணியின் கார்வைபோல அந்த நாதம் மனதிலே கொஞ்ச நேரத்துக்கு ஓடிக்கொண்டே இருக்கும்.

மாமா கண்ணைத் திறப்பார்.

"ஏன் மாமா, அப்படியே மனதில் சந்தோஷம் பொங்குதே? இது என்ன ராகம், மாமா?"

"இது மார்க ஹிந்தோளம்; அடி முடியைக் கண்டுபிடிக்க முடியாதபடிக்கு ஓர் அபூர்வமான ராகம். ஆயுள் முழுக்க சாதகம் செய்தாலும் இந்த ராகத்தில் மறைந்து கிடக்கும் சூட்சுமங்களை ஆழம்காண முடியாது எனக்குப்பிடித்த ராகம்...........

மாமா, ஏன் அப்பா கேட்கும்போது காம்போதி, தோடி, மோகனம் என்றெல்லாம் பாடுவீர்களே! ஆனால் உங்களுக்காகப் பாடும்போது இதே ராகத்தை நீங்கள் திருப்பித் திருப்பி பாடுறீங்கள்? வேறு ராகம் பாடமாட்டீங்களா?" மாமா என்னைக் கொஞ்சநேரம் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தார்.

"காம்போதி, தோடி போல இது பணக்கார ராகம் இல்லை. இது என் போன்றவர்களுக்காக ஏற்பட்டது. மார்க ஹிந்தோளம். லேசில் இதை வசப்படுத்தமுடியாது. மிக்க பிரயாசைப்பட வேண்டும். இது கைவசமாகிவிட்டால் சங்கீத தேவதையே அடிமை என்றுதான் அர்த்தம்."

மாமா பாடினார் அந்த ராகத்தின் எடுப்பும், விரிவும், விஸ்தாரங்களும் புதியவைகளாக இருந்தன. மலர்ச்சரங்கள் ஒன்றன் மேல் ஒன்று விழுவதுபோல அந்த ராகத்தின் சோபை பெருக்கிக்கொண்டே போனது.

"மாமா, இந்த ராகத்தில் அப்படி என்ன விசேஷம்?"

"அப்பிடிக்கேள், இதன் ஆரோகணத்தில் ஏழு ஸ்வரங்கள். பார் இப்படிப்போகும்"

ஸ ரி க ம ப த நி ஸ்

"அவரோகணத்தில் ஸ்வரங்கள் இப்படித்திரும்பும்." ஸ்நிதபமகஸ

"கவனித்தாயா? திரும்பி வரும்போது ரி கிடையாது. அதுதான் விசேஷம்."

"அது சரி, மாமா நேற்று இதே ராகம் வேறு மாதிரி இருந்ததே! இண்டைக்கு இப்பிடி இருக்குதே! இது ஏன் மாமா?"

"அதுதான் trademark. மோனலிசா சித்திரத்தை யார் எங்கிருந்து பார்த்தாலும் அது அவர்களையே பார்ப்பதுபோல இருக்கும். மனோரஞ்சிதப்பூ நினைத்த வாசத்தைக் கொடுக்கும். அதுபோலத்தான் இந்த ராகமும். குதூகலமான நேரங்களில் [illegible]. வேறு [illegible] இருக்கும். இன்னும் சில நேரங்களில் சோகமாக இருக்கும். அதுதான் இதன் தனித்தன்மை." அன்று மாமாவுடன் வெகு நேரம் இருந்தோம் ராக ஆலாபனை முடிந்ததும் அந்தத் தெலுங்குக் கீர்த்தனையை வரிவரியாகப்பாடி விளக்கம் கூறினார். நாங்கள் இருவரும் மெய்மறந்து கேட்டுக்கொண்டிருந்தோம்...........




மழைகாலங்களில் இசையை அனுபவிப்பது வித்தியாசமா இருக்கும். வெள்ளைப்படுதாவில் சைத்திரிகன் லாவகமாகத் தூரிகையை இழுத்ததுபோல அந்த நாதமானது வெகு தூரம் வரை கேட்கும். மாமாவின் கண்டத்தில் இருந்து புறப்பட்ட இசை நாலு திசைகளையும் சென்று நிரப்பி ஒருவித பிரயத்தனமுமில்லாமல் உயிர்நிலையைத் தொட்டுத் தொட்டு பரவசப்படுத்தியது.

மார்க ஹிந்தோளம்தான். ஒரு சிறு புள்ளியிலிருந்து கோலம் போடுவதுபோல அந்த ராகம் விரிந்து விரிந்து கொண்டுபோனது. அப்படி நுட்பமான சங்கதிகளை நான் ஆயுளில் கேட்டதே கிடையாது. மனதை உருக்கும் சோகம் கவ்வியது. ராகம் மேல் ஸ்தாயிக்குப்போய் தொட்டபோது வயிற்றை என்னவோ செய்தது.

வத்ஸலாவின் கண்கள் பளபளத்தன. இன்னும் கொஞ்சம் போனால் அழுதுவிடுவாள் போல இருந்தது. ராக ஆலாபனையை முடித்துவிட்டு சிவக்கொழுந்து மாமா பாடத்தொடங்கினார்...........

மாமாவின் உடல் மெல்ல மெல்ல அசைந்தது. ஒரு பச்சைக் குழந்தையை அணைப்பதுபோல ராகத்தோடு சேர்ந்த அவருடைய திரேகம் ஆடிக்கொண்டிருந்தது.

"சலமேலரா சாஹேத ராமா சலமேலரா"

"ஹே! ராமா, அயோத்தி மன்னா! ஏன் இந்த உதாசீனம்? என்னால் இனியும் உன் பிரிவைத் தாங்கமுடியாது..."

நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னால் இந்தத் தியாகராஜர் எங்களுக்காகவே பாடி வைத்துவிட்டுப்போனது போல இருந்தது.

சில நிமிடங்களில் மாமாவின் உடம்பு வெடவெடன்று நடுங்கியது. கண்களில் தாரை தாரையாக நீர் கொட்டியது.

பாட்டை உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டே வந்தேன்.

ஆரோகணத்தின் போது ஏழு ஸ்வரங்களும் இருந்தன.

அவரோகணத்தின் போதும் அதே ஸ்வரங்கள்தான் திரும்பிக் கீழே வந்தன .

ரிஷபம் மட்டும் திரும்பவில்லை. (கதையிலே வரும் காளை மாடும் (ரிஷபமும்) திரும்பி வரவில்லை)

### வனதேவதை சொன்ன கதை

"நல்லூர்த்திருவிழாவுக்குப்பிறகு நீங்கள் என் வீட்டுக்குச்சென்று நான் திரும்பிவர முடியாத இடத்துக்குப் போய்விட்டேன் என்ற செய்தியைச் சொல்லும் போது வீட்டிலே தேநீர் தாயரித்துத் தருவதற்கு அம்மாவிடம் கொஞ்சம் பணம் இருக்கும். நல்லூரிலே 25 நாள்களும் கச்சான் விற்பதால் கொஞ்சப் பணம் அவள் சேர்த்திருப்பாள்." அந்த வனதேவதையின் கதையைத் துர்க்கா சொல்லக் கேட்ட அனைவரும் ஆரண்யத்துக்கு ஏகினர். அவர்கள் திரும்பி வரவேயில்லை.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ராஜீவ்காந்தி சர்வதேச விமான நிலையத்தில் இலங்கைக் குழுவினர்

# அயல் தேசத்தில் சில நாள்கள்...



(DR MCR HRD INSTITUTE)

O டிலீப் அமுதன்

*இந்திய வெளிவிவகார அமைச்சின் முழுமையான அனுசரணையுடன் ஐரெக் திட்டத்தில் ஹைதராபாத்தில் உள்ள தெலுங்கான அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் டொக்டர் எம்.சி.ஆர். எச்.ஆர்.டி. நிறுவனத்தில் இலங்கை ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்களுக்கான ஊடக முகாமைத்துவம் தொடர்பான இரு வார காலப் பயிற்சி 24.06.2024 தொடக்கம் 07.07.204 வரை இடம்பெற்றது. இந்தப் பயிற்சியில் இலங்கையிலிருந்து 29பேர் பங்குபற்றினோம். அது தொடர்பான தனது அனுபவங்களை உதயன் சஞ்சீவி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார் கட்டுரையாளர்.*


23.06.2024 அன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.40 மணிக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து இண்டிகோ விமானத்தில் ஹைதராபாத் ரஜீவ்காந்தி சர்வதேச விமான நிலையத்தை சென்றடைவதற்கான எங்களுக்குரிய விமானப் பயணச்சீட்டு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. 11.30 மணிக்கு அண்மித்ததாக நான் கட்டுநாயக்க விமான நிலையத்தைச் சென்றடைந்தேன். அன்றைய தினம் இந்தியாவின் பல்வேறு விமான நிலையங்களுக்கும் செல்வதற்கான பயணிகள் கட்டுநாயக்காவில் 'போர்டிங்கில்' அதிகளவில் திரண்டிருந்தனர். அதனால் இலங்கையிலிருந்தும் ஹைதராபாத்துக்கு ஊடக முகாமைத்துவப் பயிற்சிக்காக பயணிக்கும் அனைவரையும் உள்ளடக்கிய 'வட்ஸப்' குழுவில், நேர காலத்துடன் கட்டுநாயக்கவுக்குச் செல்லுமாறு இந்தியத் தூதரக அதிகாரிகளால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. 'போர்டிங்கில் பாஸைப்' பெற்று குடியகல்வு பணிகளை முடித்துக்கொண்டு உள் நுழைந்தேன். இன்னும் இரு தமிழ் ஊடக நண்பர்கள் என்னுடன் இணைந்து கொண்டனர்.

காலை உணவை மாத்திரம் எடுத்துவிட்டு கட்டுநாயக்கவுக்குள் நுழைந்த எமக்கு மதியத்தை நெருங்க பசி வாட்டியது. ஆனால் கட்டுநாயக்கவுக்குள் உள்ள உணவகங்களில் கட்டுப்பாட்டு விலையில் எவையும் வாங்க முடியாது. சாதாரண 'சான்விச்சே' 500 ரூபா. தேடியலைந்து ஒப்பீட்டளவில் விலை குறைவான (பெரிய வித்தியாசமில்லை. 'சான்விச்' 450 ரூபா) கடையைக் கண்டுபிடித்தோம். ஆளுக்கொரு 'சான்விச்சை' எடுத்துக்கடித்துக் கொண்டோம். விமானத்தில் வழமையாக உணவு வழங்குவார்கள். அதனால் சமாளித்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் 'சான்விச்சுடன்' முடித்துக் கொண்டோம். முடித்துக் கொண்டோம் என்பதை விட முடித்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை அங்கிருந்த விலைகள் எமக்கு ஏற்படுத்தியிருந்தன.

அனைத்துச் சோதனைகளையும் முடித்துக் கொண்டு 2.20 மணியளவில் விமானத்தில் ஏறினோம். 180 பேர் வரையில் எங்களுடன் அந்த விமானத்தில் ஹைதராபாத்துக்கு பயணமாகினர். விமானம் சரியாக 2.40 மணிக்கு கட்டுநாயக்கவிலிருந்து புறப்பட்டது. எங்களுக்கு மாத்திரமல்ல, ஏனைய சகோதர மொழி ஊடக நண்பர்களும் மதிய உணவை எடுத்திருக்கவில்லை. எல்லோருக்கும் பசி வாட்டியது. விமானத்தில் எப்போது உணவைத் தருவார்கள் என்று எல்லோரும் எதிர்பார்த்திருந்தோம். ஒவ்வொரு தடவையும் விமானப் பணிப்பெண்கள் அங்கும் இங்குமாகச் செல்லும்போது இந்தா வருகிறது அந்தா வருகின்றது எனப் பார்த்து ஏமாந்ததுதான் மிச்சம். தண்ணீர் மாத்திரம்தான் கிடைத்தது. உணவு, குளிர்பானம் என்பன கட்டணத்துக்கு விமானத்துக்குள் வழங்கப்பட்டது. நாங்கள் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை. இதனால் பசியுடனேயே பயணத்தைத் தொடர்ந்தோம்.

பி.ப. 4.35 க்கு விமானம் தரையிறங்கும் என்று எதிர்வுகூறப்பட்டிருந்தாலும் 4.15 மணிக்கே தரையிறங்கிவிட்டது. முதன் முறையாக ஹைதராபாத் ராஜீவ் காந்தி விமான நிலையத்தில் காலடி வைத்தோம். எம்மை விமான நிலையத்தினுள்ளே வரவேற்பதற்கு விமான நிலையப் பணியாளர்களை ஒழுங்குபடுத்தியிருந்தார்கள். அவர்கள் எங்கள் எல்லோரையும் அழைத்துச் சென்றார்கள். முன்னுரிமை அடிப்படையில் குடிவரவு விடயங்களை யும் முடித்து வெளியில் அழைத்துச் சென்றார்கள். எங்களின் பயணப் பொதிகளைப் பெற்றுக்கொள்வதற்குத்தான் சற்றுத் தாமதமாகியது. நாங்கள் விமான நிலையத்தின் வெளியில் வந்ததும், எங்களுக்கான பயிற்சியை முன்னெடுக்க வுள்ள டொக்டர் மரிச்சனா ரெட்டி மனிதவள அபிவிருத்தி நிலையத்தினர் (DR MCR HRD INSTIT[illegible]

(பயணம் தொடரும்)



# பெலாரஸ் எனும் ரஷ்ய அரண்

உக்ரைன் - ரஷ்யா இடையிலான மோதல் நாளுக்குநாள் தீவிரம் பெற்று வருகின்றது. போர் நிறுத்தத்துக்கும், ரஷ்யாவை அடிபணிய வைப்பதற்கும் சர்வதேசம் மேற்கொண்டுவரும் ஒவ்வொரு நகர்வையும் இல்லாமல் செய்து போரை உயிர்ப்புடனும், ரஷ்யாவைப் பெரும் பலத்துடனும் தக்கவைத்து வருகின்றது பெலாரஸ். உக்ரைன் மோதலில் அமெரிக்காவுக்கு இப்போது பெரும் தலைவலி ரஷ்யா அல்ல. பெலாரஸ்தான்.

ரஷ்யாவுடன் தன் கிழக்கெல்லையையும், உக்ரைனுடன் தன் தெற்கு எல்லையையும் பகிர்ந்துகொள்ளும் நாடுதான் பெலாரஸ். ரஷ்யாவின் நெருங்கிய நட்பு நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் இருக்கும் பெலாரஸ், ரஷ்யா எள் என்றால் எண்ணெயாக நிற்கும் தன்மையது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தபோது ரஷ்யா தன் பாதுகாப்புக்காக பெலாரஸில் அணுவாயுதங்களை நிறுத்தவேண்டும் என்று தானாக முன்வந்து கோரிக்கை வைத்திருந்தது பெலாரஸ். எனினும், சில ராஜதந்திர நகர்வுகள் காரணமாக பெலாரஸில் அணுவாயுதங்கள் எதையும் ரஷ்யா நிலைநிறுத்தவில்லை. ஆனால், ரஷ்யாவுக்காக பெலாரஸின் கதவுகள் எப்போதும் திறந்தே உள்ளன.

ரஷ்யாவுக்குள் ரஷ்யப் படையினர் நடமாடுவதைப்போன்று, பெலாரஸுக்குள்ளும் எப்போது வேண்டுமானாலும் போகலாம், வரலாம், ஆயுதங்களை நிலைநிறுத்தலாம். ரஷ்யாவுக்காக பெலாரஸ் திறந்துவிட்ட கதவுகள்தான், உக்ரைனுக்கான தொலைதூர ஆயுத விநியோகக் கதவுகளை இப்போது அடைத்து வைத்திருக்கின்றன என்றால், அதில் இரண்டாம் கருத்தில்லை.

உக்ரைனுக்கு தொலைதூர ஆயுதங்களை நேட்டோ நாடுகள் வழங்கினால், பெலாரஸை சுற்றியும் அணுவாயுதங்களை ரஷ்யா நகர்த்தும். ஆக, உக்ரைனை மடக்குவதற்கும் ஆபத்தின் விளிம்பில் உக்ரைன் ஊசலாடுகின்றது என்ற செய்தியை உரத்துச் சொல்வதற்கும் பெலாரஸ்தான் தற்போது ரஷ்யாவின் சதுரங்கப் புள்ளி மட்டுமல்லாமல் ரஷ்யாவுக்குத் தேவையான புலனாய்வுத் தகவல்களும் பெலாரஸில் இருந்தே வந்து குவிகின்றன. கடந்த வாரம் உக்ரைனின் இராணுவ பயிற்சிக் கல்லூரியொன்றை ரஷ்யா துல்லியமாகத் தாக்கியிருந்தது. இந்தத் தாக்குதலுக்காக ரஷ்யாவுக்குத் தேவையான அமைவிடத் தகவல்களை பெலாரஸே வழங்கியதாக உக்ரைன் குற்றஞ்சாட்டியுள்ளது.

தவிரவும், ரஷ்ய எல்லைக்குள் படைகளை உக்ரைன் நகர்த்தினால் பெலாரஸ் உக்ரைனுக்குள் ஊடுருவவும் தயாராகவே உள்ளது. ஆதலால், பெலாரஸ் எல்லையில் படைகளைக் குவித்து இராணுவக் கண்காணிப்பை உறுதிப்படுத்த வேண்டிய நிலையும் உக்ரைனுக்கு உள்ளது.

இதனால், ரஷ்யாவுக்கு எதிரான போரில் தன் துருப்புகளை முற்று முழுதாகப் பயன்படுத்தக்கூடிய நிலையில் உக்ரைன் இல்லை.

போதாதற்கு பெலாரஸுக்கு இராணுவ உதவிகளை வழங்கி, அந்த நாட்டைப் பலப்படுத்தவுள்ளதாக ரஷ்யா அறிவித்திருக்கின்றது. ஆக, உக்ரைனை முழுவீச்சாகத் தாக்குவதற்கும் பிராந்தியப் போரை ஏற்படுத்துவதற்கும் பெலாரஸ் தயார். ரஷ்யாவின் கடைக்கண் பார்வைக்காகவே அது தற்போது காத்திருக்கின்றது. அதுதான் ரஷ்யாவின் அரசியலும் கூட.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மணிவிழா வாழ்த்து



அறுபதாம் அகவை மணிவிழாவினை 2024.09.08
அன்றையதினம் காணும் எங்கள்

## திருமதி நிறைமதி தெய்வீகலிங்கம்

அவர்களை வாழ்த்தி ஆசிகள் பலவும் மொழிந்து
ஜனன தினத்தில் வழங்கும் வாழ்த்துப்பாமாலை

'அ' றிவின் ஒளியைக் கண்கள் காட்டும்
'ஆ'ழ்ந்த தத்துவங்களை உரையாடல் புகட்டும்
'இ'ங்கிதமான பேச்சுக்களை வார்த்தைகள் பேசும்
'ஈ'கையின் சிறப்பினை கரங்கள் வழங்கும்
'உ'ண்மை, வாய்மை, மெய்மைத்திறனை ஆசிரியத்துவம் செப்பும்
'ஊ'க்க முடமையினை கற்பித்தல் உணர்த்தும்
'எ'ண்ணம் போல் எண்ணியதை செயற்றிறன் செயற்படுத்தும்
'ஏ'ணியாய் மாணவர் ஏற்றங்கள் பலவும் கண்டிட இதயம் துடிக்கும்
'ஐ'யம் திரிபுற கற்பித்தலை வகுப்பறைகள் தரம் ஆறிலிருந்து பதினொன்று கூறும்
'ஒ'ளி கொடுத்து ஒளிர்விப்பதிலும் விஞ்ஞானபாடம் பிரகாசிக்கும்
'ஓ'டம் போல் மாணவர்கள், உறவுகள், நட்புகளை கரையேற்ற பாதங்கள் நகரும்
'ஔ'டதமான அருமருந்து இராமலிங்கம் தம்பதியினர்
உதித்த நித்திலம் பேரறிவுடைய ஆசான்
தெய்வீகலிங்கத்தை கரம் பற்றிய நாயகி எங்கள் நிறைமதி
அ'ஃ'தும் அன்னையவள் சிறப்புக்கள் பெருமைகள்
யாவும் உணர்ந்தே நிறைமதி தெய்வீகலிங்கத்தின்
ஏகபுத்திரி சிங்கப்பெண்ணாம் "விஷ்ணுமாயா"
பல்கலையும் கற்று பாண்டித்தியம் பெற்று
பண்பாளராய், வல்லவராய், நல்லவராய்
அம்மை, அப்பாவுக்கு பெருமைகள் பலவும்
தேடிக்கொடுத்து வையகமே போற்ற
மாண்புடன் வாழ்வார் என
பொற்பதிவீரகத்தி விநாயகப்பெருமானையும்,
நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாளையும்
பிராத்திக்கின்றோம்

Congratulations

ஆசிரியப்பணியின் நிறைவான ஓய்வுக்காலத்திலும் தமிழ்மொழியில் முக்காலமுணர்ந்தும்
"வினைத்தொகையாம்" நிறைமதி (நிறைந்தமதி, நிறைகின்றமதி,நிறையும்மதி)
உடல், உள ஆரோக்கியத்துடன் மன நிறைலாம் "திருப்தி" எனும் செல்வத்துடன்
பல்லாயிரத்து ஆண்டுகள் வாழ்வார் என இதயம் நிறைந்து நல்லாசிகள் வழங்குபவர்

**சேவைக் காலம் :**

**1992. 09.01 - 1996.03.06**
யா/ கிளாலி கெற்பேலி ஸ்ரீசண்முகநாதன் வித்தியாலயம்

**1996.03.07 - 2000.12.31**
யா/ வேலணை மத்திய கல்லூரி

**2001.01.01 - 2010.06.15**
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

**2010.06.16 - 2017.10.26**
யா / யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி

**2017.10.27 - 2024.09.07**
யா/ இணுவில் இந்துக் கல்லூரி

Congratulations

என்றும் அன்பான

சகோதரி திருமதி கலைச்செல்வி ஜெயறாஸ்
அண்ணா திரு.கந்தையா ஜெயறாஸ்
பெறாமகள் செல்வி பிரசாந்தி ஜெயறாஸ்

புகையிரத வீதி அருகாமை
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒலுசல அமைக்க காணி அளவீடு

மன்னார், செப். 8

இலங்கை அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் (ஒலுசல) மன்னார் மாவட்டத் துக்கான கிளையை உருவாக்குவதற்கான முதல் கட்ட நடவடிக்கையாக காணி அளவிடும் வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முன்னெ டுக்கப்பட்டுள்ளது. நில அளவைத் திணைக்களத்தினர் , மன்னார் மாவட்ட செயலர் க.கனகேஸ்வரன், பிரதேச செயலாளர் எம்.பிரதீப், மன்னார் மருத் துவமனை பணிப்பாளர் அசாத் எம்.ஹனிபா, நகர சபை செயலாளர் எக்ஸ். எல்.பிரிட்டோ உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டு காணி அடையாளப்ப டுத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஒ-25-56)



# சிறுவர் சந்தை

யாழ்ப்பாணம், செப். 8

பருத்தித்துறை தம்பசிட்டி சர்வோதய முன்பள்ளி மழலைகளின் சிறுவர் சந்தை நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
சிறுவர் சந்தையில் சிறார்கள் தமது வீட்டுத் தோட்டத்தில் விளைந்த மரக்கறி வகைகள், பழங்கள், சுய உற்பத்திகளான கைப்பணிப் பொருட்கள், கற்றல் உபகரணங்கள் போன்றவற்றைத் தமது பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் காட்சிப்படுத்தி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஒ-ரி-66)




மன்னார் பட்டதாரிகள்

# சொந்த மண்ணிலே பணிபுரிய வேண்டும்

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.ஞானராஜ் வலியுறுத்து



மன்னார் , செப். 8

**மன்னார் மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகம் சென்று வெளியேறும் மருத்துவர்கள் , பொறியிய லாளர்கள் மன்னார் மாவட்டத்தில் சேவையாற்ற வேண் டும். பாடசாலைகளில் விளையாட்டில் சாதனைகள் படைத்து வெளியேறும் வீரர்களை கொண்டு கழகங்களை உருவாக்கி மன்னாரை சாதனை படைக்கும் மாவட்டமாக உருவாக்கவேண்டும் என பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.ஞானராஜ் தெரிவித்தார்.**

வட மாகாண பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டியில் மன்னார் கல்வி வலயம் தொடர்ந்து மூன் றாவது முறையாக முதல் இடத்தை பிடித்ததை முன் னிட்டு வீரர்கள் கௌரவிக்கப்பட்ட நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்;
இந்த வீரர்கள் தமது இரத்தத்தை வியர்வையாக சிந்தி பெருமையை ஈட்டித் தந்துள்ளனர். இவர்கள் எதிர் காலத்தில் நிலைத்து நின்று , தனித்து நின்று தாங்க ளாகவே வாழக்கூடியவர்கள்.
விளையாட்டுகளில் ஈடுபடுபவர்கள் கல்வியில் ஆர் வம் குறைந்து காணப்படுவர் என பலர் குறிப்பிடு கின்றனர்.
இது ஓர் அப்பட்டமான பொய்யாகும். கல்வியில் ஆர் வம் காட்டுபவர்களே விளையாட்டுகளில் வீரர்களாக திகழ்கின்றனர்.
மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் பல்கலைக் கழகம் செல்பவர்கள் பலர் விளையாட்டு வீரர்களாகவும் திகழ்கின்றனர். ஐந்து மாவட்டங்களைக் கொண்ட வட மாகாணத்தில் மன்னார் மாவட்டம் ஐந்தாவது மாவட் டமாகவே காணப்படுகிறது.
- இவ்வாறு மன்னாரிலிருந்து பல்கலைக்கழகம் செல் லுபவர்கள் மீண்டும் மன்னாருக்குத் திரும்பி வந்து சேவை செய்வது குறைவாகவே தெரிகின்றது. இதை யிட்டு சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின் றோம் - என்றார். (ஒ-25-60)



# பேருந்து நிழற்குடை திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், செப். 8

அமரர் திருமதி தம்பையா நாகம்மா அவர்களின் முதலாம் ஆண்டு திதியை முன்னிட்டு, யாழ். மாவிட்டபுரம் அரசடி சந்தியில் , பேருந்து நிழற் குடை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது .
நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், இலங்கை தமிழரசுக்கட் சியின் தலைவருமான மாவை .சோ. சேனாதி ராஜா , மாவை பாரதி சனசமூக நிலையம், மாவை பாரதி மறுமலர்ச்சி மன்ற தலைவருமான சிவநெ றிச்செல்வன் இ. சாந்தகுமார், சிறப்பு விருந்தினர் களாக வலி. வடக்கு பிரதேசசபை முன்னாள் தவிசாளர் சோ. சுகிர்தன் வலி. வடக்கு செயலாளர் எஸ். சுதர்ஜன், வலி. வடக்கு பிரதேசசபை முன் னாள் அங்கத்தவர் சோ.கலையமுதன், கௌரவ விருந்தினர்களாக சமநீதி கலாநிதி இ.மு. நாகலிங் கம் , சமூகயோதி சி.செல்லத்துரை ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-25)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்



து.கஜீந்
தரம்- 06
யா/ கைதடி விக்னேஸ்வர
வித்தியாலயம்



அ.அனிகா,
தரம் 5C
யா/யாழ் இந்து ஆரம்ப
பாடசாலை

**மாணவர்களே!**


நீங்களும்
உங்கள் கைவண்ணங்கள்,
ஆக்கங்களை அனுப்பலாம்.

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555




S.மதுசாயினி
தரம் - 10
யா/விபுலானந்தா
கல்லூரி.

சி.அக்சயன்
தரம் - 6
யாழ்ப்பாணக்
கல்லூரி






N. லக்ஷித்,
LKG,
Beefort International
School



த.பிரணயன்
தரம் - 8
யா/இந்துக் கல்லூரி



கே.ஜனார்த்தன்
தரம்- 7
யா/கொக்குவில் இந்துக்
கல்லூரி

## யானையும் பன்றியும்



கோவில் யானை ஒன்று நன்றாகக் குளித்து விட்டு நெற்றியில் பட்டை தீட்டிக் கொண்டு சுத்தமாக வந்து கொண்டிருந்தது.

ஒரு ஒடுக்கமான பாலத்தில் அது வரும் போது எதிரே சேற்றில் குளித்துவிட்டு ஒரு பன்றி, வாலை ஆட்டிக் கொண்டே வந்தது. யானை ஒரு ஓரத்தில் ஒதுங்கி நின்று அதற்கு வழி விட்டது.

அந்தப் பன்றி, எதிரே இருந்த இன்னொரு பன்றியிடம், "பார்த்தாயா, அந்த யானை என்னைக் கண்டு பயந்து விட்டது!" என்று சொல்லிச் சிரித்தது.

அந்த யானையைப் பார்த்து இன்னொரு யானை, "அப்படியா, நீ பயந்து விட்டாயா? என்று கேட்டது.

அதற்குக் கோவில் யானை கீழ்க்கண்டவாறு பதில் சொன்னது: "நான் தவறி இடறி விட்டால் பன்றி நசுங்கி விடும். மேலும் நான் சுத்தமாக இருக்கிறேன். பன்றியின் சேறு என் மேல் விழுந்து நானும் அசுத்தமாகி விடுவேன். இந்தக் காரணங்களால், நான் ஒதுங்கிக் கொண்டேன்." என்றது.

**தன் பலம், பலவீனம் தெரிந்தவர்கள் அடக்கத்தில் சிறந்தவர்களாக இருப்பார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைது

பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போகஸ்லன பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நேற்றுச் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம)

**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 65 ரூபாய்.
நிலம் இழுத்து பதிக்க - 90 ரூபாய்.
(CS/28722) J-1

077 334 1281

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை.
3 மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில்
கதைக்கப் பயில
By ந.விக்னேஸ்வரன் ஆச்சார்யார்
குபேரன் கட்டட மாடி, பிரான்பற்று வீதி,
சங்கானை Tel: 077 675 1649

**மணமகள் தேவை**

1977 இந்து. விசாகம், TEACHER,
பூர்வீகம் - யாழ்ப்பாணம், வதியுமிடம் - யாழ்ப்பாணம்
மணமகன் பதிவு இல: 10883
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401

**மணமகள் தேவை**

1991 இந்து. திருவோணம், DOCTOR,
பூர்வீகம் - யாழ்ப்பாணம், வதியுமிடம் - CANADA
மணமகன் பதிவு இல: 10770
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401

**மணமகன் தேவை**

1997 இந்து, சித்திரை, MANAGER,
பூர்வீகம் - கோப்பாய், வதியுமிடம் - GERMANY
மணமகள் பதிவு இல: 10981
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401

**மணமகன் தேவை**

1992 இந்து. மிருகசீரிடம், DOCTOR,
பூர்வீகம் - நெல்லியடி, வதியுமிடம் - நெல்லியடி
மணமகள் பதிவு இல: 10531
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401

## மரண அறிவித்தல்

மலர்வு 15 . 08 . 1942



உதிர்வு 07 . 09 . 2024

### சின்னத்தம்பி பொன்னுத்துரை

**(ஓய்வு நிலை உத்தியோகத்தர் - விவசாயத் திணைக்களம்)**

குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னுத்துரை அவர்கள் நேற்று (07.09.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலன் - நன்னி தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற சின்னம்மா அவர்களின் பாசமிகு கணவரும், பிறேமா, குமுதினி, குகநாதன் (விவசாயத் திணைக்களம், தற்போது கனடா). அன்புத் தந்தையும், தாங்கராசா (ஓய்வுநிலை - போதனா வைத்திய சாலை), சிவகுருநாதன், றசிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜிதன் (ஆசிரியர்), அமிர்ததாஸ், லிகிதா (பிரான்ஸ்), புவிதரன், திலக்ஷன் (பிரான்ஸ்), கயூரி, திவியா, மதுஷா, நிருகன், தியாஷன், ஜஸ்மிகா ஆகியோரன் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக புத்தூர் கிழக்கு அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 625 5803
011 437 661 9512 (மகன்)

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

(CS/50614) J-1

## தமிழருக்கு அங்கீகாரம்


கனேடிய அரசாங்கத்தால் வழங்கப்படும் 'மன்னர் மூன்றாம் சார்ளஸ் பதக்கம்' இம்முறை இரண்டு புலம்பெயர் தமிழர்களால் வெல்லப்பட்டுள்ளது.

மன்னர் மூன்றாம் சார்ளஸின் முடிசூட்டு விழாவைக் குறிக்கும் இந்தப் பதக்கம் கனடாவில் தேசிய ரீதியிலான பெருமைக்குரிய விடயமாகக் காணப்படுகின்றது.

நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பு வழங்கியவர்களை கௌரவிக்கும் வகையில் கனடாவின் ஆளுநர் நாயகம் மேரி சிமொனினால் இந்த அங்கீகாரம் வழங்கப்படுகின்றது. இவ்வாறான பெருமைக்குரிய விருதே, தற்போது கணேசன் சுகுமார் மற்றும் குலா செல்லத்துரை ஆகிய இரு புலம்பெயர் தமிழர்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. இவர்களைத் தவிர மேலும் 16 கனேடியர்களும் இந்த விருதை வென்றுள்ளனர். (ம)

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 07 . 1947



மறைவு 06 . 09 . 2024

### பாலசிங்கம் பாலகாந்தன்

**(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர் - காணி நிர்வாகத் திணைக்களம்- திருகோணமலை)**

சாவகச்சேரி, கல்லடி வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பாலசிங்கம் பாலகாந்தன் அவர்கள் கடந்த 06.09.2024 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு பாலசிங்கம் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் - கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம், முன்னாள் உப தலைவர் நகர சபை, சாவகச்சேரி), அன்னபூரணம் (இளைப்பாறிய ஆசிரியை) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா, கணபதிப்பிள்ளை (களஞ்சியக் காப்பாளர்) அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானசோதி அவர்களின் பாசமிகு கணவரும், பாலேந்திரன் (பொறியியலாளர் - Sierra Construction Ltd.), பாலநிகேதன் (கனடா), பாலநிரஞ்சன் (ஆசிரியர், யா/ வரணி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரியா (பிரதி அதிபர் - கொ/பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), ஸ்ரீ அரிகலா (கனடா), பிரியதர்சினி (ஆசிரியர், யா/கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (வழக்கறிஞர்), பாலகுமாரன் (ஓய்வுபெற்ற R.O சாவகச்சேரி), பாலச்சந்திரன் (ஓய்வுபெற்ற வைத்தியர்), பால சறோஜினி (பிரான்ஸ்), பாலஜெயந்தி (ஓய்வுபெற்ற பிரதி அதிபர்), பால ஜீவினி (ஓய்வுபெற்ற பிரதி அதிபர்), பாலசுலோஜினி (சிரேஷ்ட விஞ்ஞானி - அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பரம்சோதி, ஜெகசோதி மற்றும் சிவசோதி, அருட்சோதி காலஞ்சென்ற கலாசோதி மற்றும் ஈஸ்வரசோதி, செந்தில்சோதி மற்றும் அமரர் மோகனேஸ்வரி, செல்வமலர், அமரர் பூமணி (ஓய்வுபெற்ற வைத்தியர்), அமரர் மனோராஜ், விஜயகாந்தன் (ஓய்வுபெற்ற அதிபர்), சிவகுமாரன் (ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர் Sierra), கருணானந்தா (சிரேஷ்ட விஞ்ஞானி அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிலானி, ஜருணி (மாணவர்கள்- கொ/கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த கல்லூரி), வர்ஷினி, மிதுனன், கேசகி (கனடா), சுவேதன் (மாணவன் -யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), விஷ்வத் (மாணவன் - யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.09.2024) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
071 270 3991
077 722 2114
077 059 1836

கல்லடி லேன்,
சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 11 . 1978



மறைவு 04 . 09 . 2024

### விக்னேஸ்வரன் சகின்ஸ்ராஜ்

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட விக்கினேஸ்வரன் சகின்ஸ்ராஜ் கடந்த 04.09.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-நாகபாக்கியம், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம்-சிவபாக்கியம் தம்பதிகளின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற விக்கினேஸ்வரன்-சேயன்பு தம்பதியரின் மூத்த அன்பு மகனும், விநாயகமோஸ்டி (கனடா)-வசந்தி (கனடா) தம்பதியரின் அன்பு மருமகனும், விஜிதாவின் (செல்வி - கனடா) அன்புக் கணவரும், ஸ்னேகா (கனடா), சுவர்னா (கனடா), லக்ஷனா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சகிலா, ஸ்கந்தராஜ் (கோபி), ஸ்கந்தராணி (கோமதி), காலஞ்சென்ற தாட்சாயினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகசிங்கம், நிர்மலி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தீபன் (கனடா), ஜெயரூபன் (கனடா), ஆகியோரின் அன்பு மச்சானும், நிருஷா (கனடா) சுப்பிரியா (கனடா) ஆகியோரின் சகலனும், கிருஷாந் (மயூ - லண்டன்), இஷானி (கனடா), ஆதவன் (கனடா), ஆதிரா (கனடா) ஆகியோரின் மாமனாரும், வைஸ்ணவியின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.09.2024) ஞாயிற்றுக்கிழமை 5.00 p.m. - 9.00 p.m, நாளை (09.09.2024) திங்கட்கிழமை 10.30 a.m - 1. 30 a.m Capel Ridge funeral Home and Cremation Centre என்னும் இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 09.08.2024 11.30 a.m - 1.00 p.m நடைபெற்று 2.00 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சின்னங்குளம்,
கந்தரோடை, சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்

தொடர்பு:
மனைவி - 001 905 965 3528
சகோதரன் - 077 642 8927
சகோதரி - 077 102 8473, 077 409 1105
மச்சான் - 077 548 6151

(CS 56144) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 26 . 02 . 1951

மறைவு 06 . 09 . 2024

## சந்திரசேகரம் குகராஜன்

(செயலாளர்)

அவரின் பிரிவால் எமது கழக உறுப்பினர்கள் ஆழாத துயரில் மூழ்கியுள்ளனர்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தார் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

தலைவர் மற்றும்
அங்கத்தவர்கள்.

புற்றுநோய், எயிட்ஸ் தடுப்பு சங்கம்
வடபிராந்தியம்.

## காணியுடன் வீடு விற்பனைக்கு

வட்டு சங்கரத்தை ஞானசம்பந்தர் வீதிக்கு அருகாமையில் 3 3/4 பரப்பு காணியுடன் வீடும் விற்பனைக்கு உண்டு. 30 மில்லியன்

தொடர்புகளுக்கு:

**070 530 3170**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராயில் பிரதான காப்பெற் வீதி முகப்புடன்
**4 பரப்புக் காணி - நிலப்பரப்பு**
விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- உரும்பிராய்ச் சந்தியிலிருந்து 1/2 KM தூரம்.
- வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும், வீடு கட்டுவதற்கும் உகந்தது.
- உரும்பிராய்ச் சந்தியில் இருந்து கைதடிச் சந்தி செல்லும் பிரதான காப்பெற் வீதி முகப்புடன். தொடர்புகளுக்கு:

**077 2880 152**
**077 2941 521**

CS (28954) J-1




# ரஷ்ய மீது உக்ரைன் தாண்டவம்

மொஸ்கோ, செப். 8

ரஷ்யாவின் ஆயுதக் களஞ்சியங்கள் மீதும், எல்லைப் பகுதிகளிலும் உக்ரைன் நேற்று வெற்றிகரமான வான் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது. ரஷ்யாவின் ஒஸ்ரோகோன்ஸ்கி மாகாணத்திலேயே, நேற்று உக்ரைன் தீவிரமான வான் தாக்குதல்களை நடத்தியுள்ளது. ரஷ்ய இராணுவக் கிடங்குகளையும், ஆயுதக் களஞ்சியங்களையும், பொதுமக்கள் குடியிருப்புகளையும் உக்ரைனின் ஏவுகணைகள் சரமாரியாகத் தாக்கத் தொடங்கியதையடுத்து, மாகாணம் தழுவிய அவசர நிலை அறிவிக்கப்பட்டது. ஒஸ்ரோ கோன்ஸ்கி மாகாணத்தில் இருந்து பல்லாயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதல்களால் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை என்று ரஷ்யா அறிவித்துள்ளது. ஆனால், இராணுவக் களஞ்சியங்களில் கணிசமான இழப்புகளும், சொத்திழப்புகளும் ஏற்பட்டுள்ளன என்பதை ரஷ்யா ஏற்றுக் கொண்டுள்ளது. உக்ரைனின் ஒவ்வொரு தாக்குதலுக்கும் கணிசமான பதிலடி வழங்கப்படும் என்றும், இந்தத் தாக்குதல்களுக்கான விலையை உக்ரைன் செலுத்தியே தீரும் என்றும் ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சு எச்சரித்துள்ளது. (ம)


## மரண அறிவித்தல்



பிறப்பு 04 . 11 . 1935

இறப்பு 05 . 09 . 2024

### திருமதி கயிலாயபிள்ளை தங்கரத்தினம்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கயிலாயபிள்ளை தங்கரத்தினம் அவர்கள் கடந்த 05.09.2024 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் (பரியாரியார்) - அன்னம்மா தம்பதியரின் புதல்வியும், அமரர் கந்தையா கயிலாயபிள்ளையின் (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர், சுகாதார திணைக்களம்) பாசமிகு மனைவியும், கந்தையா - தங்கத்தின் மருமகளும், அமரர்களான ராசசுந்தரம், குலநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்), குமரேசு, விசுவலிங்கம், குமாரசாமி, பாலசிங்கம் மற்றும் இந்திராணி ஆகியோரின் மைத்துனியும், அமரர் பரமேஸ்வரி, தங்கரத்தினம், அமரர் கண்மணி, தேவி இந்திராணி ஆகியோரின் சகலியும், அன்பரசி (ஜேர்மனி), அழகிரி (ஜேர்மனி), அபரஞ்சி (ஆசிரியர் - மானிப்பாய் சென் ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிறீரமணன் (ஜேர்மனி), நிர்மலா (ஜேர்மனி), அமரர் சிவகணநாதன் (ஆசிரியர்) ஆகியோரின் மாமியாரும், சாம்பவி, கார்த்திகன், அபிநயா, அபிரன், அபிராம், ஷர்மிலன், கஜப்பிரியா, அமரர் திவாஹரி மற்றும் கிரிஷாந்தன் (ஆசிரியர் - அனலைத்தீவு தெற்கு, அ.த.க. பாடசாலை) ஆகியோரின் பேர்த்தியும், அல்பாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

செட்டிவளவு ஒழுங்கை,
இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
அன்பரசி,
அழகிரி,
அபரஞ்சி
(T.P:077 2087 976)

(CS 28990) J-1

## வேலையாட்கள் தேவை

மருதனார் மடத்தில் இருக்கும் வணிக நிலையத்திற்கு அனுபவம் வாய்ந்த வேலை ஆட்கள் தேவை. (ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் & Paint, பான்சி பஷன்)

**ஹாட்வெயர் அனுபவத்திற்கு ஏற்ப அதி உச்ச சம்பளம் வழங்கப்படும்**
**மேலதிக விபரத்திற்கு நேரில் வரவும்.**

(342A K.K.S Road Maruthanar Madam)

தொடர்புகளுக்கு:

**077 916 7289, 077 739 1450**

## மரண அறிவித்தல்



### தயாபரம்பிள்ளை யோகம்மா

நயினாதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 5 ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தயாபரம்பிள்ளை யோகம்மா அவர்கள் கடந்த 06.09.2024 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தயாபரம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், கௌரியாம்பாள் (ஓய்வுநிலை பிரதி அதிபர் வேம்படி மகளீர் கல்லூரி) காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, அமுதகௌரி மற்றும் சுரேஸ்குமார், சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், ரவீந்திரலிங்கம் மற்றும் சாந்தகுமாரி, சிவமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும், அஸ்வின், தருண், ரமோனகௌரி, வினிதா கௌரி, சரிமிலன், யுகன் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும், கிறிஸ் அவர்களின் அன்பு பூட்டியாரும், காலஞ்சென்றவர்களான நாகேசு, சதாசிவம், நல்லையாபிள்ளை, கனகரெத்தினம், கோபாலபிள்ளை, சிவசிதம்பரம், கனகாம்பிகை மற்றும் புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நயினாதீவு சல்லிவரவை மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

5ம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை குழப்ப முயற்சித்தால் துப்பாக்கிச்சூடு நடத்த அனுமதி!



கொழும்பு, செப். 8

**செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலின்போது வாக்குச்சாவடிகளில் இடையூறு விளைவிப்பவர்கள் மற்றும் கலவரங்களில் ஈடுபடுபவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

மேலும், வாக்குச்சாவடிகளில் இடையூறு விளைவிப்பவர்கள் மற்றும் கலவரங்களில் ஈடுபடுபவர்களை உடனடியாக கைது செய்யுமாறும் தேர்தல் ஆணைக்குழு பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு சட்டவிரோத துப்பாக்கிகளை வைத்திருப்பவர்கள் மற்றும் பாதாள உலகக் கூட்டத்தினரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சும் தனது அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளது. இதற்காக விசேட குழுக்களும் நியமிக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நாளுக்குநாள் வன்முறைகள் மற்றும் முறைப்பாடுகள் அதிகரித்து வருகின்றன. இதுவரை 2,500க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம)



சங்கு சின்னத்தில் போட்டியிடும் தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேந்திரனை ஆதரித்து வடமராட்சி கிழக்கு தாளையடி பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (ரி-27)


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 02 . 07 . 1947



மறைவு 04 . 09 . 2024

யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் முன்னாள் தலைவர்
திரு செ. இலகுநாதன் அவர்களின் துணைவியார்

**மங்கையற்கரசி இலகுநாதன்**


அவர்கள் கடந்த (04.09.2024) புதன்கிழமை இறைபதமெய்தினார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்
யாழ்.மா.சி.க.வ.கூ.ச.சமாசம்.

(CR/431178) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 02 . 1951



மறைவு 06 . 09 . 2024

**அமரர் சந்திரசேகரம் குகராஜன்**

(ஓய்வு பெற்ற செஞ்சிலுவை சங்கத்தின் நிர்வாக உத்தியோகத்தர்
முன்னாள் வடமாகாண புற்று நோயாளர் எயிட்ஸ் எதிர்ப்பு சங்க செயலாளர்)

அராலி செட்டியார் மடத்தை பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் குகராஜன் நேற்றுமுன்தினம் (06.09.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரம் - மனோரஞ்சிதம் தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற ராஜகாந்தி மற்றும் ராஜேஸ்வரியின் மருமகனும், காலஞ்சென்ற சுகுணதேவியின் பெறாமகனும், உஷா நாகேஸ்வரியின் கணவரும், தேவராஜன், யோகராஜன், கோமதி, சாந்திமதி ஆகியோரின் சகோதரரும் மீரா, துளசி, கண்ணன், துவாரகா ஆகியோரின் தந்தையும், நிருபராஜ், பிரம்மேந்திரா, கார்த்திகா, சிறீ ஜனார்த்தனன் ஆகியோரின் மாமனாரும் அதியன், அண்டிரன், ஓரி, அரி, வர்சினி, கிருஸ்லா, சேயோன், தேவ் மித்திரனின் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (10.09.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 07.00 மணியளவில் கொழும்புத் துறையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

269, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி.

தகவல்: மனைவி
கு. உஷா நாகேஸ்வரி
+94772830973
+94777162763

(CS/1286) J-1

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 12 . 03 . 1962



மறைவு 09 . 08 . 2024

குரோதி ஆண்டில் அமைந்த ஆடி மாத பூர்வபக்க கருட பஞ்சமி திதியில்
பார் போற்றும் புண்ணியவதி சாந்தினி திருவாதவூரன் சென்றாள்
நயினை நாகபூசணி அம்பிகை பாதம்.

கடந்த (09.08.2024) வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவி

**அமரர் சாந்தினி திருவாதவூரன்**

*திதி: பூர்வபக்க கருட பஞ்சமி*

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (08.09.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் அதனைத் தொடர்ந்து வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அவரது இல்லத்தில் முற்பகல் 9.00 மணிக்கு நடைபெற்று தொடர்ந்து முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


"விக்கினேஸ்வரி பவனம்"
இல. 210, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம் வடக்கு, சுன்னாகம்.

(CS/56121) J-1

மார்க்கண்டு திருவாதவூரன்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம், வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலயங்களின் பரம்பரை தர்மகர்த்தா


### சிவப்பிரகாசம் கயிலைநாதன்

அவர்கள் நேற்று (07.09.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2024) காலை 8.00 மணியளவில் இணுவில் கிழக்கு, குமாரலிங்கம் வீதியில் உள்ள அவரது சகோதரரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் தொல்புரத்தில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் அஞ்சலி நிகழ்வுக்காக வைக்கப்பட்டு, பின்னர் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி அ.தட்சாயினி (ஆனந்தி)
(மருமகள்)

## 40ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 23.06.1956 மறைவு : 08.09.1984

### அமரர் வேலாயுதபிள்ளை சிவநாதன்

(வேல்முருகன் லொறி உரிமையாளர் சிவா மீசாலை)


நாற்பது ஆண்டுகள் ஆனது அப்பா
மாநிலத்தில் நீ பிரிந்து!
தீராத துயரத்தில் தேம்புகின்றோம்
நாம் இங்கு!
அப் பாவிகளின் துப்பாக்கி ரவைகள்
உன் நெஞ்சை பிளந்தது ஏனோ
உறவுகளை தவிக்க விட்டு
இமைகளை மூடிவிட்டாய்
எம்மையெல்லாம் அழ விட்டு
இறைவனை நாடிவிட்டாய்
உன்னை எண்ணி தினம் தினம்
மனம் வெதும்புகின்றோம்!
பிஞ்சு வயதினில் எமை
விட்டு சென்றது ஏன்?
நெஞ்சுருகி நிற்கின்றோம் அப்பா
நினைவிழந்து செயலிழந்து
நிர்க்கதியாய் நிற்கின்றோம் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை வேண்டுகின்றோம்!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

தகவல்
மகள், மகன்

## மரண அறிவித்தல்

### திருமதி யோகம்மா இராசரெத்தினம்

(இளைப்பாறிய ஆசிரியை-யாழ் சாதனா பாடசாலை, கல்வியங்காடு செங்குந்தா இந்து கல்லூரி, புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம், புங்குடுதீவு மகா வித்தியாலயம், புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாலயம்)



தோற்றம் 22.01.1948 மறைவு 05.09.2024

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 2ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொக்குவில் யாழ்ப்பாணத்தை தற்போதைய முகவரியாகவும் கொண்ட திருமதி யோகம்மா இராசரெத்தினம் (இளைப்பாறிய ஆசிரியை) அவர்கள் கடந்த (05.09.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் திரு இராசரெத்தினம் (இளைப்பாறிய தபாலதிபர்) அவர்களின் ஆருயிர் மனைவியும், காலம் சென்ற சின்னத்துரை பார்வதிப்பிள்ளை அவர்களின் புத்திரியும், காலம் சென்ற திரு திருமதி குமாரசாமி கமலாட்சி அவர்களின் மருமகளும் ராஜினி, தயாளினி, ஸ்ரீராஜயோகன், நளாயினி, சுபாஜினி, ஸ்ரீராஜமோகன் ஆகியோரின் அன்புத்தாயாரும் ராஜ்குமார், ஞானகாந்தன், ஜெகதீசன், சிவாஜினி, ஆனந்தரகு, தர்ஷினி ஆகியோரின் பாசமிகு மாமியும் இரத்தினசோதி, ஞானசோதி, பொன்னம்மா, கனகம்மா, முருகானந்தவேல், செல்வராணி, கிருபானந்தவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரிமளம் துரைராஜா, அருளையா சீவரத்தினம், மெய்கண்டமூர்த்தி, இரத்தினசிங்கம், சரவணபவானந்தன், கமலாதேவி, மகாலிங்கம், தேவிகா ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுருதிகா, ஆதித்யன், சாமந்தி, பூரணி, ஆர்த்திகன், பாவனன், ஹரிஜன், ஆரணி, கபீஷா, அஸ்வினா, ரிசியா, கவின், அஷ்வின், ஹரிஷ்ணி ஆகியோரின் பாசம் நிறைந்த பேர்த்தியும் திரு திருமதி அருள்தாசன் ஜெயந்தி, திரு திருமதி வடிவேலு செல்வநாயகி, திரு திருமதி வேதாரணியம், திரு திருமதி ஏகாம்பரநாதன், திரு திருமதி நாகராசா, திரு திருமதி தில்லையம்பலம் ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை மறுதினம் (10.09.24) செவ்வாய்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகள் கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலக்கம் 19
பழைய தபால் கந்தோர் வீதி கொக்குவில்
(Star Food City)

தகவல்:
குடும்பத்தினர்
077 480 8331, 077 392 8634

(CS 56150) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# கடும் வறட்சி; பலர் பாதிப்பு!

கிளிநொச்சி, செப் .8

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி நிலை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயிகள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி, பாரதிபுரம் பகுதி மற்றும் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுப் பகுதிகளில் பல செய்கையாளர்களின் வாழை, கமுகு. என்பன தற்பொழுது ஏற்பட்டுள்ள கடும் வறட்சி நிலை கார்ணமாக அழிவடைந்து வருவதாக கவலை தெரிவித்துள்ளனர். ஒரு வருடமும் இல்லாதவாறு இந்த வருடம் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதாகவும் தற்பொழுது ஒரு கிலோ தேங்காய் 140 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் இந்நிலை தொடருமாயின் தேங்காயை கூட வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும் அப்படி இல்லாவிடில் தேங்காய் இல்லாமலே சமைக்க வேண்டிய நிலை ஏற்படும் எனத் தெரிவித்துள்ளனர் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தென்னை அபிவிருத்திச் சபையினர் கமநலசேவைத் திணைக்களத்தினர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்கவேண்டும். அத்துடன் தொடர்ந்து தென்னைச் செய்கையில் ஈடுபடுவதற்கான உதவிகளை புரிய வேண்டும் எனவும் விவசாயிகள் தெரிவித்தனர். (ஓ-22,113)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 8

யாழ். மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கான சேவை வழங்குநர்களுடனான கலந்துரையாடல் யாழ். மாவட்டச் செயலர் அலுவலகத்தில் மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் தெரிவுசெய்யப்பட்ட சேவை வழங்குநர்களால் வழங்கப்படும் சேவைகள் குறித்து விரைவுபடுத்தவேண்டிய விடயங்கள் தொடர்பாக இதன்போது ஆராயப்பட்டன. கலந்துரையாடலில் யாழ். மாவட்டச் செயலகப் பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதம பொறியியலாளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், கணக்காளர் (பெறுகை), சேவை வழங்குநர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஓ-ரி66)






# ஆசிரியர்கள் பற்றாக்குறை

கந்தபுரம் இல. 01 பாடசாலையில் இந்த ஆண்டு ஆரம்பத்தில் இருந்து தரம் - 2 வகுப்புக்கு ஆசிரியர்கள் இன்மையால் மாணவர்களின் கல்வி கடுமையாகப் பாதிக்கப்பட்டதாக பெற்றோர் தெரிவித்தனர். கிளிநொச்சி தெற்கு வலயக் கல்வி அதிகாரிகளிடம் பல தடவைகள் முறைப்பாடுகள் பெற்றோரால் தெரிவிக்கப்பட்ட போதும் இதுவரை ஆசிரியர்கள் நியமிக்கப்படாத நிலைமை காணப்படுவதாகவும் தெரிவித்தனர். (ஓ-ரி-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறிழைத்தவர்களுக்கு பாடம் புகட்ட தமிழர்களே சங்குக்கு வாக்களியுங்கள்

## பொதுவேட்பாளர் அரியநேந்திரன் வேண்டுகோள்!

யாழ்ப்பாணம், செப். 8

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி தமிழ் மக்கள் ஒன்றிணைந்து சங்கு சின்னத்துக்கு வாக்களித்து தமிழ்த் தேசிய இனத்துக்கு எதிராக தவறிழைத்தவர்களுக்கு தகுந்த பாடம் புகட்ட வேண்டும் என தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரியநேந்திரன் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு தமிழ்மக்களிடையே பெரும் ஆதரவு பெருகிவருகிறது. அதை பார்த்து சிலர் பொறாமைப் படுகின்றனர். சிலர் எரிச்சல் படுகின்றனர். சிலர் எச்சரிக்கை செய்கின்றனர். அவ்வாறானவர்களை சிரிப்போடு கடந்து செல்வோம். அவர்களின் பெயர்களை கூறி அவ்வாறானவர்களை பிரபல்யப்படுத்த நாங்கள் விரும்பவில்லை. தவறுகள் என்பது எல்லோரிடமும் இருக்கின்றது. தவறு இழைத்தவர்கள் அத்தனைபேரும் வருகின்ற 22ஆம் திகதி தமிழ் மக்கள் அளிக்கும் முடிவைப் பார்த்து திருந்துவார்கள்.

சீரழிந்து போயிருக்கும் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பை ஒன்றிணைக்கும் வகையில் மக்கள் தீர்ப்பு அமையவேண்டும். ஒன்றிணைந்த வடகிழக்கில் தமிழ் மக்கள் கௌரவமாக வாழக்கூடிய நிரந்தர அரசியல் தீர்வுக்காக பலரும் உழைத்துக்கொண்டிருக்கின்றார்கள். அதை நோக்கியதான தமிழ்ப்பொது வேட்பாளர் நிலைப்பாட்டை வெற்றிபெற வைப்பதற்காக தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிப்பவர்களும் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களும், புலம்பெயர்ந்து வாழ்ந்துவரும் உறவுகள் என பல்வேறு தரப்பினரும் இரவு பகலாக பாடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

சில கட்சிகள் பொது வேட்பாளரை ஆதாரிக்காவிடில் அது செய்தி அல்ல. சங்கை ஆதரித்தால் அதுதான் செய்தி. 21ஆம் திகதிக்கு இடைப்பட்ட நாட்களில் பல்வேறு கதைகள் வரும். வதந்திகள் வரும். மக்கள் அவை எதையும் பொருட்படுத்தாது சங்கு சின்னத்துக்கு வாக்களித்து தவறிழைப்பவர்களுக்கு தகுந்த பாடத்தை புகட்டவேண்டும். முடிவு எவ்வாறு அமையும் என எங்களுக்கு நன்றாகவே தெரியும்.


எஞ்சி இருக்கும் நாட்களுக்குள் தவறான முடிவெடுத்தவர்கள் திருந்திவரவேண்டும். தந்தை செல்வநாயகத்தின் கொள்கைக்காக தமிழரசுக் கட்சியில் இணைந்து செயற்பட்டுவரும் நான் அந்த கொள்கைக்காகவே தமிழ்த் தேசிய பொதுக்கடமைப்பின் அழைப்பை ஏற்று தமிழ்ப் பொதுவேட்பாளராக இந்த தேர்தல் களத்தில் போட்டியிடுகின்றேன். இதனை உணர்ந்துகொண்டு செப்ரெம்பர் 21ஆம் திகதி தமிழ் மக்கள் ஒன்றிணைந்து சங்கு சின்னத்துக்கு வாக்களித்து தமிழர் ஒற்றுமையை வெளிப்படுத்தவேண்டும்" - என்றார். (ஒ-100)


# மாவையை நேற்று சந்தித்தார் ரணில்

யாழ்ப்பாணம், செப். 8

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரான மாவை சேனாதிராஜாவை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், கடந்த சில தினங்களுக்கு முன்னர் மாவை.சேனாதிராஜாவை ஜனாதிபதி ரணில் சந்தித்திருந்தார். தமிழர்களுக்கான தீர்வு தொடர்பான ஆவணம் ஒன்றை அவரிடம் வழங்கி, தனக்கு ஆதரவு தருமாறும் கோரியிருந்தார். எனினும், இதன் பின்னர் தமிழரசுக் கட்சியிலிருந்து சிலர் தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பதாக அறிவித்தனர். தமிழரசின் மத்திய குழுக்கூட்டத்தில் சஜித்தை ஆதரிப்பதாக முடிவெடுக்கப் பட்டது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த ஜனாதிபதி ரணில் மாவையை நேற்று அவருடைய இல்லத்துக்குச் சென்று சந்தித்துள்ளார். (ம)





# ஸ்கந்தா - மகாஜன முதல்நாளில் சமபலம்

யாழ்ப்பாணம், செப். 8

மகாஜனக் கல்லூரிக்கும், ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையிலான 'வீரர்களின் போர்' என வர்ணிக்கப்படும் கிரிக்கெட் ஆட்டம் நேற்று ஆரம்பித்தது. முதல்நாள் நிலவரத்தின் அடிப்படையில் இரண்டு அணிகளும் சம பலத்துடன் உள்ளன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 196 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக தர்மிலன் 45 ஓட்டங்களையும், டிலக்சன் 39 ஓட்டங்களையும், பிரணவன் 28 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜோவெல் றொசான் 73 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 8 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணி நாள் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. கஜித் 20 ஓட்டங்களையும், அபிசாந் 16 ஓட்டங்களையும், ஜோவெல் றொசான் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். ஸ்கந்தா சார்பில் பந்துவீச்சில் கஜானன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். (ம)

## இந்திய...

மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 14 பேர் இலங்கைக் கடற்படையால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூன்று படகுகளில் வருகைதந்து அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். கைதான இந்திய மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் பாரப்படுத்தப்பட்டு, அவர்கள் மூலமாக நீதிமன்றத்தில் மீனவர்களை முற்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. (அ-ம-27)

## தையிட்டி...

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தையிட்டிக் கிராமத்தில் பொதுமக்களுக்குச் சொந்தமான நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள விகாரையை அண்டிய நிலம் முழுவதையும் சுவீகரிக்க முயற்சிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நில அபகரிப்பின் முதல் அங்கமாக அந்தப் பகுதியை அளவீடு செய்ய நிலஅளவைத் திணைக்களம் முயன்ற போதெல்லாம் அந்தநிலத்தின் உரிமையாளர்களும் அரசியல்வாதிகளும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். இந்த எதிர்ப்பின் காரணமாக மாவட்ட நில அளவைத்திணைக்கள அதிகாரிகள் அளவீட்டை மேற்கொள்ளாது திரும்பிச் சென்று அறிக்கை சமர்ப்பித்தனர்.

இதைத் தொடர்ந்து, விகாரை அமைந்துள்ள பிரதேசம் மற்றும் விகாரையைச் சூழவுள்ள பகுதியென 6 ஏக்கர் நிலப்பரப்பை, நிலஅளவைத்திணைக்களத்தின் தலைமைப் பணிமனை அதிகாரிகள் கொழும்பில் இருந்துவருகை தந்து அளவீட்டை மேற்கொண்டு அதன் வரைபடத்தைத்தெல்லிப்பழை பிரதேச செயலாளரிடம் கையளித்துள்ளனர். அந்தப் பகுதி நிலங்களின் உரிமையாளர்களை அடையாளம் காணமுடியவில்லை என்றும் அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ம)

## ரணிலுக்குக்...

ஈடுபட்டார். கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உள்ளிட்ட குழுவினரே நேற்றுக்காலை யாழ். நகரில் தீவிர பரப்புரைகளை மேற்கொண்டனர். டக்ளஸ் தேவானந்தாவின் கட்சிக் கொடிகளுடன் அவருடைய ஆதரவாளர்களும் பரப்புரையில் கலந்துகொண்டனர். (அ-ம-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண...

யாழ்ப்பாணத்தில் சங்கிலியன் பூங்காவில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் விவசாயத்துறையைப் பலப்படுத்திவருகிறோம். வடக்கு விவசாயத்துக்கு முக்கியமானது. டிஜிட்டல் பொருளாதாரத்தை ஏற்படுத்தவுள்ளோம். வடக்கில் காங்கேசன்துறை, பூநகரி, மாங்குளத்தில் விசேட வர்த்தக வலயம் என்பவற்றை ஆரம்பிக்கவுள்ளோம். டிஜிட்டல் மத்திய நிலையமொன்றை ஆரம்பிக்கவுள்ளோம். இவற்றை அரசால் தனியாக மேற்கொள்ளமுடியாது. 9 மாகாணசபைகளுக்கும் அரசாங்கத்துடன் பணியாற்றுவதற்காக மாகாணசபைகளுக்கு அபிவிருத்திக்கான அதிகாரம் வழங்கப்படும். மாகாண அபிவிருத்திக்கு விசேட நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படும் - என்றார். (அ-ம)

## நீதிமன்றில்...

முதலாவது சந்தேகநபர் கையை உயர்த்தியவாறு மன்றுக்குச் சொல்ல முற்பட்டார். அவர் தொடர்புடைய வழக்குடன் அல்லாத பிறிதொரு வழக்குத் தொடர்பான கருத்துகளை வெளியிட்டார். இதன்போது அவரைத் தடுத்துநிறுத்திய நீதிவான், வழக்குடன் தொடர்புடைய கருத்துகளை மட்டுமே வெளியிடுமாறும், சட்டத்தரணி மூலமாக அந்தக் கருத்துகளை முன்வைக்குமாறும் அறிவுறுத்தியுடன், வழக்கைத் தவணையிட்டார்.

இதன் பின்னர், கூண்டிலிருந்து இறங்கிய முதலாவது சந்தேகநபர் வழக்கை நெறிப்படுத்திய பொலிஸ் உத்தியோத்தரை தகாத சொற்பதமொன்றைப் பாவித்து ஏசியதன் காரணமாக உடனடியாக அந்த வழக்கின் முதலாவது சந்தேகநபருக்கு இரண்டு மாத கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (அ-ம-100)

## கிருமித்...

வும் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். தனியார் மருத்துவமனையொன்றில் வழங்கப்பட்ட சிகிச்சைகளைத் தொடர்ந்து, கடந்த மூன்றாம் திகதி இரவு அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதையடுத்தே அவர் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன்தயான் விசாரணைகளை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையில் கிருமித் தொற்றால் மாரடைப்பு ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (அ-ம-100)

## வேலைநிறுத்தம்...

கல்வி அமைச்சர் மக்களை எச்சரித்துள்ளார்.

ஜனாதிபதி ரணிலை ஆதரித்து நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரையில் கல்வி அமைச்சர் சுசில் மேலும் தெரிவித்ததாவது:-

"யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்றி நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும் மக்கள் பொருளாதார நெருக்கடியின் கஷ்டங்களை அறிவர். யாழ்ப்பாண மக்களின் முக்கியமான தேவை கல்வியாகவே இருக்கிறது. 2022 ஆம் ஆண்டில் பாடசாலைகள் மூடிக்கிடந்தன. சீருடைகள் இருக்கவில்லை. ஆசிரியர் பற்றாக்குறை, அதிபர் பற்றாக்குறை என பல பிரச்சினைகள் இருந்தன. அந்த அனைத்தும் நிவர்த்தி செய்யப்பட்டன. காலம் தாமதிக்கப்பட்ட பரீட்சைகள் நடத்தப்பட்டன. அடுத்த வருடத்திலிருந்து சரியான நேரத்தில் க.பொ.த. சாதாரணதர மற்றும் உயர்தர பரீட்சைகள் உரிய நேரத்தில் நடத்தப்படும்.

கடந்த காலங்களில் யாழ்ப்பாண ஆசிரியர்கள், தொழிற்சங்கப் போரட்டங்களில் பங்கெடுக்கவில்லை. ஆனால் மற்றைய பகுதிகளில் இடம்பெற்ற போராட்டங்களில் ஆசிரியர்களைப் பயன்படுத்தி மாணவர்களின் கல்வியை பணயம் வைத்து வேலை நிறுத்தம் செய்தனர். சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஜனாதிபதி நியமித்த குழுவின் அறிக்கை இப்போது கிடைத்துள்ளது. அதனால் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தேர்தலை இலக்கு வைத்துச் செய்யாமல், வரவு - செலவு திட்டத்தில் சம்பள உயர்வுக்கான பணம் ஒதுக்கியிருக்கிறோம். இதனால் சம்பளப் பிரச்சினைக்கு முற்றாகத் தீர்வு கிடைக்கும். எனவே, இனிவரும் காலங்களில் வேலைநிறுத்தம் செய்ய வேண்டியிருக்காது. இப்படியான ஒரு தீர்வை எந்தவொரு வேட்பாளரும் முன்வைக்கவில்லை" - என்றார். (அ-ம)

## மாற்றுத்...

தரத்தை மேம்படுத்தும் வகையிலும் ஜனாதிபதி செயலணியொன்று அமைக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மாற்றுத் திறனாளிகளை வலுப்படுத்தும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியால் வகுக்கப்பட்ட கொள்கைப் பிரகடனத்தை வெளியிடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. நிகழ்வில் உரையாற்றும்போதே சஜித் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"2012 ஆம் ஆண்டு சனத்தொகைக் கணிப்பீட்டின் பிரகாரம் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 8.7 வீதமானவர்கள் சிறப்புத் தேவையுடையவர்களாக உள்ளனர். அதாவது 16 இலட்சம் பேர். இவர்களுக்காக பல சந்தர்ப்பங்களில் நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் குரலெழுப்பியுள்ளேன். கடந்த ஜனாதிபதி தேர்தலின் போதும் இதற்காக சமூக ஒப்பந்தம் ஒன்றுக்கு வந்தோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஆட்சி அதிகாரம் கிடைக்கவில்லை. என்றாலும் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு அதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

மாற்றுத் திறனாளிகள் சமூகத்துக்காக பல்வேறு ஒப்பந்தங்களும், சாசனங்களும் கைச்சாத்திடப்பட்டாலும் அவை இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக அவற்றை செயற்படுத்துவோம். இதற்கான தெளிவான வேலைத் திட்டங்கள் எதுவும் இல்லை. 2004 ஆம் ஆண்டு முதல் இதற்கான சட்டங்கள் முன்மொழியப்பட்டாலும், அவற்றை இதுவரையும் நடைமுறைப்படுத்தாமல் இந்தக் குழுக்கள் அலைக்கழிக்கப்பட்டன. விசேட தேவையுடையவர்களின் பிரச்சினைகளைத் [illegible] தீர்க்க முடியாது. [illegible] திட்டங்கள் அவசியமாகும். விஷேட தேவையுடைய சமூகத்திற்காக புதிய தேசியக் கொள்கையொன்று அவசியமாகும். எனவே விசேட தேவையுடையோரின் நலன்புரி விடயங்களுக்காக தனியான ஜனாதிபதி செயலணியொன்று நிறுவப்படும்" - என்றார். (அ-ம)

## கிருசாந்திக்கு...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் கடைப்பிடிக்கப்பட்டன.

1996 ஆம் ஆண்டு பாடசாலையில் பரீட்சை எழுதிவிட்டுத் திரும்பும்போது இராணுவ வாகனத்தினால் மோதி படுகொலை செய்யப்பட்ட சகமாணவியின் இறுதிச்சடங்கில் கலந்துவிட்டு திரும்பும்போது கைதடியில் நின்ற இராணுவத்தினரால் கிருசாந்தி கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்திக் கொல்லப்பட்டார். கிருசாந்தியைக் காணாததால் தேடிச்சென்ற அவரது தாய், சகோதரன் மற்றும் அயலவர் ஆகியோரும் இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர். அவர்களின் நினைவேந்தலே நேற்று உருக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. (அ-ம-20-27-23)

## வடக்கு...

மக்கள் தயாராகியிருக்கையில் அந்த மாற்றத்திற்கு எதிராக செயற்பட்டால் எவ்வாறான மனநிலை தெற்கில் ஏற்படும் என்கிறார். அவரது வெற்றியின் பங்காளர்களாக வரவேண்டும் என்கிறார். தனக்கு வாக்களிக்காவிட்டால் பார்த்துக் கொள்வோம் என அநுர எச்சரித்தார். அதனை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

வடக்கு மக்களை அச்சுறுத்தியமைக்காக வடக்கு மக்களிடம் அநுர வெளிப்படையான மன்னிப்பைக் கோரவேண்டும். சிங்கள மக்களின் பெயரைப் பயன்படுத்தி வடக்கு மக்களை அச்சுறுத்தியமைக்காக தென்பகுதி மக்களிடமும் அநுரகுமார மன்னிப்புக் கோரவேண்டும்.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது இங்கு வந்து பொன்சேகாவுக்கு வாக்களிக்கக் கோரினோம். வடக்கு மக்கள் பொன்சேகாவுக்கு வாக்களித்தனர். தெற்கு மக்கள் மஹிந்த ராஜபக்சவுக்கு வாக்களித்தனர். மஹிந்த ராஜபக்ச வென்றார். உங்களை யாராவது தாக்கினார்களா? 2015 ஆம் ஆண்டில் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்கக் கோரினோம். தென்பகுதி மக்கள் மஹிந்த ராஜபக்சவுக்கு வாக்களித்தனர். நாம் வென்றோம். ஏதாவது நடந்ததா? 2019 ஆம் ஆண்டில் வடக்கு மக்கள் சஜித்துக்கு வாக்களித்தார்கள். தெற்கில் கோத்தாபயவுக்கு வாக்களித்தார்கள். கோத்தாபய இராணுவத்தை அழைத்து வந்தாரா? தேர்தல் முடிவுகளை மக்கள் அங்கீகரித்தனர். அநுர எப்படி மக்களை அச்சுறுத்த முடியும்? வடக்கு மக்களை மட்டுமன்றி தெற்கு மக்களையும் அவர் அச்சுறுத்துகிறார். அது தான் அவர்களின் போக்கு.

அநுர வெற்றிபெறமாட்டார். நாம் முன்னர் அவர்களுக்கு அஞ்சவும் இல்லை. இப்பொழுதும் அஞ்சவுமில்லை. சஜித் தொடர்பாகப் பேசிப் பயனில்லை. எதிர்க்கட்சித் தலைவரின் பொறுப்பை அவர் செய்திருந்தால் அநுர முன்னேறி வந்திருக்க மாட்டார். அவருக்கு அளிக்கும் வாக்குகள் பயனற்றதாகும். எமது நாட்டை முன்னேற்ற வேண்டும். எனவே 'காஸ் சிலிண்டருக்கு' வாக்களித்து வெற்றிபெறச் செய்யுங்கள் - என்றார். (அ-ம)

## வாழ்க்கைச்...

வித்துள்ளார். யாழ்ப்பாணத்தின் சங்கிலியன் பூங்காவில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியும் என இரண்டு வருடங்களுக்கு முன்னர் யாரும் நம்பியிருக்கவில்லை. அனைத்துக்கும் வரிசை இருந்தது. நாட்டில் உறுதித்தன்மையைப் பாதுகாத்து பொருளாதாரத்தைப் பலப்படுத்தியுள்ளேன். அதனால்தான் ஜனாதிபதித் தேர்தல் இப்போது நடத்தப்படுகின்றது.

கடந்த காலத்தில் எமது கடன் சுமை அதிகரித்திருந்தது. கடன் பெறுவதை நிறுத்தினோம். கடன் பெறுவதை நிறுத்தியதால் வரிகளை அதிகரிக்க நேரிட்டது. பணவீக்கம் அதிகரித்திருந்தது. இருவேளை சாப்பிடுவதுகூட கஷ்டமாக இருந்தது.

தற்பொழுது பொருளாதரம் பலமடைந்துள்ளது. 24 இலட்சம் பேருக்கு 'அஸ்வெசும' வழங்கியுள்ளோம். இன்னும் 5 இலட்சம் பேருக்கு 'அஸ்வெசும' வழங்கப்பட வேண்டும். சம்பள உயர்வு வழங்கியுள்ளதோடு ஓய்வூதியங்களையும் அதிகரித்துள்ளோம். பொருளாதாரம் வலுவடைந்துள்ளதாலே அவற்றைச் செய்ய முடிந்தது. பொருள்களின் விலைகளும் குறைந்துள்ளன. மேலும், நிவாரணங்கள் வழங்க வேண்டும்.

பொருட்களின் விலைகள் குறைவடைந்து வருகிறன. வாழ்க்கைச் செலவு இன்னும் அதிகமாக இருக்கிறது. அதனால் ரூபாவின் பெறுமதியைப் பலப்படுத்தி வாழ்க்கைச் செலவைக் குறைக்க வேண்டும். ரூபாவின் பெறுமதி வலுவடையும்போது இன்னும் சலுகைகளை வழங்கலாம். அடுத்த வருடம் மேலும் சலுகைகள் வழங்குவேன். வரியைக் குறைத்து, சலுகைகள் வழங்க முடியாது. அடுத்த வருடம் மேலும் வாழ்க்கைச் செலவைக் குறைப்போம். உற்பத்தி அதிகரிக்கும் போது அனைவரிடமும் வரி அறவிடப்படும். அத்தோடு தற்பொழுது வரி செலுத்துவோரின் வரிச்சுமை குறையும்" - என்றார். (அ-ம)

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் 2ம் ஒழுங்கை சிறாம்பியடியில் 3 அறைகளைக் கொண்ட வீடு வாகன தரிப்பிட வசதிகளுடன் உண்டு.

தொடர்புகளுக்கு:
074 329 4142, 021 222 9229

**விற்பனையாளர்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் இலத்திரனியல் ஸ்தாபனம் ஒன்றிற்கு விற்பனையாளர்கள் தேவை.
(கணினி அனுபவம் இருப்பவர்களும் தொடர்பு கொள்ளலாம்).
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
[illegible] Mail - vkrjaffna@gmail.com
076 324 1761
(CS/56143) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

கொக்குவில் பிரம்படி லேனில் வீடு வாடகைக்கு உண்டு. வைத்தியர்கள். பொறியியலாளர்கள். விரிவுரையாளர்கள் விரும்பத்தக்கது.
வாடகை - 45000/- month

**077 224 6652**

(CS/56129) J-1

## வேலையாட்கள் தேவை

உணவகத்திற்கு இந்தியா, இலங்கை உணவு சமையலாளர், உணவு பரிமாறுபவர், உதவியாளர் தேவை.

**076 679 5667**

(CS/56113) J-1

## மணமகள் தேவை

யாழ் இந்து (V) வயது 56, உயரம் - 5' 10". நட்சத்திரம் - அனுசம், Colombo இல் Technical Officer ஆக பணிபுரியும் மனைவியை இழந்த பிள்ளைகள் அற்ற கொழும்பில் சொந்த வீடு வசதிகள் உள்ள **மணமகனுக்கு மணமாகாத அல்லது கணவரை இழந்த மணமகள் தேவை.** பொருத்தமானவர்கள் விருப்பம் உடையவர்கள் உங்கள் விபரத்தையும் Phone Number யும் குறிப்பிட்டு
உதயன் பணிமனை
மே/ பா 1 இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கவும் அல்லது கீழே உள்ள Email address க்கு அனுப்பி வைக்கவும்
thevanhari07@hotmail.com

(CS/56115) J-1


## கட்டடங்களில் ஏற்படும் நீர்க்கசிவைத் தடுப்பதற்கு








**Finex** ஸ்தாபனத்தாரின் ஏகவிநியோகஸ்தர்களிடம் இருந்தும் உலகதரமிக்க இரசாயன பொருட்களை விலை கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம். கட்டிட ஒப்பந்தகாரர்களுக்கு விசேட விலைக்கழிவு உண்டு.

**போலிகளை கண்டு ஏமாறாதீர்கள்**

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com


## பணியாளர் தேவை

நெல்லியடியில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு நீண்டகால நோக்கில் பணிபுரியக்கூடிய
**குக் தேவை.**
**ரொட்டி வேலை, றைஸ் பிரியாணி, நூடில்ஸ் சோர்ட் ஈற்ஸ்**

**076 701 6789**

## அறை வாடகைக்கு

சாவகச்சேரி அரசினர் வைத்திய சாலை மற்றும் தென்மராட்சிப் பிரதேச செயலகம் ஆகியவற்றிற்கு அருகாமையில் அரச அலுவலகங்களில் கடமையாற்றும் இரண்டு பெண் பிள்ளைகள் தங்கி இருக்கக்கூடிய அறை வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :-

**071 850 6111**

(CS/56136) J-1

## ICT வகுப்புக்கள்

**தரம் 10 - 13 ICT வகுப்புக்கள் தனியாகவோ, குழுவாகவோ கற்க முடியும்.**
ஆசிரியர் : திரு. S. சத்தியன் BSc, PGDE, Med
இடம் : திருநெல்வேலி மற்றும் அண்மித்த பிரதேசங்கள்.

**077 271 8498**

(CS 56132) J-1

## பணியாளர் தேவை

முதியோர் இல்லத்தில் பணியாற்றுவதற்கு பெண் பணியாளர் தேவை.
(தங்கி நின்று பணியாற்றுவோர் விரும்பத்தக்கது)

**077 564 4303, 077 442 5317**

(cs 56123) (N-1)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுலம் ,1995 ஆம் ஆண்டு பிறந்த. மிருகசீரிஷம் 3ம் பாதம், கிரக பாவம் 23. அரச தொழில் புரியும் மணமகனுக்கு நன்கு படித்த தொழில் புரியும் மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு: **077 076 1535, 075 825 3480**

(cs 56124) (N-1)

## உதவி ஆசிரியர் தேவை

தரம் 6 இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவனுக்கு பாடசாலை நேரத்தில் உதவியாக உதவி ஆசிரியர் தேவை. யாழ் மாநகரசபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
கல்வித்தகைமை A/L

**075 803 4578**

(CS/56127) J-1

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரில் இருந்து நுணாவில் பக்கமாக A9 வீதியை முகப்பாகக் கொண்ட 3 பரப்புக் காணி விலை குறைக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

**T.P. 076 430 1811**

(CR/43187) J-1

## தேவை

**பிரபல தனியார் கல்வி நிறுவனத்திற்கு**

- **சுத்திகரிப்பாளர் - ஆண் தேவை (2).**
- **பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை (2)**

தொடர்புகளுக்கு :-


**074 056 7791**

(CR/43173) J-1

# மரண அறிவித்தல்

## செல்லப்பா தங்கராஜா

**(இளைப்பாறிய எழுதுவினைஞர்)**



யாழ் காழ்வாய் மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், கைதடி கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா தங்கராஜா அவர்கள் கடந்த (03.09.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - மீனாட்சிபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா - நவமணி தம்பதியர் மற்றும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், தர்மினி (கொழும்பு), பிரதீபன் (UK), பிரபாகரன் (UK), பிரகாஷனி (அவுஸ்ரேலியா), ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருளீசன் (கொழும்பு), ராமஜெயம் (UK), நாகலோஜினி (UK), வசீகரன் (அவுஸ்ரேலியா), ஆகியோரின் அன்பு மாமனாரும் லறோசன், சாருகி, மகதி, அனுஷ், கனீஷ், விதுஷ், அஜானி, ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற தங்கரத்தினம் மற்றும் தங்கமணி (கனடா), காலஞ்சென்ற சிவராசா மற்றும் தங்கேஸ்வரி, சண்முகராஜா (அமெரிக்கா), ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (08.09.2024) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கைதடி கிழக்கு ஊற்றல் இந்து மயானத்தில் பூத உடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தோற்றம் 08.06.1940** | **மறைவு 03.09.2024**

**அமுதசுரபி
கைதடி கிழக்கு,
கைதடி.**

**தகவல்:
குடும்பத்தினர்
077 268 1949**

(CS/56120) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.